
கல்கி
26-1-1964
30 காசு
ALKI

கல்கி பொருளடக்கம்

சோபகிருது. தை 13 ★ ஜனவரி 26

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.



பட விளக்கம் 12ம் பக்கம்



மலர் 23 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 26

இதையேனும் செய்யுங்கள்!

ராஜாஜி

குடியரசு தினத்தை ஒட்டி எனக்குத் தோன்றும் சில எண்ணங்களை இங்கு வெளியிடுகிறேன். முக்கியமாக, சென்ற ஆண்டு சீனா நிகழ்த்திய ஆக்கிரமிப்பு இன்று நினைவில் வருகிறது. நம்முடைய சர்க்காரின் அந்நியக் கொள்கையிலுள்ள தவறுதல்கள் எல்லாம் சீனாவின் படையெடுப்பால் வியக்தமாயின. கெட்ட காற்றானாலும் ஒரு நல்ல பயனும் வந்தது என்று நினைத்தோம். ஆனால் அந்த நினைப்பு பொய்யாகிவிட்டது. இன்றைக்கு இந்திய அரசாங்கம், சீன அரசாங்கம் இரண்டுமே நடவடிக்கை எடுக்க முனைந்திருக்கவில்லை. சீனா அநியாயமாகப் பற்றிக்கொண்ட பகுதிகளை நாம் யதார்த்தத்தில் அதன் உடைமையாக ஒப்புக்கொண்டதற்குச் சமானமாகவே காரியங்கள் நடக்கின்றன. எதிரிகளுக்கு இதைவிட அதிகம் வேண்டியதில்லை. பெரிய யுத்தமோ, சிறிய யுத்தமோ எதுவும் மூளுகிற வாய்ப்பு இன்று இல்லை. 'நெருக்கடி நிலைமை' மட்டும் நிரந்தரமாகத் தங்கி விட்டது. டில்லி சிம்மாசனத்தைக் கைப்பற்றியுள்ள கட்சிக்குச் சாதகமாக வளைந்து கொடுக்கும் இன்னொரு ஆயுதமாக 'நெருக்கடி' பயன்பட்டு வருகிறது. அவ்வளவுதான்.

இவ்விஷயமாகச் சர்க்காருக்கு இப்போது எதுவும் சொல்லிப் பயனில்லை. ஆனபடியால் இதை விட்டுவிட்டு வேறு சில முக்கியமான விஷயங்களைக் கவனிப்போம். அவற்றுக்கேனும் டில்லி ஜமீன்தார்கள் செவிசாய்த்து உடனே நடத்திவைத்தால் தேசத்துக்கு நல்லதாகும். இவை அரசியல் விஷயம் அல்ல; நிர்வாக சமாசாரங்களே ஆகும்.

இரண்டாவது உலக யுத்தத்துக்கு முன்னால் ஐ. ஸி. எஸ். அதிகாரிகளின் கீழ் நிர்வாகம் எந்த அளவுக்கு நேர்மையாகவும், திறமையாகவும் இருந்ததோ அந்த அளவுக்கு இன்று நிர்வாகத்தை ஒழுங்கு செய்தோமானால் மக்களின் குறைகளில் முக்கால் பங்கு தீர்ந்து போகும். எந்தக் கட்சி ஆட்சியிலிருந்தாலும் நிர்வாகத்தில் திறமைக் குறைவும், ஒழுங்கீனமும் ஒழிவதற்கு இரண்டு யோசனைகளைக் குடியரசு நன்னாளில் சமர்ப்பிக்கிறேன்.


மத்திய நிர்வாக இயந்திரம் கட்டுக்கோப்பு இல்லாத அமைப்பாகி விட்டது. இது யாவரும் ஒப்புக் கொள்ளும் உண்மை. ஒவ்வொரு மந்திரியின் காரியாலயமும் ஒரு ஜமீன்தாரியாகி விட்டது. மற்ற மந்திரிகளின் இலாகாவுடன் சரியான இணைப்பு இல்லாமல் ஒவ்வொன்றும் போட்டி போட்டுக்கொண்டு பணத்தை விரயமாக்குவதில் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது. யோக்கியமான பலர் என்னிடம், "இரண்டு உயர்தர அதிகாரிகள் கூட ஒற்றுமையாயில்லை; ஒருவரோடு ஒருவர் பேசுவது கூட இல்லை" என்று வருத்தப்பட்டுச் சொல்கிறார்கள். ஒவ்வொரு மந்திரி இலாகாவும் தம் போக்கில் தனித் தனிப் பாட்டையில் போய்க் கொண்டிருக்கின்றன. அரசியலில் சம்பந்தப்படாத நல்லவர்கள் எல்லாரும் இதை ஒப்புக் கொள்கிறார்கள். இதற்குப் பரிகாரம் என்ன?

மத்திய சர்க்காரில் ஒரு பிரதம காரியதரிசி (Chief Secretary) நியமிக்க வேண்டும். மாகாணங்களில் எல்லாம் பிரதம காரியதரிசி ஒருவர் இருக்கிறார். இதே போல் டில்லியிலும் வேண்டும். இப்போதிருக்கும் மந்திரி சபைக் காரிய

தரிசி (Cabinet Secretary) எல்லா இலாகாக்களின் தினசரி வேலை முறைகளையும் இணைத்துப் பரிசீலிக்க அதிகாரம் பெற்றிருக்கவில்லை. இந்த அதிகாரம் பெற்ற பிரதம காரியதரிசி அவசியமாகத் தேவைப்படுகிறார். பிரதம மந்திரியின் பூரண நன்னம்பிக்கையைப் பெற்று, எல்லோருடைய மதிப்பையும் பெறத் தகுந்த ஓர் அநுபவசாலி இப்பதவிக்கு நியமனமாக வேண்டும். மற்ற அதிகாரிகள் தூய்மையும், நீதி உணர்ச்சியும் பெற்று, அரசியல் கட்சிகளுக்கு ஆட்படாமலும், ஒன்றுக்கொன்று இசைவு இல்லாமல் இலாகா மந்திரிகள் சுயலாபத்துக்காகச் செய்யும் காரியங்களுக்கு அடிபணியாமலும் இருப்பதற்குத் தேவையான ஆன்ம பலத்தை உத்தியோகஸ்தர்களுக்குப் பிரதம காரியதரிசி ஊட்ட வேண்டும். அதிகாரிகள் தவறான கொள்கைகளை எதிர்ப்பார்கள் என்று மந்திரிமார்கள் பயப்படும் முறையில் மீண்டும் நமது செக்ரிடேரியட்டுகள் தர்ம பலம் பெற வேண்டும். இவ்வாறு தில்லி செக்ரிடேரியட்டைச் சுதந்திரத்துடனும், அதே சமயத்தில் சர்க்காருக்கு விசுவாசத்துடனும் நடக்கச் செய்யும் மகத்தான திறமை வாய்ந்த அதிகாரிகள் இருக்கிறார்களா என்று சந்தேகப்படலாம். ஒரு சிலர் நிச்சயமாக இருக்கிறார்கள் என்றே சொல்வேன். ஆனபடியால் பிரதம காரியதரிசி ஒருவரை நியமனம் செய்து நிர்வாகத்துக்கு நல்ல ஆரோக்கியம் ஊட்டும் நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

என்னுடைய இரண்டாவது யோசனை: அரசியல் சாஸனம் அளித்த சமவாய்ப்பு உரிமைகளுக்கு மாறாக இன்று பட்சபாதம் செய்ய வசதி தரும் பெர்மிட்—லைசென்ஸ் முதலிய கண்ட்ரோல் முறைகள் அமுலாகி வருகின்றன. இவை பட்சபாதத்துடன் வழங்கப்படாமல் நேர்மையான முறையிலேயே அமுலாவதற்கு அரசியல் கட்சிகள் சார்பில்லாத ஒரு போர்ட் பொறுப்பு ஏற்கவேண்டும். இன்று அரசியல் சாஸனத்தின் அங்கீகாரம் பெற்றுப் பப்ளிக் சர்வீஸ் கமிஷனும், ஆடிட்டர் ஜெனரலும், ஸுப்ரீம் கோர்ட்டும் சுதந்திரத்துடன் செயல்படுவது போல் இந்த போர்டும் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும். கண்ட்ரோல் முறைகளின்கீழ் ஊழலும் லஞ்சமும் பெருகுவதற்கு ஆஸ்பதமாயுள்ள எல்லா நடவடிக்கைகளையும் இந்த போர்ட் கண்காணிக்கவும், பரிசீலிக்கவும், கட்டுப்படுத்தவும் அதிகாரம் பெற்றிருக்க வேண்டும். போர்ட் செவ்வனே செயல்பட்டால் இன்றைக்கு நாம் காண்கிற அதிகார துஷ்பிரயோகங்களில் பெரும்பான்மையானவை விரைவிலேயே குறையும். ஒழுங்கான, நல்ல ஆட்சி நிலவுகிறது என்ற திருப்தி நாட்டில் ஏற்படும். கொள்கைகள் அமுலாகும் போது குறுக்கிட்டுத் தங்களுக்கோ தங்களுக்கு வேண்டியவர்களுக்கோ அதிகாரம் பெற விரும்பும் மந்திரிமார்களும் மற்ற அரசியல்வாதிகளும் இந்தத் தவறான போக்கை விட்டுப் பொது நலனை வளர்ப்பதில் ஈடுபாடு கொள்வார்கள்.

இவ்விரு யோசனைகளும் ஏற்கப்படுமாயின், அரசியல் ரீதியில் என்ன மாறுபாடுகள் நடந்தாலும் நிர்வாகம் நல்ல முறையில் நடந்து வரும். லஞ்ச ஊழலைக் கண்டுபிடித்துத் தண்டிக்க ஏற்பாடுகள் செய்கிறார்கள். நல்ல காரியம் தான். ஆனால் ஊழல் ஏற்படாமல் தடுப்பதுதான் அதைவிடச் சிறந்தது. அதற்கு இந்த யோசனைகள் உதவும். இந்த இரண்டு யோசனைகளுடன் மக்களைக் குறித்த இன்னொன்று சொல்கிறேன். மக்கள் தங்களுடைய திறமைகளையும், கருத்துக்களையும், சேமிப்பையும் சுயமுன்னேற்றத்துக்குத் தாராளமாகப் பயன் செய்து கொள்ளலாம்; கணக்கில் வருகிற வருமானம், வராத வருமானம் இரண்டையும் சுதந்திரமாக முதலீடு செய்யலாம் என்று சந்தேகத்துக்கிடமில்லாமல் சர்க்கார் நிச்சயம் செய்து தர வேண்டும். மக்களுடைய சொத்



சுதந்திரக் கட்சி மகாநாடு

பிப்ரவரி 1, 2 தேதிகளில் பெங்களூரில் சுதந்திரக் கட்சியின் தேசிய சம்மேளனம் நடைபெறப் போகிறது. ஜயபுரியிலும் புவனேசுவரத்திலும் பார்த்த படாடோபங்களை இங்கு நாம் பார்க்க முடியாது. ஏனெனில் காங்கிரஸைப் போல சுதந்திரக் கட்சி முகலாய சிம்மாசனத்தில் வீற்றிருக்கவில்லை. என்றாலும் ஏராளமான மக்கள் கூடுவார்கள். உண்மையான ஜனநாயகத்தைக் காப்பாற்ற வேண்டும்; காங்கிரஸின் ஏகாதிபத்தியப் போக்கைத் தடுக்க வேண்டும் என்று விரும்புகிறவர்கள் பெங்களூரில் கூடுவார்கள்.

காந்தியடிகள் போதித்ததுபோல் மக்கள் சுதந்திரம்தான் சுயராஜ்யம் என்று சுதந்திரக் கட்சி கருதுகிறது. மக்கள் எல்லோரும் சர்க்காரின் அடிமையாகும் காங்கிரஸின் 'ஸோஷலிஸத்தை'ச் சுதந்திரக் கட்சி ஏற்கவில்லை. 1949-ம் ஆண்டு நவம்பர் 26ந் தேதி ஒப்புக்கொள்ளப்பட்ட தேச சாசனமாகிய அரசியல் அமைப்பு அளித்த உரிமைகளைப் பறிகொடுத்து விட்டுக் காங்கிரஸின் 'ஜனநாயக ஸோஷலிஸ'த்தைப் பெறுவதில் சுதந்திரக் கட்சிக்கு நம்பிக்கை இல்லை. தனி மனிதர்களின் உரிமைகளையும் முக்கியத்துவத்தையும் ஊர்ஜிதப்படுத்தின்று அரசியல் சாஸனம். அதற்கு முன்பே தொன்று தொட்டு இந் நாட்டில் நடைமுறையில் இருந்த ஆதார உரிமைகளைச் சிதைக்கும் ஆட்சியைச் சட்ட விரோதமான ஆட்சி என்றே கருதுகிறது சுதந்திரக் கட்சி. அரசியல் சாஸனத்தை மீண்டும் நிலைநாட்டச் சுதந்திரக் கட்சி சக்தி பெறுவதற்குப் பெங்களூர் சம்மேளனம் முழு முயற்சி செய்யும்.

காங்கிரஸின் வசிய மந்திரத்தில் மயங்கியிருக்கும் மக்களுக்கு அவர்களுடைய சுதந்திரங்களை எடுத்துக்காட்டி, அவற்றுக்காக அவர்களை உழைக்கச் செய்யச் சம்மேளனம் முயலும். எல்லா உற்பத்தியாளர்களும், விநியோகஸ்தர்களும் ஒரு பரம்பரை திருட்டு ஜாதி என்றும் அவர்கள் சர்க்கார் கண்காணிப்பில் இருக்க வேண்டியவர்கள் என்றும் ஆளும் கட்சி உண்டாக்கியுள்ள அபிப்பிராயத்தைத் தகர்க்கச் சுதந்திரக் கட்சி மகாநாடு முயலும். சுதந்திரமான போட்டியுடன் தொழில் நடக்கும்போதுதான் மக்கள் தாங்கள் விரும்பும் பண்டங்களை நியாயமான விலைக்கு வாங்கிக்கொள்ள முடியும். இந்த உரிமையை இன்று சர்க்கார் பறித்து விட்டது. தனிப்பட்ட ஏகபோகிகளைவிடக் கொடிய ஏகபோகிகளைச் சர்க்கார் உண்டாக்கியுள்ளது என்பதைப் பெங்களூர் சம்மேளனம் தெளிவு படுத்தும். தொழில்களைச் சர்க்கார் உடைமை யாக்குவதால் தொழிலாளர்கள் அடிமைப் பட்டாளமாவார்கள்; இப்பொழுது தொழிலாளர்கள் கூட்டுச் சேர்ந்து முதலாளிகளிடம் தங்கள் உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளும் சுதந்திரம் இருக்கிறது; ஆனால் சர்க்கார் ஒன்றே எஜமானனாகும்போது இந்தச் சுதந்திரம் அழிந்து போகும் என்பதைப் பெங்களூர் மகாநாடு விளக்கி வைக்கும்.

துக்களைச் சர்க்கார் கைப்பற்றிக் கொள்ளாது என்ற நிச்சயத்தை ஏற்படுத்தித் தர வேண்டும். இப்படிச் செய்தால் மக்கள் சக்தி பொங்கிக் கொண்டு வெளியாகும். பற்பல தொழில்களில் முதலீடு செய்யப்படும். வேலை வாய்ப்புக்கள் ஏராளமாகப் பெருகி நாட்டில் சுபிட்சம் தோன்றும். கிராமத்தில் பட்ட கடனை அடைப்பதற்காகப் பட்டணம் வந்து ஏதாவது வேலை கிடைக்குமா என்று திண்டாடும் பரிதாப மக்களின் கஷ்டம் தீரும். ஒரு சில நகரங்களில் பிரம்மாண்ட ஆலைகள் தோன்றுவதற்குப் பதில் நாடெங்கிலும் சிறிய தொழில் நிறுவனங்கள் ஏற்படும். கணக்கில் வராத 'கறுப்பு'ப் பணமும் தொழில்களில் முதலீடாகும். அவற்றிலிருந்து கிடைக்கும் லாபத்தில் சர்க்காருக்கும் வரி கிடைக்கும். சுருக்கமாகச் சொன்னால், இன்று மனம் ஒடிந்து போயுள்ள நாடு நம்பிக்கை பெற்று மலர்ச்சி அடையும்.

என்ன சேதி?

பஞ்சாயத்தும் ஆரம்பக் கல்வியும்

செங்கல்பட்டு ஆர்க்காடு மாவட்ட ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சங்கத்தினர், சென்னை முதன் மந்திரியைப் பேட்டி கண்டு தங்களைக் கிராமப் பஞ்சாயத்துக்களிலிருந்து விடுவிக்கும்படி முறையிட்டிருக்கிறார்கள். ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழ் இருப்பதால், பள்ளி ஆசிரியர்கள் பலவிதக் கஷ்டங்களுக்கு இலக்காகி வருகின்றனர். ஊழல்கள் மலிகின்றன. காங்கிரஸ் அரசாங்கம், தனது கட்சியைக் கிராம மட்டம்வரை வேர்விட்டுப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற உள் நோக்கோடு பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்படுத்தியது. ஆரம்பப் பள்ளிக்கூடங்களும், ஆசிரியர்களும், மாணவர்களும் பஞ்சாயத்து நிர்வாகத்தின் கீழ் வந்ததிலிருந்து கஷ்ட நஷ்டங்கள் அடைந்து வருகிறார்கள். முதன் மந்திரியாருக்கு அவர்கள் அளித்த மகஜரில் 'ஆரம்பக் கல்வியைப் பஞ்சாயத்துக்களின் பொறுப்பிலிருந்து அகற்றிவிட வேண்டும்' என்று கோரியிருப்பதை மந்திரி அவர்கள் கவனித்துச் சாதகமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விரும்புகிறோம்.

வெளிநாட்டில் நாம்

"இந்தியாவும் சீனாவும் அணு சக்தியை ஆக்க வேலைகளுக்கு உபயோகப்படுத்த ஓர் அணுசக்தி நிலையம் ஏற்படுத்த உடன்படிக்கை செய்து கொண்டுள்ளன."

இதைப் படித்துவிட்டுத் திடுக்கிடுகிறீர்களா? இப்படித்தான் இங்கிலாந்தில் உள்ள நமது வெளி நாட்டுக் காரியாலயம் வெளியிட்ட செய்தி அறிக்கையைப் பார்த்து பிரிட்டிஷார் வியப்பில் ஆழ்ந்திருப்பார்கள்.


இந்தியாவுக்கும் கனடாவுக்கும் இடையே முடிந்துள்ள ஏற்பாட்டைத் தான் இப்படி நமது தூதரகம் வெளியிட்டிருக்கிறது. இது ஓர் அச்சுப் பிழை. இதற்கு ஒரு திருத்தம்கூட வெளியிடவில்லையாம். வெளிநாட்டில் நமது தூதரகங்கள் எப்படி வேலை செய்கின்றன என்பதற்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்?

புத்தக பாங்கி

உயர்தரக் கல்விக்குரிய பாடப் புத்தகங்களின் விலை எப்போதுமே மிக

ஊர் வம்பு

PK



அதிகம்தான். ஏனெனில் அவற்றின் தயாரிப்பு அவ்வளவு சிரம சாத்தியமானது. புத்தகங்களின் விலை அதிகமாக இருப்பதால் ஏழை மாணவர்கள் அவற்றைப் பணம் கொடுத்து வாங்கிப் படிக்க வசதியின்றிக் கஷ்டப்படுவது நம் நாட்டில் சாதாரணமாகப் பார்க்கும் காட்சி. இதற்குப் பரிகாரமாகப் பங்களூரில் ராமநாராயண் செல்லாராம் குடும்ப தர்ம ஸ்தாபனத்தார் ஏழை மாணவர்களுக்கு உயர்தரப் பாடப் புத்தகங்கள் வழங்க ஒரு பாங்கி தொடங்கி யிருக்கிறார்கள்.

இம்முறையை ஒவ்வொரு நகரத்திலுமுள்ள செல்வந்தர்கள் கடைப்பிடித்தால், பொறி இயல், வைத்தியக் கல்லூரி ஏழை மாணவர்கள் மிகவும் நன்றி செலுத்துவார்கள். லட்சக் கணக்கில் ரூபாய் வழங்கி கல்லூரிகளைத் தொடங்கி வைக்கும் நம் நாட்டுத் தனிகர்கள் இந்தக் கைங்கர்யம் செய்யத் தயங்கமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

அசோக மேத்தாவின் எச்சரிக்கை

பிரபல சோஷலிஸ்டுத் தலைவரான அசோக மேத்தா, நம் நாட்டில் எதையும் சர்க்கார் உடைமையாக்கிவிட வேண்டும் என்று கூறும் தீவிர காங்கிரஸ் சோஷலிஸ்டுகளுக்குப் பர்மாவையும், இந்தோனேசியாவையும் பார்த்துத் தங்கள் தீவிரத்தைத் தணித்துக் கொள்ளும்படி யோசனை கூறியிருக்கிறார்.

சோஷலிஸக் கொள்கையில் மிக முக்கியமான அம்சம் தனியார் நடத்தும் தொழில்களைச் சர்க்கார் உடைமையாக்குவது. பர்மாவும், இந்தோனேசியாவும் தாங்கள் தீவிரமாக சோஷலிஸக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் நாடுகள் என்று உலகுக்குக் காட்டப் பல தொழில்களைத் தேச உடைமையாக்கின. ஆனால் அங்கு பொருளாதார சுபிட்சம் ஏற்படவில்லை. அதற்கு மாறாக, பொருளாதார நிலை மிக நெருக்கடியான கட்டத்தில் இருப்பதைக் கவனிக்கும்படி அசோக மேத்தா கூறுகிறார்.

அசோக மேத்தா சோஷலிஸக் கொள்கையினராயிருப்பினும் அது எப்படித் தோல்வி அடைந்து வருகிறது என்பதைத் தாம் பார்ப்பதோடன்றி மற்றவர்களைப் பார்த்து எச்சரிக்கையாக இருக்கும்படி சொன்னதற்கு நன்றி செலுத்துகிறோம்.

போகிற போக்கில்

ரைஸ்மில்கள் முதலிய முக்கியமான தொழில்களைத் தேசியமாக்குவது என்ற நல்ல பெயரில் சர்க்கார் உடைமையாக்க வேண்டும் எனப் புவனேசுவர மகாநாடு தீர்மானம் போட்டிருக்கும் இந்த நேரத்தில் பல ருசிகரமான செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. பிரிட்டனைச் சேர்ந்த தொழிற் கட்சித் தலைவர் திரு வில்சன் 'தேசியமயமாக்குவது நாகரிகமல்ல, தனிப்பட்டவர்கள் தொழில்களை நடத்துவதுதான் லாபம் தரக்கூடியதாக இருக்கிறது' எனப் பேசியிருக்கிறார்.

ஃ ஃ ஃ

ரஷ்யாவிலிருந்தும் செய்தி வந்திருக்கிறது. சர்க்காரின் உடைமையாக விளங்கும் பண்ணைகளில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் ஆண்டு ஒன்றுக்கு ஏழு டன் உணவு தானியம் விளைகிறதாம். அதேயளவு பிராந்தியத்தில் தனிப்பட்ட விவசாயி தனது சொந்த நிலம் என்ற அடிப்படையில் பாடுபட்டால் பதினொன்றரை டன் கிடைக்கிறதாம். அரசாங்க உடைமை என்னும்போது உற்பத்தி குறுங்குவதும், தனி உடைமை என்னும்போது உற்பத்தி பெருகுவதும் என்ன விந்தை என அங்குள்ளவர்கள் பூதக்கண்ணாடியின் துணை கொண்டு ஆராய்கிறார்களாம். பூமாதேவி கூட இப்படிப் பாரபட்சம் காட்டலாமா என அங்குள்ளவர்கள் விசனப்படுகிறார்கள்.

புவனேசுவரப் பெரியார்களோ மாஸ்கோ மாகாத்மிய தீர்மானத்தைப் பாடுகிறார்கள்.

ஃ ஃ ஃ

புவனேசுவர மகாநாடு தமிழர்களுக்கும் பல வழிகளில் பெருமை தேடித் தந்தது. முதற் பெருமை, அதன் அக்கிராசனர் தமிழராய் இருந்தது; இரண்டாவது அவர் தமிழில் உரையாற்றியது. மூன்றாவது பெருமை, அங்கு தமிழ் நாட்டின் தனிப் பெரும் பலகாரமாகிய இட்டிலி பரிமாறப்பட்டது. மகிழ்ச்சி தரும் நாலாவது விஷயம் இட்டிலிக்கு மேல் தமிழ்நாட்டுச் சாம்பாரே ஊற்றப்பட்டது. 'ஒருமைப்பாடு சாம்பார்' என்று அதற்குப் பெயர் வைத்தார்களாம்!

ஃ ஃ ஃ

ஜனநாயக சோஷலிஸம் என்ற முக்கியமான தீர்மானம் காங்கிரஸ் மகாசபையில் கடைசி நாளன்று பிரேரிக்கப்பட்டதாம். இதை மூன்மொழிந்து திரு. ஏ. பி. ஜெயினும், திரு ஸம்பள்ளனும் முறையே ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் பேசி யிருக்கிறார்கள். அப்போது சபையில் இருந்தவர்கள் என்ன நினைத்தோ 'விருட்' என்று எழுந்து வெளியே வந்து விட்டார்களாம். இப்படியாகக் காலி மைதானத்தில் காங்கிரஸ் கனஜோராக ஜனநாயக சோஷலிஸத் தீர்மானத்தை நிறைவேற்றி யிருக்கிறது.

— சிட்டுக்குருவி



முதல் மூவர்

ராஜாஜி-சோமு

42

திருவேங்கடமலையின் அழகையும் வளத்தையும் பாடுகிருர் ஆழ்வார்:

முடிந்த பொழுதில்
குறவாணர்

[குறவாணர் —குறிஞ்சி நிலத்து மக்கள்.]

'மூடிந்தபொழுதில்' என்றதன் கருத்து என்னவென்ருல், மலைக்காட்டில் வாசம் செய்யும் மக்கள் மருத நிலத்தில் வாழும் உழவர்களைப்போல் விவசாயம் செய்வதில்லை. அவர்கள் முறையே வேறு! ஏருழக்கூடாத இடங்களில் எல்லாம் பன்றிகள் கிழங்குகளைத் தோண்டி நிலத்தை விதை விதைப் பதற்கு ஏற்பப் பண்படுத்தி விடுகின்றன. சமயம் கிடைத்தபொழுது குறவர்கள் அந்த நிலத்தில் தினையை விதைக்கிருர்கள். பயிர் செழிப்பாக வளர்ந்து, வானளாவியது போல் வளர்ந்து கதிர் தரும்.

முடிந்த பொழுதில்
குறவாணர், ஏனம்
படிந்து உழுசால் பைந்தினைகள்
வித்த —

[ஏனம் படிந்து உழுசால்-பன்றிகள் தோண்டிய பாழிகளில், பைந்தினைகள் வித்த - நல்ல தினைகளை விதைப்ப.]

— தடிந்தெழுந்த
வேய்ங்கழைபோய் விண்திறக்கும்
வேங்கடமே

[தடிந்தெழுந்த - வெட்டி வீழ்த்திய பின்னும் மறுபடியும் துளிர்த்து எழுந்த. வேய்ங்கழைபோய் - மூங்கிற் கழையானது வளர்ந்து சென்று. விண் திறக்கும் வேங்கடமே - ஆகாசத்தை முட்டித் திறக்கும்படியான வேங்கட மலையானது.]

மேலொருநாள்
தீங்குழல்வாய் வைத்தான்
சிலம்பு

[மேலொருநாள் - முன்னொரு காலத்தில். தீங்குழல்-இனிய புல்லாங்குழலை. வாய் வைத்தான் சிலம்பு - உதட்டில் பொருத்தி இசை பொழிந்த கண்ணபெருமானுடைய மலையாகும். சிலம்பு - மலை.]

மலைப்பாங்கான அந்த நிலத்தின் வளம் அத்தனை சிறப்பானது. குறவர்கள் பன்றிகள் தோண்டிப்போட்ட பாழிகளிலே தினையை விதைக்கிருர்கள். அந்தத் தினைப் பயிருக்கு மத்தியில் வெட்டி வீழ்த்தப்பட்ட மூங்கில் மறுபடியும் துளிர்த்து எழுந்து வளர்ந்து விண்ணை முட்டுகிறது. விண் வாசலையே திறக்கிறது என்கிருர் ஆழ்வார். அப்படிப்பட்ட வளமான வேங்கடமலைதான் அதிகமான சரீரப் பிரயாசையின்றி, பக்தர்களுக்குச் சுவர்க்க வாசலைத் திறக்கும் எம்பெருமானுடைய மலை என்பது தொனிப் பொருள்.

முடிந்த பொழுதில்
குறவாணர், ஏனம்
படிந்துழுசால் பைந்தினைகள்
வித்தத் — தடிந்தெழுந்த
வேய்ங்கழைபோய் விண்திறக்கும்
வேங்கடமே மேலொருநாள்
தீங்குழல்வாய் வைத்தான்
சிலம்பு.

கர்னல் ரே ஜான்ஸன் ஒரு ஐ. எம். எஸ். உத்தியோகஸ்தர். பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் ராணுவத்துக்காக வைத்திய சேவை செய்த ஐ. எம். எஸ்.காரர்கள் பிற்காலத்தில் ராணுவ சேவையை விட்டு, நாட்டின் சுகாதார அதிகாரிகளாகவும், ஜில்லா ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களாகவும் வேலைக்கு அமர்ந்தார்கள். இவர்களில் நல்ல சேவை உணர்ச்சியுடன் சிறப்பாகத் தொழில் செய்தவர்கள் உண்டு. வறட்டுக் கர்வக்காரர்களும் உண்டு.

கர்னல் ரே ஜான்ஸன் சேலத்தில் ஜில்லா வைத்திய அதிகாரியா யிருந்தார்.*

அவர் வைத்தியத் தொழிலில் பேர் எடுக்கா விட்டாலும் மிகவும் நல்ல மனிதர்.

''வழக்கம் போலத்தான் இன்று மாலையும் தம்முடைய நண்பர்களான சாலை மரங்களைப் பார்த்து வரப் போனார். ஏனோ இன்னும் திரும்பக் காணோம். ஏதோ முக்கிய காரணம் இருந்துதான் காலதாமதம் ஆயிருக்க வேண்டும் என்றாள் டாக்டரின் மனைவி அம்மை. ''அவர் வருகிற மட்டும் நீங்கள் காத்திருக்கிறீர்களா? இல்லாவிடில், நீங்கள் குறித்த காலத்தில் வந்தும் அவரைப் பார்க்க முடியாமல் திரும்பி விட்டீர்கள் என்று சொல்லவா?'' என்றாள்.

''நான் காத்துக் கொண்டிருப்பதற்கில்லை. ஜான்ஸனுக்குப் பிரமோஷனாகியிருப்பதில் எனக்கு மெத்த மகிழ்ச்சி என்று சொல்லுங்கள். அதைத் தெரிவித்து, உங்கள் இருவரையும் பாராட்டிப் போகவே வந்தேன்'' என்றேன்.

''மிகவும் நன்றி. பிரமோஷனில் விசேஷம் எதுவும் இல்லை. லெப்டினன்ட் கர்னல்கள் எல்லோருமே காலக்கிரமத்தில் கர்னலாவது வழக்கம்தான். நீங்கள் வந்து போனதாக நான் அவருக்குச் சொல்லி விடுகிறேன்'' என்றாள் ஸ்ரீமதி ஜான்ஸன் அம்மை.

❀ ❀ ❀

டாக்டர் ஜான்ஸன் மாலை வேளைகளில் உலாவப்



* இது கதை. சுயசரிதமல்ல.

போகும்போது சாலை ஓரத்திலுள்ள மரங்களுடன் சம்பாஷிப்பது அவருடைய வழக்கம். மரங்களின் அருகே நெருக்கமாகக் குனிந்து அவற்றை முத்தமிடுவார். அன்பான ரகசிய வார்த்தைகளைப் பேசுவார். இது பார்க்க விசித்திரமாக இருக்கும்; மிகவும் ரம்மியமாகவும் இருக்கும். இப்படி அவர் அன்பு செலுத்துவதைப் பிறர் பார்ப்பதாகத் தெரிந்தால் அவர் லஜ்ஜை கொள்வார். அவருடைய அன்பு வெளிப்படுவதைக் குலைக்க யாரும் விரும்ப மாட்டார்கள். தூரத்திலிருந்தே கவனித்தால் 'இந்தப் போக்கிரி உலகத்தில் இப்படியும் ஒரு அழகா?' என்ற ஆனந்தம் உண்டாகும்.

ஃ ஃ ஃ

நான் அவரைப் பார்க்கப்போன நாள் கர்னல் ஜான்ஸனுக்கு ஒரு 'கெட்ட' நாள் என்று பிற்பாடு அறிந்தேன். அவருடைய மர நண்பர்களிலொன்று வெட்டப்பட்டு விட்டது! பாவம், ரணமுண்ட ஒரு பெரிய வீரனைப் போல் அன்று அது முழு நீளமும் பூமியில் விழுந்து கிடந்ததாம்!

''எவ்வளவு உயரமாக வளர்ந்திருந்தாள் என் தங்கை! அவளை வெட்டி விட்டார்கள்'' என்று மறுமுறை கண்டபோது துக்கித்தார் டாக்டர் ஜான்ஸன்.

துரதிருஷ்டவசமாக அந்த மரம் ஜில்லா போர்டு ஆபீஸுக் கட்டடத்துக்கு மிகவும் அருகில் இருந்தது. அதன் வேரை வளர விட்டால் ஆபீஸின் அஸ்திவாரத்தைப் பிளந்து விடும் என்று என்ஜினீயர்கள் கருதினார்களாம்.

''மரம் கட்டடத்துக்கு மிகவும் அருகில் இருந்தது என்கிறார்கள். அவ்வளவு அருகில் கட்டடம் கட்டும்படி அவர்களிடம் யார் சொன்னார்கள்? இந்த மரம் அங்கு நாற்பது வருஷங்களாக வளர்ந்து வந்திருக்கிறது. இந்தப் புது பவிஷுக் கட்டடம் போன வருஷம்தானே முளைத்தது?'' என்றார் கர்னல். சொல்லும்போது அவருடைய கண்களில் நீர் நிறைந்தது.

''இந்தச் சிறிய விஷயத்தை வைத்துக்கொண்டு பிரமாதப்படுத்தப் பார்க்கிறார்'' என்றாள் டாக்டரின் மனைவி. ''இப்போது பேசுவதில் பயன் என்ன? மரத்தை எப்படியும் வெட்டியாச்சு. ரேயின் மனோ பாவத்துடன் யார் இந்த விஷயத்தைப் பார்க்கப் போகிறார்கள்?'' என்றாள்.

''வாஸ்தவம்!'' என்றேன்.

ஃ ஃ ஃ

''இருக்கட்டும். ஆனபோதிலும் தவறு ஒன்று நடந்து, அது தவறு என்று நீங்கள் உணர்ந்த பின்னும் உங்களுடைய கொதிப்பை அடக்குவதும், எதிர்ப்பை அமுக்குவதும் நிச்சயமாக.... நிச்சயமாக...... தீமையை வளரச் செய்யும். நாகரிகமும், மனிதத் தன்மையும் வேண்டுமானால் மனத்தில் உண்டாகும் கொதிப்பை அடக்கி விடாமல் நியாயமான ஆட்சேபணையை வெளிப்படுத்த வேண்டும்'' என்றார் கர்னல்.

மரத்தின் முறையீடு



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

ரொம்பவும் நாசூக்கான விஷயம். உலகத்தார் பார்க்கும் கோணத்திலேயே தம்மையும் பார்க்கச் சொல்வதை ரே ஜான்ஸன் தீவிரமாக எதிர்த்தார். இதில் தர்மசங்கடம் என்னவென்றால், அவர் பக்கமே நியாயம் இருந்தது! அந்தக் காலத்து அதிகார வர்க்கத்

தினரில் இப்படியும் சிலர் இருந்தார்கள். கர்னல் ரேக்கு ஒரே ஒரு பிள்ளைதான். பல வருஷங்களுக்குப் பின்னால், ஜப்பானியரை எதிர்த்துப் பர்மாவில் யுத்தத்தில் போராடியபோது அவன் உயிர் நீத்தான்.

ஃ . ஃ ஃ

கர்னல் அவர்கள் மரங்களைப் பற்றிக் கொண்டிருந்த உணர்ச்சி என் நெஞ்சில் ஆழப் பதிந்தது. ஹிந்து மதத்தில் பிறந்த எவருக்குமே வெகு எளிதாகப் புரிகிற விஷயம் அது. நம்மைப் போலவே மரங்களுக்கும் உயிரும் ஆன்மாவும் உண்டு; நம்மைப்போலவே அவற்றின் ஜன்மமும் என்பது நம் மதம்.

மறு நாள் பின் மாலை நேரம் மட்டும் ஊளப்பில் பொழுது போக்கினேன். அந்த மரம் இருந்த இடம் என்னை இழுத்தது. அங்கு போனேன்.

அரச மரம் ராமாஸ்திரம் பட்டு விழுந்த வாலியைப் போலக் கீழே கிடந்தது. அதன் கிளைகளில் ஒன்றின் மேல் உட்கார்ந்து கொண்டேன். சிந்தனையில் ஆழ்ந்தேன். 'மரத்துக்கு ஒரே ஓர் ஆன்மாவா? அல்லது ஒவ்வொரு கிளைக்கும் தனியாக உயிருண்டா? பல உயிர்கள் சேர்ந்த பெரும் குடும்பமா இந்த அரச மரம்? அல்லது குடும்பத்தையும் விடப் பெரிதான ஒரு நகரமா இம்மரம்? இதிலுள்ள ஒவ்வொரு பூவுக்குமே ஓர் ஆன்மா இருக்குமோ?'

இப்படி மூட யோசனைகளில் நான் மூழ்கிக் கொண்டிருக்கும் போது மிருதுவான வேணுகானம் கேட்டது. 'இது என்ன ஒலி?' என்று நான் எண்ணியவுடன் குழலோசை மறைந்தது. அந்த எண்ணத்தை விட்டு நான் அரச மரத்தையும், கர்னல் ஜான்ஸனையும் பற்றி மனத்தைத் திருப்பியவுடன் மீண்டும் குழலிசை கேட்டது. சாகித்தியமில்லா விடினும் குழலின் கீதம் சோக கீதமாக இருந்தது.

"மரத்தின் உயிர் பாடுகிறது. சந்தேகமே யில்லை" என்று எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

அன்று இரவு ஒரு விநோதக் கனவு கண்டேன். கனவுகளெல்லாமே விநோதம்தான். ஆனால் இது ரொம்பவும் விநோதமா யிருந்தது.

"இதைக் கனவென்று எண்ணாதே" என்றது விருட்சம். "நீ என்னைப் பார்க்க முடியாது. ஆனாலும் நான் இங்கேயேதான் இருக்கிறேன். என் குரல் உனக்குத் தெளிவாகக் கேட்கிறதல்லவா?" என்று கேட்டது.

"ஓ. கேட்கிறது! மேலே சொல்" என்றேன்.

"இதோ நான் கொலை செய்யப் பட்டிருக்கிறேன். கூலிக்காரர்கள், 'பச்சை மரத்தை வெட்டினால் பாவம், மாட்டோம்' என்றுதான் மறுத்தார்கள். மூன்று மடங்கு கூலி கொடுத்து அவர்களை மசிய வைத்து என்னை வெட்டிப் போட்டார்கள். என் சார்பில் நீ வாதாட வேண்டும் என்று விரும்புகிறேன். என் டாக்டர் அண்ணா சர்க்கார் உத்தியோகம் பார்ப்பதால் எதுவும் செய்ய முடியவில்லை. நீ வக்கீல், சுதந்திரமுள்ளவன்" என்றது மரம்.

"நான் என்ன செய்ய முடியும்? ஜட்ஜ் இந்த வழக்கை எடுத்துக்கொள்ள மாட்டாரே!" என்றேன் நான்.

பார்த்தீர்களா! பரிதாப மரத்தின் போக்கிலேயே நானும் கூடச் சென்றேன். சொப்பனங்களில் இதுபோல் நடைபெறுவது சகஜம்.

"முட்டாள்தனம். எல்லா வழக்குகளையும் விசாரிக்கும் ஒரு ஜட்ஜ் இருக்கிறானே! மறந்துபோனாயா? நீ நாஸ்திகனா என்ன?" என்று கேட்டது அரசமரம்.

"சரி, உன் விவகாரத்தை நான் கவனிக்கிறேன். பத்திரிகைகளுக்கெல்லாம் எழுதுகிறேன்" என்றேன் நான்.

"அப்படியே செய்வாய்" என்ற மரம் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தது:

"ஒரு காலத்தில் நான் இளம் அகவத்தக் கன்றாக இருந்தேன். தங்க ஜரிகை போட்ட சிவப்புத் தலைப்பாகை வைத்துக் கொண்டு சுப்பய்யர் என்று ஒரு பெரிய மனிதர் அப்போது ஹுஜூர் சிரஸ்ததாராக இருந்தார். அவருடைய

விடுதலைக்கு உழைத்த வீரர்

இந்தியாவை அன்று ஆண்டு வந்த ஆங்கிலேய அரசாங்கத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு ஜெர்மனிக்குத் தப்பி ஓடியபோது, இந்தியாவின் விடுதலைக்காக அங்கே ஒரு பட்டாளத்தைச் சேகரிக்க வேண்டும் என்ற எண்ணமே இருக்கவில்லை சுபாஷ் பாபுவுக்கு. பிரிட்டிஷாரின் சார்பாகப் போராடி ஜெர்மானியரால் கைது செய்யப்பட்ட இந்தியச் சிப்பாய்களுள் சிலர் பெர்லினுக்கு அழைத்து வரப்பட்டார்கள். பி. பி.ஸி. நிலையம் ஹிந்துஸ்தானியில் ஒலிபரப்பிய செய்திகளை மொழி பெயர்க்குமாறு அவர்கள் நிர்ப்பந்திக்கப் பட்டார்கள். இந்த ராணுவக் கைதிகளைப் பார்த்ததும் சுபாஷ்பாபுவுக்குச் சட்டென்று இந்திய ராணுவக் கைதிகளை ஒன்று சேர்த்து விடுதலைப் பட்டாளம் அமைக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. ஜெர்மனியிலிருந்து சிங்கப்பூருக்குக் கிளம்பு முன்

மனைவி எனக்குச் சந்தனம் பூசி, குங்குமம் இடுவாள். அவளுடைய பிள்ளைக்கு நோவு சொஸ்தமாக வேண்டுமென்று என்னிடம் வேண்டிக் கொண்டு இப்படிப் பூஜை செய்வாள். அவன் வாரக் கணக்கில் விஷ ஜுரத்தில் படுத்திருந்தான். அடிக்கடி நினைவு கூடத் தப்பி விடும். ஐந்து வாரம் கழித்துக் கடைசியில் சொஸ்தமாகி எழுந்தான். அப்போது சுப்பய்யரே என்னிடம் வந்தார். என்னைச் சுற்றிலும் ஏழைகளை உட்கார வைத்து அன்னதானம் செய்தார். அவர்கள் ஆரவாரம் செய்து கொண்டு உண்டு மகிழ்ந்தார்கள். அதெல்லாம் மகத்தான காலம். இப்போதோ என்னைக் கொலை செய்து போட்டார்கள். நீயும் என்னைக் கைவிடுவாயா?''

நான் விழித்துக் கொண்டேன்.

வளர்ந்த மரங்களை வெட்டுகிற மடமையைக் கண்டித்துப் பத்திரிகையில் காரசாரமாகக் கடிதம் எழுதத் தீர்மானித்தேன்.

என்னுடைய கடிதம் ''மதராஸ் மெயிலி''ல் பிரசுரமாயிற்று. சேலம் வக்கீல் சங்கத்தில் எல்லோரும் இதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டார்கள். தலைவருக்குக் கோபமே வந்து விட்டது.

''ஏன், ஐயா, நாங்களெல்லோரும் 'ஹோம் ரூல்' இயக்கத்தில் கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறோம். நீர் ஏதோ மரத்தை வெட்டுகிற சமாசாரத்தைப் பெரிதாக எழுதுகிறீரே! இது சிறு பிள்ளைத்தனம். உமக்குப் பாகுபாடு செய்து பார்க்கிற விவேகம் இல்லை?'' என்று என்னைக் கடிந்து கொண்டார்.

நான் செய்தது குற்றம் என்று ஒப்புக் கொண்டேன். குற்றப் பொறுப்பைத் தணிக்கிற முறையில், ''அந்த விஷயமாக எனக்குத் தீவிர உணர்ச்சி ஏற்பட்டது. அதனால்தான் எழுதினேன்'' என்று சொன்னேன்.

கனவைப் பற்றிச் சொல்லவில்லை. சொன்னால் சிரிப்பார்கள்; ஜீரணக் கோளாறு என்பார்கள்!

''இதோ லாலா லஜபதி ராயை நாடு கடத்தியிருக்கிறார்கள். மாண்டலேவுக்கோ, எங்கேயென்றே தெரியாத ஏதோ ஓரிடத்துக்கோ அவரைத் தேசத்திலிருந்து வெளியேற்றிக் கைதியாக வைத்திருக்கிறார்கள். நீரானால் சாலை ஓரத்து மரத்தை வெட்டியதற்காக உணர்ச்சி வசப்பட்டதாகச் சொல்கிறீர்!'' என்று சினத்துடன் என்னைத் தாக்கி விட்டு எழுந்திருந்தே போய் விட்டார். அவர் வக்கீல் சங்கத் தலைவர். என்னைத் திருத்த முடியும் என்பதில் அவருக்கு நம்பிக்கை போய் விட்டதால் நாங்கள் பேசிக்கொண்டிருந்த இடத்தை விட்டே வெளியே போய் விட்டார்.

அவை மகத்தான நாட்கள்! அப்போது நடைபெற்ற எல்லா இயக்கங்களிலும் நான் பங்கு கொண்டேன். அதுவெல்லாம் இப்போது வெறும் நினைவு. அதில் ஒன்று அரச மரத்தைப் பற்றி நான் பத்திரிகைக்கு எழுதியது. அப்போதும் இப்போதுமே நான் அதைப் பற்றி வெட்கம் கொள்ளவில்லை. நான் என் வாழ்நாளில் செய்த வெகு சில நல்ல காரியங்களில் இது ஒன்று என்று மதிக்கிறேன்.

ளர் தமது பட்டாளத்தினரிடம் சில நிமிஷங்கள் பேச நினைத்தார் நேதாஜி. மூவாயிரத்து ஐந்நூறு பேர் இருந்து அவர் சொற்பொழிவைக் கேட்கக் கூடிய வசதியான கூடம் ஏதும் அந்த ஊரில் இல்லை. திறந்த வெளியில் தான் பொதுக் கூட்டம் ஏற்பாடாயிற்று. அப்போது கடுமையான குளிர் காலம். அதற்கேற்ற உடைகளைத் துருப்பினர் அணிந்திருந்தனர். என்றாலும் இரத்தம் உறைகிற குளிரில் நேதாஜி பேசப் போகிற இருபது நிமிஷமும் அசையாது நிற்பதென்றால் அது அசுர சாதனைதான்! சொற்பொழிவின் இறுதியில் சிப்பாய்கள் ''இன்குலாப், ஜிந்தாபாத்! ஆஸாத் ஹிந்த், ஜிந்தாபாத்!'' என்று முழக்கியபோதுதான் ஒருவர் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். நேதாஜி இரண்டே கால் மணிநேரம் பேசியிருந்தார். அவர் பேசத் தொடங்கு முன்னரே அங்கு ஆஜராகி விருந்த சிப்பாய்கள் இரண்டே முக்கால் மணி நேரம் சிலையாக நின்றிருந்தார்கள்.



ஜெர்மனியிலிருந்த போது நமது நாட்டின் தேசிய கீதமாக நேதாஜி தேர்ந்தெடுத்த ''ஜனகணமன'' வையே பாரதம் சுதந்திரம் பெற்ற பிறகும் தேசிய கீதமாக இருத்திக் கொண்ட போதே நாம் நமது முதல் மரியாதையை அந்த வீரத் தலைவருக்குத் தெரிவித்து விட்டோம். இப்போது ஜனவரி 23-ந் தேதி அவரது அறுபத்தி ஏழாவது ஜன்ம தினத்தை யொட்டி இரண்டு தபால் தலைகளை வெளியிடுவதன் மூலம் நமது அஞ்சலிகளை மீண்டும் ஒரு முறை அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கனவில் தேவியைக் கண்டு பூஜித்த நாதனை எங்கும் காணச் சாரதையால் முடிந்தது. மற்றவர்களுக்குத் தேறுதல் கூறினாள். ஆனால் நாதனிழந்த வீடு போல, நாதமிழந்த வீணை போலவே உணர்ந்தனர் சிஷ்யர்கள்.


அவர்களுக்கு நாதனாக, ஆத்மநாதமாக விளங்க முன் வந்தார் நரேந்திரர்.

நேற்று மட்டும் தலைமை தாங்கத் தயங்கினார். இப்போது நிச்சயமாகத் தலைமை தாங்க வேண்டிய அவசியம் வந்து விட்டது. பரமஹம்ஸர் வாழ்ந்ததும், உபதேசித்ததும் கனவாக மறைந்து விடக் கூடாது; ஸ்ரீராமன் வாழ்ந்தபடியும், ஸ்ரீ கிருஷ்ணன் உபதேசித்தபடியும் ஒருவர் நடக்கவேண்டுமெனில், இங்கோ ஸ்ரீ ராமகிருஷ்ணராக வந்த இவர் வாழ்ந்தது, உபதேசித்தது இரண்டின்படியும் நடக்க உலகத்தினரைப் பயிலுவிக்க வேண்டும்; அப்படிப் பயிலுவிக்கும் பொறுப்பை ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிஷ்யர்கள்தான் ஒன்றுகூடி ஏற்கவேண்டும்; 'தம்மையடைந்த பிரம்மசாரிகள் மீண்டும் தத்தம் வீட்டுக்குத் திரும்பி விடக் கூடாது; தாம் வாழ்ந்த சமய வாழ்வை அவர்கள் பாருக்கெல்லாம் பரப்ப வேண்டும்' என்பதுதான் குருநாதரின் திரு உள்ளக் கிடக்கை என்பதை நரேந்திரர் அறிந்திருந்தார். எனவே, அவர்களை ஆத்மிகத்தில் ஊன்றச் செய்ய உறுதி பூண்டார். பரமஹம்ஸர் உவந்து அளித்ததும், மற்றச் சீடர்கள் உவந்து ஒப்புக் கொண்டதுமான தலைமையைத் தாமும் உவந்து ஏற்றார் நரேந்திரர். 'புவிமிசைத் தலைமையாய்து' ஸ்வாமி விவேகாநந்தராக நரேந்திரர் பரிணமித்ததற்கு இதுவே முதற் படியாகும்.

குருநாதனை இழந்து தவித்த சீடர்களும் மெல்ல மெல்ல அவர் நரேந்திரரிலேயே வாழ்கிறார் என்பதை உணர்ந்து கொள்ளலாயினர்.

ராமகிருஷ்ண தேவருடைய அஸ்திகளின் ஒரு பகுதியைக் குருநாதரின் கிருஹஸ்த சிஷ்யர்கள் பெற்று காங்குரகாச்சி என்ற இடத்தில் பூமிக்கு இட்டுப் பின்னர் அங்கோர் ஆலயமும் எழுப்பினர். அஸ்திகளின் சில பகுதிகள் ஹரித்துவாரம் முதலிய புண்ணிய க்ஷேத்திரங்களுக்கு அனுப்பப்பட்டுப் புனித கங்கையில் கரைக்கப்பட்டன. எஞ்சிய அஸ்தியைத் தங்கள் ஆஸ்தியாகக் கருதிப் பூஜித்து வந்தனர் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் அருமையான பிரம்மசாரி சிஷ்யர்கள்.

பரமஹம்ஸர் மறைந்த சில நாட்களுக்குப் பின் அன்னை சாரதை பிருந்தாவனத்துக்கு யாத்திரை புறப்பட்டான். முப்பத்திரண்டு வயதிலேயே ஞானத்தின் முடியினைத் தொட்டு விட்டான் அவள். தன் உடலைப் பூஜித்த பதியின் உடற்துகள்களைச் சாந்தியுடன் பூஜித்தான். உடல் உறவு என்பது இப்படி ஓர் அசாதாரணமான சம்



பந்தமாக இந்தத் தெய்விகத் தம்பதியரிடம் புனிதம் பெற்றது.

சோதனை போல நரேந்திரருக்குக் குடும்பப் பிரச்னை தீரவேயில்லை. அவரது வீட்டுக்குப் பாத்தியதை கோரி நடந்த வழக்கு இன்னும் தீர்ந்தபாடாக இல்லை. நரேந்திரர் அடிக்கடி நீதி மன்ற விசாரணைக்குச் சென்று வர வேண்டியதாயிற்று. சட்டப் படிப்புப் பாதியில் நின்றது. எல்லோருக்கும் வழி காட்டியாக இருக்க வேண்டிய நரேந்திரர் பூரண சந்நியாச வாழ்க்கையை அநுசரிக்க முடியவில்லை. 'வீட்டுக்கு ஏற்பாடு செய்; அப்புறம் அநுபவம் எல்லாம் பெறுவாய்' என்று குருநாதர் கூறியிருந்ததை நினைந்து நினைந்தே மன ஆறுதல் பெற்று வந்தார் அவர்.

தம் கதை எப்படியானாலும் மற்றப் பிள்ளைகளை சந்நியாச தர்மத்தில் நிலை நிறுத்த உறுதி பூண்டார் அவர். இந்த உறுதியைத் தகர்க்கக் கூடிய பல சோதனைகள் நேரிட்டன. சில இளைஞர்களின் உறவினர்கள் காஸிப்பூருக்குவந்து அவர்களை மீட்க முயன்றனர். அவர்களிடம் வாதிடுவது நரேந்திரருக்குப் பெருத்த சிரமமாகி விட்டது. அவர்களுடைய உள்ளமுருக்கும் வேண்டுகோளையும், அன்பான கண்ணீரையும், இவை பலனளிக்காத போது அவர்கள் வைத வசவுகளையும், வெகுண்டு அக்கறுத்தியதையும் தாங்குவது நரேந்திரருக்குப் பெரும் பாடாகி விட்டது.

இன்னொரு பிரச்னையும் இருந்தது. சிஷ்யப் பிள்ளைகளை வைத்துப் பராமரிக்கப் பொருள் வேண்டாமா? உண்ண உணவும், உடுக்க உடையுமின்றிப் பரிதவிக்கும் வாழ்க்கையை அவர்கள் எவ்வளவு காலம் சகித்துக்கொள்வார்கள்? இந்தக் கஷ்டம் காரணமாகவே அவர்கள் தத்தம் இல்லத்துக்குத் திரும்பி விடுவரோ என்றும் நரேந்திரர் அஞ்சினார். அவரது அச்சத்தை மெய்ப்பிப்பது போல ஒரு சிலர் வீட்டுக்குத் திரும்பியும் விட்டார்கள். அவர்களையெல்லாம் மறுபடியும் பிடித்திழுத்து வர நரேந்திரரின் மன உறுதியாலும், குரு பக்தியாலும்தான் முடிந்தது. அவர் தனுடைய லௌகிக முன்னேற்றத்தைத் தடுத்ததால் நரேந்திரர் அடைந்த சொந்த லாபம் என்ன? மனித குலத்துக்குப் பணி புரியும் பரதத்துவப் படையொன்றை நிறுவ வேண்டுமென்ற தியாக உணர்ச்சி என்னவெல்லாம் செய்து விட்டது?

குருமஹராஜ் மறைந்து இரு வாரங்களானவுடன் காஸிப்பூர் வீட்டுக்குத் தந்திருந்த வாடகைத் தவணை முடிந்து விட்டது. 'இனி எங்கே செல்வது?' என்ற கேள்வி எழுந்தது. அந்த இளைஞர்கள் ஒவ்வொருவரையும் தம் வழிப்படி சஞ்சரிக்கும் சந்நியாசியாக விட்டு விட நரேந்திரருக்கு மனமில்லை. ஒரு சங்கமாக இருந்து, பரஸ்பரம் ஒருவரை மற்றவர் கண்காணித்து, அயர்வின்றி ஆத்ம சாதனைகள் புரிந்து, மனசையும் புலன்களையும் நிச்சயமாகக் கட்டுப்படுத்திய பின்புதான் அவர்கள் தனித்தனியாகப் பிரிந்தாலும் உத்தமத் துறவிகளாக வாழ்ந்து உயிர்க் குலத்துக்கு உழைக்க முடியும் என்று அவர் நம்பினார். அதுவரை அவர்களைப் பரிபாலிப்பது எப்படி? வெறும் கை எப்படி முழம் போடும்?


மயங்கினார் நரேந்திரர். இந்தச் சமயத்தில்தான் குருநாதரே ஒரு வழியைக் காட்டி அருளினார்.

சுரேந்திர நாத மித்ரா என்பவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உத்தமமான சிஷ்யர்களில் ஒருவர். இப்போது அவருக்குக் குருநாதரின் அற்புத தரிசனம் கிடைத்தது. தோன்றாத் துணையாக இருந்த பரமஹம்ஸர் அவர் கண் முன்தோன்றி ''அந்தக் குழந்தைகளுக்கு உதவி செய்க!'' என்று உத்தரவு செய்து விட்டு மறைந்தார்.

உத்தரவைச் சிரஸால் வகித்த சுரேந்திரநாதர் காஸிப்பூருக்கு விரைந்தார்.

''தம்பிமார்களே, எங்கே போவோம் என்று விசாரப்படாதீர்கள். சிறிய வாடகையில் ஓர் இடம் பார்த்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஏதோ ஒரு பிடி ஆகாரத்துக்கும் நானே வழி செய்

51



அறிவுக்கனலே, அருட்புனலே!

ரா. கணபதி

கிறேன். குருமஹராஜ் போனால் என்ன? அவருக்குப் பதில் நீங்கள் இருக்கிறீர்கள் அல்லவா? அவர் இருந்தபோது அவர் பொருட்டு நான் என்ன செலவிட்டேனோ அதையே இனி உங்களுக்கும் அளிக்கிறேன். நீங்கள் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொண்டு எளிய வாழ்வு வாழ என்னாலான உதவியை அளிக்கிறேன்'' என்று அந்த இளம் சீடர்களிடம் கூறினார்.

'சுரேன் பாபு'வின் ஆதரவு நரேந்திரரின் கண்களைக் குளமாக்கின.

தட்சிணேசுவரத்துக்கும் கல்கத்தாவுக்கும் இடையே இருந்த வரநகரத்தில் ஒரு வீடு பேசி அமர்த்தினார் நரேன்.

வரநகர வீட்டைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்வதென்றால் அது மர்மக் கதைகளில் வரும் பேயுலாவும் பங்களாவாக இருந்தது என்று கூறலாம். விளக்கமாகக் கூறுவதென்றால், அது ஜனசஞ்சாரமற்ற ஒரு பகுதியில் இருந்தது; குருநாதரைத் தகனம் செய்த மயானத்துக்கு அருகேயே இருந்தது; வாஸ்தவமாகவே அங்கு பேய் உலாவுவதாகக் கூட வதந்தி யிருந்தது — அதாவது/ பேய் உலாவுவது வாஸ்தவமோ இல்லையோ, அப்படி வதந்தி யிருந்தது வாஸ்தவம் — என்றெல்லாம் கூறலாம். மிகவும் பழைய, இலமான கட்டடம் அது. வீடு முழுதும் காலி என்று சொல்லப்பட்ட போதிலும் அதன் கீழ்த்தளம் முழுவதும் ஏராளமான பல்லிகளும், எலி, பெருச்சாளி இத்தியாதி ஜீவராசிகளும், அவற்றின் எண்ணிக்கையைக் குறைத்துப் பூபாரம் தீர்த்து வரும் சாரை சர்ப்பங்களும் வாழ்ந்து வந்தன. ஆனால் பத்து ரூபாய் வாடகையில் இவ்வளவு பெரிய இடம் வேறு எங்கே கிடைக்கும்? ஜனசஞ்சாரமற்றிருப்பதும் நல்லதே, ஏகாந்தமாகச் சாதனை புரியலாம்; மயானத்துக்குச் சமீபத்திலிருப்பதும் நல்லதே. அங்கு அக்கினியைப் புனிதம் செய்த குருதேவரை அனவரதமும் நினைவுகொள்ளலாம்; சிரமங்கள் இருப்பதும் நல்லதே; அவற்றைச் சகிப்பதுதான் துறவுக்குப் பயிற்சி என்ற எண்ணங்களுடன் வரநகர வீட்டுக்குக் குடி புகுந்துவிட்டனர் இளைஞர்கள்.

கீழ்ப் பாகம் முழுவதையும் மற்ற உயிரினங்களுக்கே விட்டு விட்டு, மாடியில் தினந்தோறும் சரிந்து விழுந்து கொண்டிருக்கும் வராந்தாவிலும், அந்த வராந்தாவுக்கு எல்லா வகையிலும் ஏற்ற அறையிலும் வசிக்கத் தொடங்கினார்கள். அவர்களுடைய ஜபமும் தியானமும் நடைபெற்றது இந்த அறையில்தான். அதற்குக் கீழண்டைப் புறமுள்ள அறை பூஜாகிருஹமாயிற்று. தெய்வங்கள், மகாபுருஷர்கள் இவர்களின் படங்கள் அந்த அறையை அலங்கரித்து, எந்த இன்னலுக்குமிடையே இன்பத்தைத் தருபவர்கள் அவர்கள் தான் என்பதை நிதரிசனமாக்கி வந்தன.

வழக்கு நரேந்திரருக்குச் சாதகமாகவே முடிந்தது. வீட்டினர் எப்படியேனும் பிழைத்துக் கொள்வர் என்ற நம்பிக்கை அவருக்கு ஏற்பட்டது. பற்று நன்றாக இற்றே விட்டது. கடமையைச் செய்தோம் என்ற நிறைவுடன் புவனேசுவரியின் மைந்தர் புவனத்துக்கெல்லாம் ஈசுவரியான தேவியின் பணியில் — அவளுடைய குழந்தைகளாகப் புவனமெல்லாம் வாழ்பவர்களின் பணியில் — ஈடுபடலானார்.

தத்தர் குடும்பத்துப் புத்திரராகவும், அன்பு செய்த மகனாகவும், அன்பு செய்யப்பட்ட மகனாகவும், கல்லூரி மாணவனாகவும் நாம் கண்ட வாழ்வெல்லாம் முடிந்தது. வீட்டை விட்டவர் சட்டப் படிப்பையும் பூர்த்தி செய்யாமலே விட்டு விட்டார். தியாக வாழ்வுக்குக் கொடியேற்றியாயிற்று!

வரநகரத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம், அவ்வாறு பெயரிடப்படாமலே, தோன்றி விட்டது.

குருமஹராஜே மீண்டும் பேசுகிறாரோ என குருபாயிக்கள் வியப்புறும் வண்ணம் அவரது ஆத்மிக உணர்வுகளை அழகுற விரித்துரைத்துச் சொல்வார் நரேந்திரர். அவர் தம்மை நிச்சயமாக நல்வழிப்படுத்துவார் என்ற நன்னம்பிக்கையுடன் அவரொத்த வயதினரும் அவருக்கு மூத்தோருமான மற்ற இளைஞர்கள் அவர் சொற்படியே நடந்தனர். இந்த ஒற்றுமைதான் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் மூலதனம். அவர்கள் தம்மை மீறும் போது ''குருமஹராஜ் உங்களையெல்லாம் என் பொறுப்பில் விட்டுச் சென்றிருக்கிறார். மறந்துவிட வேண்டாம்'' என்று ஸ்வாதீனமாகக் கண்டிப்பார் நரேன். அவர்கள் அவரை மீறுவது எந்த விஷயத்தில் என்று நினைக்கிறீர்கள்? இந்த ஏழைமை வாழ்வு வாழ மாட்டோம் என்றோ, வீட்டுக்குத் திரும்பிச் செல்வோம் என்றோ அவர்கள் பிடிவாதம் செய்தனரா? இல்லை. இன்னும் அதிகமாக ஜபதப சாதனைகள் புரிவோம் என்று தங்கள் உடலை வருத்திக் கொள்ள முற்படுவார்கள். அதற்கு நரேந்திரரின் அன்பு இடம் தராது!

பாபுராமின் அன்னை ஒரு விவேக முள்ள ஜீவன். பாபுராமையும் மற்ற குருபாயிக்களையும் தன்னுடன் அந்தப் பூரில் சில நாள் வந்திருக்கும்படி அவள் அழைத்திருந்தாள். நரேந்திரர் உள்பட அவர்கள் யாவரும் அந்தப்பூர் சென்றார்கள். அந்த அழகிய கிராமத்தில் நரேந்திரர் நண்பகல் கதிரவன் போல ஆன்மிகத்தில் ஒளிர்ந்தார். வாலிபர்களுடைய சாதனை அங்கு தீவிரமாயிற்று.

சூக்ஷ்மமான ஏதோ இரு கைகள் இந்தக் குழந்தைகளின் வாழ்வுகளைத் தியாக மயமான சிலையாக செய்து கொண்டிருந்தன. தங்களில் ஒவ்வொருவரும் மற்றவர்களின் முன்பு சந்நியாச விரதத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் அவர்களிடையே கொழுந்து விட்டு எரிந்தது.

ஒரு நாள் இரவு அவர்களின் உணர்ச்சிகள் கட்டுமீறிப் போயின. சாதுக்கள் வளர்ப்பது போன்ற துனி என்ற அக்கினியை அந்தப்பூர் தோட்டத்தில் வளர்த்து அதனைச் சுற்றித் தியானத்தில் அமர்ந்தனர் அந்த இளம் சாதகர்கள். அக்கினி கொழுந்து விட்டெரிந்தாலும் சாந்தியின் தன்மையே அங்கு பரவியது. தமக்கு உள்ளேயும் அக்கினி போல் ஏதோ ஒன்று ஒளிர்ந்து கொண்டிருப்பதைக் கண்டார் நரேன். அந்த அக்கினியில் இருந்த தன்மையை எண்ணி அதிசயித்தார். அந்தர்யாமியான இறைவன் அறிவுக்கனலாயும் அருட்புனலாயும் ஒரே சமயத்தில் திகழ்வதை எண்ணினார். மக்களை வேகவைக்கும் துயரத் தீயை அந்த அருட்புனலால் அவிக்க வேண்டும் என்று ஆர்வம் மிகக் கொண்டார்.

மக்கள் துன்பம் துடைக்க வந்து; சிலுவையில் அறையுண்டு, அந்தத் துன்பத்தையும் இன்பமாகக் கண்ட ஏசுநாதரை நினைவு கூர்ந்தார் நரேந்திரர். அவரைப் பற்றி ஆவேசமாகப் பேசலானார்.: மாட்டுத் தொழுவத்தில் தாழ்ந்தவரில் தாழ்ந்தவராகப் பிறந்த அவர் எப்படிப் பண்பு மலையாக வளர்ந்தார்; மலையின் மீது நின்று அன்பு என்ற மலையான தத்துவத்தை முழங்கினார் என்பதைக் கூறினார். தம்மைச் சிலுவையில் அறைபவர்களையும் மன்னிக்குமாறு உலக பிதாவிடம் ஏசுநாதர் பிரார்த்தித்ததை அகம் குழைந்து எடுத்துக் காட்டினார். அர்ச்சிஷ்டர் பால் கிறிஸ்துவ சமயத்தை நிலைநாட்டியதையும் அதன்மூலம் கிறிஸ்து என்றும் உயிர் வாழ்வதையும் கூறினார். பரமஹம்ஸரின் உபதேசங்களைத் தாங்கள்



'''உங்களைப்போல் நாலு சபாக்காரரா தான் என்னைக் கை தூக்கி விடணும்!''

''ஐயோ பாவம்! கொஞ்சம் இருங்க. இன்னும் மூன்று பேரைக் கூப்பிடுறேன்...!''

நிலைநாட்டினால் அவரும் என்றும் உயிரோடு வாழ்வார் என்பதையும் கூறாமல் கூறினார்.

பேசி முடிந்ததும் விசித்திரமான ஒரு மௌனம் அங்கு நிலவியது. பேச்சு அற்ற மௌனமல்ல அது. பேச்சில் வராத உணர்வு அடர்ந்து நின்ற அற்புத மௌனம் அது. விறகுகள் சரிந்து சரிந்து எரியும் ஓசை அந்த மௌனத்தின் கம்பீரத்தை அதிகமாக்கிற்று. அக்கினியின் ஒளியும் நிழலும் அவர்களின்மீது ஆடி, உள்ளே இருக்கும் அக்கினியை தூண்டிவிட, அவர்கள் யாவரும் ஆண்டவனுக்கு முன்பாகவும், தங்களில் மற்றவர்களுக்கு முன்பாகவும் சந்நியாசப் பிரதிக்ஞை எடுத்துக்கொண்டார்கள். புராதன பாரதத்தில் ரிஷிகளும், முனிவர்களும், பரிவிராஜகர்களும், யோகிகளும் வாழ்ந்தார்கள் என்பது பொய்யல்ல என்று அக்கினி சாட்சியாக நிரூபிப்பதுபோல அவர்கள் துறவறத்துக்குத் தங்களை அளித்துக் கொண்டார்கள்.

இவ்வாறு அவர்கள் பூரண சந்நியாசிகளான தினம் கிறிஸ்துமஸ் முன் மாலை என்று அதன் பின்னரே அவர்கள் அறிந்து, வியப்பும், மகிழ்ச்சியும் கொண்டனர்.

அந்தப்பூரிலிருந்து வர நகரம் திரும்பினர் குருபாயிக்கள். வீடாக இருந்த வர நகரத்துக் கட்டடம் மடமாயிற்று.

ராகால் ஸ்வாமி பிரம்மாநந்தரானார்; யோகின் ஸ்வாமி யோகாநந்தரானார்; ஸ்வாமி பிரேமாநந்தரானார் பாபுராம்; நிரஞ்ஜநாநந்த ஸ்வாமியானார் நிரஞ்ஜனர்; ஸ்வாமி ராமகிருஷ்ணாநந்தரானார் சசி; ஹரி துரியாநந்த ஸ்வாமியானார்; ஸ்வாமி அத்புதாநந்தர் எனப் பெயர் கொண்டார் லாடு; ஸ்வாமி சிவாநந்தரானார் தாரக்; காளி அபேதாநந்த ஸ்வாமி என்ற பெயரைத் தாங்கினார்; மூத்த கோபாலர் ஸ்வாமி அத்வைதாநந்தரானார்; ஸுபோத் ஸ்வாமி ஸுபோதாநந்தர் என்றே பெயர் பெற்றார். சாரதா, சரத், கங்காதரர் முறையே திரிகுணாதீதராகவும், சாரதாநந்தராகவும், அகண்டாநந்தராகவும் ஆயினர். ஹரிபிரஸன்னா விஜ்ஞாநாநந்தரானார்.

நரேந்திரர்? மற்றவர்களெல்லாம் துறவுபூண முக்கியமான தூண்டுகோலாயிருந்த அவர் நிரந்தரமாக எந்த சந்நியாச நாமமும் பூணவில்லை. அவர் மனதில் ஏதேதோ திட்டங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. மக்களுக்குச் சேவை புரிவதற்கு முன் அவர்களின் மனோபாவங்களையெல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்; ஜன சமுத்திரத்தில் ஓர் அலையாகத் தாமும் சுருண்டு புரண்டு சென்று கொண்டே இருக்க வேண்டும்; ஆனாலும் அந்தச் சமுத்திரத்தில் மடங்கி விழுந்து மடிந்து விடும் அலையாக ஆகிவிடக் கூடாது; சமுத்திரத்தின் இயல்பையே மாற்றும் அற்புத அலையாகத் தாம் ஆக வேண்டும் — என்றெல்லாம் அவருடைய எண்ணங்கள் கடலாகப் பொங்கிக் கொண்டிருந்தன. எல்லோருடனும் வாழவேண்டும்; ஆனால் யாருமே அறியாமல் வாழ வேண்டும் என்ற சிந்தனை மேலோங்கியது. நம் ஒவ்வொருவருள்ளும் பரமன் இப்படித்தானே வாழ்கிறான்?

யாருமே அறியாமல் வாழ வேண்டும் என்று எண்ணும்போது நரேந்திரர் தமது பேரன்புக்குரிய குருபாயிக்களும் கூடத் தம்மைப் பற்றி ஏதுமறியாதிருக்க வேண்டும் என்று கருதினார். தம்மை யாரும் அறியக் கூடாது என்பதால் தான் நரேந்திரர் தமக்கென நிரந்தரமான பெயரையும் அப்போது சூடிக் கொள்ளவில்லை.

சிறியவராக இருக்க வேண்டும் என்று விரும்பும்போது ஒருவர் எவ்வளவு பெரியவராகிறார்? உலகம் அறிந்து போற்ற எந்தத் தகுதியுமற்ற நீசம் அதற்காக அலையும்போது, தகுதி பெற்றிருந்த நரேனோ உலகம் அறியாமல் வாழ விரும்பினார்!

விவிதிசாநந்தர், சச்சிதாநந்தர் முதலிய பெயர்களில் நரேந்திரர் தமது தேச சஞ்சாரத்தைச் செய்து வந்தார். அமெரிக்காவுக்குப் புறப்படு முன்பு தான் கேத்ரி மஹாராஜாவின் வேண்டுகோளுக்கிணங்கி விவேகாநந்தர் என்ற நாமத்தை நிரந்தரமாகத் தமக்கிட்டுக் கொண்டார். எனவே இனி நரேந்திரரை ஸ்வாமிஜி என்றே கூறலாம்.

குருபாயிக்கள் யாவரும் காவி உடை தரித்து விட்டார்கள். காவி 'உடை' என்று குறிப்பிட்டாலும் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக இருந்தது வெறும் கௌபீனம்தான். காவி வேட்டியும், மேலங்கியும் ஓரிரண்டுதான் அவ்வளவு பேருக்குமாக உண்டு. யார் வெளி அலுவலாகச் செல்கிறார்களோ அவர்கள் மட்டுமே அதைத் தரித்துக் கொள்வார்கள். படுப்பதற்கு வெறும் பாய் தான், கைதான் தலையணை. உணவு தானாகக் கிடைத்தால்தான் உண்டு. பிக்ஷை எடுக்கலாம் என்று சந்நியாசிகளுக்கு விதி இருந்தாலும், அதுகூட உணவைத் தேடிச் செல்வதற்குச் சமானமே என்ற அளவுக்கு அவர்களுள் துறவறம் ஊறியிருந்தது.

வேறெது இருந்தால் என்ன, இல்லாவிட்டால்தான் என்ன? வணங்குவதற்

குக் கடவுளரின் சித்திரங்கள் இருந்தன. ஜபம் புரிய அக்ஷமாலைகள் இருந்தன. பாடிப் பரவுவதற்குத் தம்புராவும் இருக்கவே இருந்தது. அப்புறம், பொறுக்கி எடுத்தாற் போன்ற ஒரு நூறு நூல்கள் விசாரணைக்கும் விவாதிப்பதற்கும் இருந்தன. எல்லாவற்றுக்கும் மேலாக, புறப்பொருளை நாடாமல் தன்னால் நிறைந்திருக்கும் உள்ளம் அவர்களிடம் இருக்கவே இருந்தது.

அவர்கள் வாழ்ந்த வாழ்க்கையின் குதூகலத்தையும், கோலாகலத்தையும் சொல்லி முடியாது. வர நகர வாழ்க்கையைப்பற்றி ஒருவரிடம் இப்படி வர்ணித்தார் விவேகாநந்தர்:

''உண்பதற்கு எதுவுமே இல்லாத நாட்கள் எவ்வளவோ கழிந்திருக்கின்றன. அரிசி இருந்தால் உப்பு இருக்காது. ஆனால் இதையெல்லாம் யார் லட்சியம் செய்தோம்? கோவை இலை, உப்பு, சிறிது அரிசி இவற்றை வேக வைத்து உண்டே நாங்கள் மாதக் கணக்கில் தள்ளி யிருக்கிறோம். 'வருவது வரட்டும்' என்று உதாசீனமாக இருப்போம். மத அநுஷ்டானங்கள், தியானம் என்ற அலைகள் அடித்துச் செல்லும் திசையில் சென்று கொண்டிருந்தோம். ஆகா, எப்பேர்ப்பட்ட நாட்கள்! நாங்கள் விரதங்களை அநுஷ்டித்ததிலிருந்த கடுமையைக் கண்டு பேய் பிசாசுகள் கூடப் பயந்து ஓட்டம் பிடித்திருக்கும். ராகாலையும், சசியையும் கேட்டுப் பார் சொல்வார்கள்! சூழ்நிலைகள் ஒருவனுக்குப் பாதகமாக ஆக ஆகத்தான் அவனுள்ளிருக்கும் சக்தி நன்கு வெளியாகும். புரிகிறதோ?''

இவ்வாறு மனசு விட்டு ஸ்வாமி விவேகாநந்தர் பேசியது ஆப்த சிஷ்யர்களிடம் மட்டும்தான். மற்றவர்களிடம் பூர்வ காலத்தைப் பற்றிப் பூரண மௌனமே சாதித்து வந்தார்.

ஸ்வாமிஜி தமது அறிவுச் செல்வத்தைக் குருபாயிகளுக்கெல்லாம் வழங்கினார். ஆன்மிக விஷயங்கள் மட்டுமின்றி, சரித்திரம், இலக்கியம், கலை, சமூக இயல் எல்லாவற்றையும் விளக்குவார் அவர். ஏன், நாஸ்திக வாதங்களைக் கூடப் பாங்குற எடுத்துக் கூறுவார். இதன் மீது கடவுளின் கருணையில் ஒரு சக சந்நியாசி சந்தேகம் கொண்டபோது ஸ்வாமிஜி இப்படி அழகுற விடை கூறினார்: ''உன்னிலும், என்னிலும், மனித இதயம் எல்லாவற்றிலும் ஒரு துளியேனும் கருணை உள்ளதென்றால் இதெல்லாம் எங்கிருந்து வந்தது? இத்தனை பேரிடமும் உள்ள கருணையைப் படைத்த கடவுள் எப்படிப்பட்ட கருணை சமுத்திரமாக இருக்க வேண்டும்?''

சந்தேகம் கொண்ட சாது, வேடிக்கையாக ''அதென்னவோ, நீங்கள் கடவுள் இல்லை யென்று ஒரு சமயம் சொல்கிறீர்கள்; இருக்கிறார் என்று இன்னொரு சமயம் சொல்கிறீர்கள். இந்த மாதிரிக் கருத்துக்களை மாற்றி மாற்றிச் சொல்லிக் கொண்டிருந்தால் நீங்கள் சொல்வதில் எதை நிச்சயமாக எடுத்துக் கொள்வது?'' என்று கேட்டார்.

''சரி; நான் ஒருபோதும் மாற்றிக் கொள்ளாத சத்தியம் இதுதான்: 'நான்' என்ற எண்ணமும், ஆசையும் நம்மைத் தாக்கும் வரையில் நமக்குக் கடவுளிடம் நம்பிக்கையிராது'' என்றார் ஸ்வாமிஜி.

பேச்சில் வராத உணர்ச்சியைப் பாட்டாக்கினார்.

அஞ்சல் என்பவர்க்கு அஞ்சேல் என்று
தஞ்சம் தருகின்ற தாயான தத்துவன்

என்று அவர் பாட, மற்றவர்களும் அதில் சேர்ந்து கொண்டனர்; சந்தேகித்த தெய்வ சாந்நித்தியத்தை நேராகவே நுகர்ந்தனர்.

வர நகர நாட்களில் ஸ்வாமிஜி தினம் இருபத்து நாலு மணியும் உழைத்தார். அதிகாலையில் இருள் பிரியு முன்பே அவர் எழுந்து விடுவார். ''விழித்துக் கொள்ளுங்கள், எழுந்திருங்கள்! தேவாமிருதத்தை அருந்துபவர்களே, விழித்தெழுங்கள்'' என்று ஆர்ப்பரித்து மற்றவர்களையும் எழுப்பி விடுவார். நள்ளிரவுக்குப் பிறகும் உறங்காது சில குருபாயிகளுடன் அவர் கூரையில் அமர்ந்து கொண்டு துதிப் பாடல்களைப் பாடிக் கொண்டிருப்பார். இதற்காக அண்டை வீட்டுக்காரர்கள் சண்டைக்கு வந்ததுமுண்டு. ஆனால் அதை யாரும் பொருட்படுத்த வில்லை. 'சீதா ராமா' என்றும் 'ராதாகிருஷ்ணா' என்றும் ஸ்வாமிகளின் இன்னிசைக் குரல் இழைய மற்றவர்கள் அதோடு சேர்ந்து குழைவார்கள்.

வரநகர மடத்துக்குப் பண்டிதர்கள் வந்து வாதங்கள் நடத்துவார்கள். கிறிஸ்துவப் பாதிரிமார்கள் ஹிந்து மதத்தின் 'மூட நம்பிக்கை'களைப் பழிப்பதற்காக வருவார்கள். ஹிந்து மதம் என்றால் என்ன என்பதை ஸ்வாமிஜி அவர்களுக்குத் தெளிய வைப்பார். கிறிஸ்துவ மதத்திலுள்ள குறைபாடுகளையும் எடுத்துக் காட்டுவார். கடைசியில் கிறிஸ்துவின் பெருமையை அவர்களே அறியாத அளவில் விரித்துரைத்து அவர்களை அதிசயிக்க வைத்து அனுப்புவார்.

(தொடரும்)


கிரிக்கெட் காட்சிகள்
லார்ட்டர்வான்! நீங்கள் போய்ப் பந்தை எடுத்து நடை போட்டு அதை எறிவதற்குள் நான் போய் ஒரு மசாலா தோசை சாப்பிட்டு வந்துவிடறேன்!
அதுவடை எப்படி இருந்தாலும் போரடிக்கத் தவறுதே!
ஸ்மித்
பாரிங்டன்
வில்சன்
விக்கெட்டுக்கு மேல் வேறு ஏதேனும் இருக்கக் கூடாதா?
என்ன? உங்க பைப்பிலே புகை சரியாக வந்திண்டிருக்கா?
பந்துக்கு எடுக்கும் தினவைத் தணிக்க அதை அடிக்கடி தேய்த்தார் டிட்மஸ்
பட்டாபிராமன்
மானேஜர்
சாமா



சென்னை நகரசபை மைதானத்தில் களை கட்டி விட்டது. ஆயிரமாயிரச் சத்தங்களும், கரகோஷ ஆரவாரங்களும், விசில் ஒலிகளும் எம். ஸி. ஸி. கிரிக்கெட் ஆட்டக்காரர்களையும், இந்திய கிரிக்கெட் கோஷ்டியினரையும் பிரமாதமாக வரவேற்றன. இந்தியகாப்டன் பட்டோடி நவாபும், எம். ஸி. ஸி. காப்டன் ஸ்மித்தும் நடு மைதானத்துக்குச் சென்று 'பூவா, தலையா?' பரிசோதனையில் ஈடு பட்டனர். இதுதான் ஆட்டத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் கட்டம்! காப்டன் பட்டோடி அதில் வெற்றி பெற்றுப் பெருமிதத்துடன் வந்தார்.

எம். ஸி. ஸி. கோஷ்டியினர் 'பீல்டிங்' செய்யவும், இந்திய கோஷ்டி மட்டையைப் பிடித்து ஆடவும் தீர்மானமாயிற்று. முதலில் இந்திய கோஷ்டியில் மேஹ்ராவும் குண்டரனும் ஆடச் சென்றனர்.

''என்ன! குண்டரனா ஆடப் போகிறார்? இவர் பன்னிரண்டாவது ஆட்டக்காரர் என்று சொன்னார்களே! இன்ஜினீயர் அல்லவா ஆடப் போவதாக இருந்தது!''

''சும்மாயிரும்! ஆட்டத்தைக் கவனியும். இன்ஜினீயர் கட்டடம் கட்டப் போயிருப்பார்! குண்டரன் வந்திருக்கிறார்!''

''ஸார்! நாமொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும் என்பது நிதரிசனமாகி விட்டதல்லவா? கிரிக்கெட்டில் பன்னிரண்டாம் ஆட்டக்காரரின் வேலை என்ன?''

''தாகசாந்தி வேளையில் சிர்வரிசைகளுடன் செல்லும் பணியாளரோடு கூடப் போய் ஒத்தாசை செய்வது; ஆட்டக்காரர்கள் கூப்பிட்ட குரலுக்கு ஏனென்று கேட்பது; மைதானத்தில் யாருக்காவது அடிபட்டால் அவர் இடத்தை நிரப்புவது !''

''அட பாவமே! பன்னிரண்டாம் ஆட்டக்காரர் வரிசையில் இருந்த குண்டரன் அப்படியே இருந்திருந்தால் அவர் ஆட்டம் குடத்தில் இட்ட விளக்காகியிருக்கும்! இன்ஜினீயரைப் பாராட்ட வேண்டும்!''

''ஆமாம், அவர் ஆடவரவில்லை. குண்டரன் பதினொருபேரில் ஒருவரானார். கடைசியில் எல்லா ஆட்டக்காரர்களின் ஆட்டத்தையும் சேர்த்துப் பிரமாதமாகஆடி 192ரன்கள் எடுத்தது.— அதில் இருபத்தெட்டு பவுண்டரிகள், விக்கெட்கீப்பராக அவர் ஸ்டம்பு அவுட் செய்த அழகு—அற்புதமாகப் பந்தைப் பிடித்த விதம்—எல்லாம் சேர்ந்து அவரை முதல் தர ஆட்டக்காரராகச் சென்னை முதல் டெஸ்ட் ஆக்கிவிட்டது!''

''இன்ஜினீயரின் தியாகம் ஒருபுறமிருக்கட்டும்; போலன், குண்டரன் அடித்த ஒரு பந்தைப் பிடிக்காமல் நழுவ விட்டுக் குண்டரனுக்குச் சதத்துக்கு மேல் அடிக்க ஆசீர்வாதம் செய்தார். ஆகவே போலனுக்கும் குண்டரத்தின் பெருமையில் பங்கு உண்டு!''



இடது கோடியில் குண்டரன்

''ஆங்கில ஆட்டக்காரர் போலன் பந்தைப் பிடிக்காமல் நழுவ விட்டதற்குப் பிரதிபலனாகத் தான் எம். ஸி. ஸி. குழுவினர் ஆடுகையில் சர்தேசாய் பந்தை நழுவ விட்டு அதை ஈடு செய்து விட்டாரே !''

''சரிக்குச் சரி! அதனால் ஆட்டமும் வெற்றி தோல்வியின்றி முடிந்து விட்டது போலும்!''


பூவா, தலையா ?



இரண்டாம் நாள் ஆட்டத்தில் பாரிங்டன் அருமையாகத் துள்ளிப் பாய்ந்து சென்று விக்கருக்குப் பாய்ந்து சென்ற பந்தைப் பிடித்தார். ஆனால் அவர் முகம் கோபத்தினால் ஜிவ்வென்று சிவந்து விட்டது. ஆத்திரத்தில் அவர் கையிலிருந்த பந்தைப் படீரென்று தரையில் ஓங்கி அடித்தார். அவருக்கு அப்படிக் கோபம் வந்ததற்குக்காரணம், 'காச்' பிடித்தும் அது பலனில்லாமல் போய் விட்டதே என்பதனால்தான். பவுண்டரிஎல்லையைத் தாண்டி வந்து பந்தைப்பிடித்தால் அது செல்லாது. ஜெயசிம்மா

பந்தைப் பிடிக்கக் கொடுத்தும் அவுட்டாகாமல் தலை தப்பினார். ஆனால் பாரிங்டன் கொடுத்த சாபம் விரைவில் பலிதமாயிற்று. வெகு சீக்கிரமே ஜெயஸிம்மா மைதானத்தை விட்டு வெளியேறினார்.

இந்த முதல் டெஸ்டில் இரண்டாவதாகச் சதம் போட்டவர் மஞ்சரேகர். முப்பத்து மூன்று வயதான இவருக்கு நிறைய டெஸ்ட் அநுபவம் உண்டு. பள்ளிப் பருவத்திலேயே இவர் அகில இந்திய பள்ளி கிரிக்கெட் போட்டியில் சதம், சதமாக எடுத்துப் பழக்கமானவர். சென்ற தடவை எம். ஸி. ஸி. குழுவுக்கெதிராகப் புதுடில்லியில் 189 ரன்கள் எடுத்து அவுட்டாகாமல் இருந்தது அதற்குள் மறந்து போய் விடுமா? இவர் பீல்டிங்கிலும் நெருப்பாக விளங்கினார். மூன்றும் நாள் துரானி வீசிய பந்தை வில்ஸன் தூக்கியடித்த போது மஞ்சரேகர் லாகவமாக அதைப் பிடித்தது அவரது பீல்டிங் சிறப்புக்குச் சான்றாகும். ஆனால் அவர் இரண்டாம் நாள் ஒரு பந்தைப் பிடிக்க விட்டதும், நான்காம் நாள் கோட்டை விட்டு விலகி நின்று ஸ்டம்ப் 'அவுட்' ஆனதும் அவரது நற்பெயருக்கு ஏற்பட்ட களங்கங்கள்!



போலஸ்

"அடிக்கலாமா?"

"என்னது ?"

"போர் !"

இப்படிப் பாரிங்டனும் போலஸும் ஆட்டத்தின் நடுவில் பேசிக் கொண்டார்கள் போலும். இந்த முதல் டெஸ்டிலேயே மூன்றும் நாள் ஆட்டத்தைப் போல் 'போர்' அடித்த நாள் வேறு இல்லை. ஞாயிற்றுக் கிழமை நமக்கெல்லாம் ஓய்வு நாள். பாரிங்டனும் போலஸும் கூடியிருந்த ரசிகர்களைத் தூங்க வைத்தார்கள்; அயர வைத்தார்கள். ஆட்டமும் தூங்கி வழிந்தது. மாடு கட்டிப் 'போர'டித்தால் மாளாதென்று யானை கட்டிப் 'போர'டித்தனர் பாரிங்டனும் போலஸும்!

இந்திய கோஷ்டியில் தம் பந்து வீச்சினால் ஆங்கில ஆட்டக்காரர்களைத் திணற அடித்தவர் 'போர்'டே. அவர் பெயரில் 'போர்' அமைந்திருந்தாலும் ஆட்டத்துக்கு விறுவிருப்பூட்டியவர் இவரே! தாமே பந்தை வீசி, ஆட்டக்காரர் அடித்ததை உருண்டு புரண்டு தாமே பிடித்தும் ஆங்கில ஆட்டக்காரர்களை 'அவுட்' ஆக்கினார் இவர். இந்திய கோஷ்டியில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்திய பெருமை இவரையே சாரும். எம். ஸி. ஸி. பாட்ஸ்மன்களை மேலும் 'அவுட்' டாக்குவதில் துரானியும், நட்கர்ணியும், கிருபால்சிங்கும் ஒத்தாசை செய்தனர். வில்ஸன் அடித்த ஒரு ஸிக்ஸரின் வேகம் அபாரம்! விக்கெட்டுக்கு மேல் இன்னொன்று இருந்தால் அதையும் அவர் அடித்து விடுவார் போலிருந்தது. இந்த முதல் டெஸ்டிலேயே தம் பிரமாதப் பந்து வீச்சினால் புகழ் பெற்றவர் ஆங்கில கோஷ்டியைச் சேர்ந்த டிட்மஸ். முதல் இன்னிங்ஸில் ஐந்து விக்கெட்டுகளையும், இரண்டாவது இன்னிங்ஸில் நான்கு விக்கெட்டுகளையும் வீழ்த்தி, இந்திய கோஷ்டியினரை வெற்றிப் பாதையிலிருந்து பிடித்திழுத்து ஆட்டத்தை வெற்றி தோல்வியின்றி முடித்ததில் இவருக்குப் பெரும் பங்கு சேரும்.



பாரிங்டன்

இரண்டாம் இன்னிங்ஸில் பக்கத்திலுள்ள சென்ட்ரல் ஸ்டேஷனில், ரயில் வண்டிகள் விடும் புகைக்கும் போட்டி போட்டுக் கொண்டு எம். ஸி. ஸி. மானேஜர் ஹோர்க்கக்கான் புகையை விட்டுக் கொண்டிருந்தார்! எம். ஸி. ஸி. கோஷ்டியில் ஐந்து விக்கெட்டுகள் வீழ்ந்த பிறகும், மார்ட்டிமரும், ஷார்ப்பும் பவுண்டரி, பவுண்டரியாக அடித்துக் கடைசி வரை இந்திய எண்ணிக்கையை எட்டிப் பிடிக்க முயன்றனர். மார்ட்டிமர் அடித்த இரண்டு ஸிக்ஸர்களும் தரமாயிருந்தன. ஒரு

காப்டன் ஸ்மித்துடன் கவர்னர்.





காப்டன் பட்டாடியுடன் கவர்னர்.

சமயத்தில் இவர்களது ரன்கள் எடுக்கும் வேகம் இந்திய எண்ணிக்கையைத் தாண்டி விடுமோ என்ற ஐயத்தை எழுப்பியது. ஆங்கில ஆட்டக்காரர்கள் இப்படிக் கடைசி வரை தங்கள் முயற்சியைக் கைவிடாத போது கடைசி நேரத்தில் காப்டன் பட்டாடி தம் முயற்சியைக் கைவிட்டது ஏனோ? மஞ்சரேகருக்கும், சர்தேசாய்க்கும் கொடுத்ததற்குப் பதில் போர்டே, நட்கர்ணியைப் பந்து வீசச் செய்து பார்த்திருக்கலாமே? கடைசி நிமிஷம் வரை எந்த அதிசயமும் நிகழலாம் அல்லவா? நாமொன்று நினைக்கலாம். அது காப்டன் பட்டாடிக்குப் படவேண்டாமோ?

அது எப்படியோ போகட்டும். மூன்றும் நாள் ஆட்டம் அடித்த 'போரு'க்குக் கடைசி நாள் 'போர'டிக்காமல் செய்த பெருமை காப்டன் பட்டாடியைச்சேரும். கடைசிவரையில் ஆட்டம் ஸஸ்பென்ஸோடன் அமைய அவர் தைரியமாக 'டிக்ளேர்' செய்ததைப் பாராட்டலாம்.

ஐந்து நாட்களும் ஐம்பதினாயிரம் பேரைக் கட்டி ஆள்வது அவ்வளவு இலேசான காரியமல்ல. சென்னை கிரிக்கெட் சங்கக் காரியதரிசி ஸ்ரீராமும் அவரது சகாக்களும் முதல் டெஸ்டை நன்கு நிர்வகித்து நடத்தினர்.

ஆட்டத்துக்கு நடுநடுவில் உணர்ச்சி வேகத்தில் பார்வையாளர்கள் சிலர் மைதானத்தினுள் ஓடிப் போய் ஆட்டத்தின் வேகத்துக்கு அணை போட்டுத் தடுத்து விட்டு, அவர்களை ஆட்டம் 'போர்' 'போர்' என்று கத்தினார்கள். இதனால் சில இடங்களில் துவந்த யுத்தமே நிகழ்ந்தது! தன் குற்றம் தனக்குத் தெரியாதல்லவா ?

ஜூனியர் வர்த்தக சபை அளித்த சிறந்த பாட்ஸ்மன் பரிசு குண்டரத்துக்கும், ரோட்டரி கிளப்பினர் வழங்கிய சிறந்த பந்து வீச்சு நிபுணர் பரிசு டிட்மஸுக்கும் கிடைத்தன. சென்னை முதல் டெஸ்டில் ஏழு விக்கெட் நஷ்டத்துக்கு 457 ரன்கள் எடுத்து டிக்ளேர் செய்ததும் இந்தியருக்கு வெற்றி நிச்சயம் என்றுதான் பலரும் எண்ணினார்கள். நாமொன்று நினைக்க ஏதோ நடக்கிறது. ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிந்தாலும் இரண்டு முதல் தர ஆட்டக்காரர்களைக் கொடுத்திருக்கிறதே, அதற்காகத் திருப்திப் பட்டுவிட வேண்டியதுதான்!

போர்டே



கிருபால்சிங்



நட்கர்ணி



உங்களுடைய கேசம் ஆரோக்யமாகவும்
பளபளப்புடனும் விளங்கும்

பிரில்க்ரீம்

தடவி நேர்த்தியாக தலையை வாரிக்கொண்டால்!





பிரில்க்ரீம் மட்டுமே

* அதிக எண்ணெய்ப்பசை இல்லாமலும், தாராளமாக உரோமம் கலையாமலும் நேர்த்தியாக தலையை வார உங்களுக்கு உதவுகிறது.
* மிகவும் சிக்கனமானது—ஒருமுறை தடவி வாரிக்கொண்டால் நாள் முழுவதும் உங்கள் தலை கலையாது அழகாக தோற்றமளிக்கும்.
* உரோமம் உதிர்ந்து வழுக்கை விழாமல் தடுக்கக்கூடிய, ஆரோக்யமான உரோம வளர்ச்சியைத் தூண்டக்கூடிய, நேர்த்தியான கலவை வாய்ந்தது.
* உங்களுடைய கேசத்தின் இயற்கையான வண்ணத்தைப் பாதுகாக்கிறது.

எனவே இன்றே பிரில்க்ரீமையே உபயோகியுங்கள்!

உலகமுழுவதிலும் லக்ஷக்கணக்கான நேர்த்தியான மனிதர்கள் இதையே உபயோகிக்கிறார்கள்



எம். ஜி. ராமச்சந்திரனுக்கு ஏற்ற கதை. ஆரம்பக் காட்சியிலேயே படம் களைகட்டி விடுகிறது. மர்ம மனிதனோடு சண்டையிட்டுத் தன் எஸ்டேட் மானேஜரே அவன் என்று தெரிந்து கொள்ளும் சஸ்பென்ஸ் கடைசியில் வைக்கப்பட்டிருக்கிறது. வெறும் டுமீல் டுமீல், சண்டை, காதல், கள்ளக் கடத்தல் இவைகளை வைத்துக் கொண்டே படத்தை ஓட்டிவிடும் இரகசியம் தெரிந்த சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பா தேவர் இப் படத்தில் ஒரு குழந்தையைச் சேர்த்து அதற்குத் தாயன்பைப் பெற முடியாமற் செய்து அதன் [illegible]ப் புகுத்தியிருக்கிறார். கலைத்தன்மைக்காக [illegible] அநாவசியமாகக் கவலைப்படும் நிலைமையை என்றுமே தேவர் பிலிம்ஸார் தமக்கு வைத்ததில்லை. ''வேட்டைக்காரா''விலும் அதே சௌகரியம் இருக்கிறது.

கஷ்டங்களும், விபத்துகளும் வருவதற்குக் காரணமே பாபுவின் குடும்பம் அந்தக் காட்டுப் பகுதியில் வசிக்கிறதோ? பாபுவின் எஸ்டேட்டை நிர்வகிக்கும் மானேஜரைப் படத்தில் ஒரு வில்லன் வந்தாக வேண்டுமே என்கிற காரணத்துக்காகக் கொடியவனாக்கியிருக்கிறார்களா? பாபுவின் எஸ்டேட் சம்பந்தப்பட்ட உயிலை அவர் தந்து கொள்ள மானேஜர் ஏன் ஏமாற்றவேண்டும்? இருட்டு உயிலை வைத்துக்கொண்டு சொத்துக்கள் அனைத்தையும் உரிமையாளரிடமிருந்து கவர்ந்து கொண்டு விட முடியுமா? எதோ பாபுவோடு தொடர்ந்து மறைவில் கூச்சமில்லாமல் கூத்தாடுகிறார்களே இது என்ன பண்பு என்றெல்லாம் கேட்டுக் குழப்பிக் கொள்வதனால் ஒரு பயனும் இல்லை. தமிழ்ப் படங்கள் அடைந்திருக்கும் முன்னேற்றத்தின் இலட்சணம் அது!

எம். ஜி. ராமச்சந்திரன் தான் வேட்டைக்காரன் பாபு. சதா துப்பாக்கி, வேட்டை என்று பொழுதைப் போக்கிக் கொண்டிருந்த பாபுவுக்கு லதாவின் காதல் கிடைக்கிறது. சண்டைக் காட்சிகளில் தனக்கே உரிய தனி லாகவத்துடன் சக்கைப்போடு போட்டிருக்கும் எம். ஜி. ஆர். காதல் காட்சிகளிலும் சக்கைப் போடு போட்டிருக்கிறார். (அளவுக்கு மீறிப் போயிருக்கும் கட்டிப் பிடிக்கும் காதல் காட்சிகளுக்கு ஒரு கட்டுப்பாடு வேண்டும். அதில் கவனம் செலுத்தாதது கண்டிக்கத் தக்கது. எதையெல்லாமோ வெட்டி எறியும் படத் தணிக்கையாளர் 'செக்ஸ் அப்பீல்' விஷயத்தில் இவ்வளவு தாராளமாய் இருப்பானேன்!) வீரமும், தீரமும், துள்ளலும், துணிச்சலும், பாசமும் பரிவும் காட்டி, எம். ஜி. ஆர். தம் பாத்திரத்தைச் சிறப்பாகச் செய்திருக்கிறார். சாவித்திரி எல்லாக் கட்டங்களிலும் எம். ஜி. ஆருக்கு ஈடு கொடுத்து நடித்திருக்கிறார். பெற்ற குழந்தைக்குப் பால் கொடுக்க முடியாத நோயாளியான நிலையில் அவர் நடிப்புச் சிறந்து நிற்கிறது. வழக்கமான தாய்ப் பாகம் எம். வி. ராஜம்மாவுக்கு.

''வேட்டைக்கார''னுக்குப் புகழ் தேடித் தரும் நடிகர்கள் இருவர். ஒன்று சிறுத்தை. இன்னொன்று சிறுவன் ராஜாவாக வரும் பேபி ஷகிலா. மோப்ப சக்தியினால் வீடு தேடி வந்து கண்ணாடி ஜன்னலை உடைத்து உள்ளே குதித்து மாடிப் படி ஏறி, அதியற்புதமாக நடித்திருக்கும் சிறுத்தையும், பேபி ஷகிலாவும் அநாயாசமாக நடித்துப் படத்துக்கு நல்ல திருப்பம் தருகின்றனர்.

நாகேஷ் சிரிப்புக் களஞ்சியமாக விளங்குகிறார். தூக்கக் கலக்கத்தில் கண்ணாடிக்குப் பல் தேய்ப்பதும், தோட்டத்துச் செடிகளை வெட்டும் போது நிகழும் வேடிக்கையும் மனத்தில் பதிகின்றன. எம். என். நம்பியார் மர்ம மனிதராக வந்து படத்தில் வில்லன் இல்லாக் குறையைப் போக்கித் தம் பாகத்தைச் சிறப்பாகச் செய்திருக்கிறார். நல்லவராக வரும் எம். ஆர். ராதா ஒரு சிரிப்புச் சிரித்தே தம்மை நிலைநிறுத்திக் கொள்கிறார். அசோகன் தேவையில்லாத பாத்திரம்.

''கண்ணனுக் கெத்தனை கோவிலோ'', ''வெள்ளி நிலா முற்றத்திலே'' என்ற பாடல்கள் நன்றாயிருக்கின்றன.

சீறும் சிறுத்தைக்காகவும், சிறப்பான இயற்கைக் காட்சிகளுக்காகவும் குழந்தையின் நடிப்புக்காகவும் ''வேட்டைக்கார''னைப் பார்க்கலாம்.

கர்ணன்

மகாபாரதத்தில் ஒரு முக்கியமான பாத்திரம் கர்ணன். வரையாது வழங்கிய வள்ளல்களின் வரிசையில் முதலில் நிற்பவன் கர்ணன். பிறப்பில் சூரியதேவனின் மகனாயிருந்தும், வளர்ப்பில் ஏற்பட்ட வேறுபாடு காரணமாகக் காலமெல்லாம் தேர்ப்பாகன் மகன் என்னும் இழுக்கைத் தாங்கியவன் கர்ணன். தன்னைப் பெற்றவள் யாரென்று தெரியாமல் அவன் துடித்த துடிப்பு சொல்லி முடியாது. இணையற்ற இரத்தினமாக இருந்தாலும் அதைத் தங்கத்தில் பதித்தால்தான் அதற்கு மதிப்பு. அதை விடுத்துப் பித்தளையில் பதித்தால்...! தீயவர்களாகிய துரியோதனாதியர்களுடன் சேர்ந்து, அவர்கள் செய்த தீச் செயல்களிலெல்லாம் பங்கு கொண்டு, இறுதிவரை அவர்களது செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் கடமையிலேயே இருந்துவிட்ட கர்ணனை வள்ளல் என்று பாராட்டுகிறோம். ஆனால் நல்லவனென்று கூற முடியவில்லை. அதுதான் அந்தப் பாத்திரத்துக்குள்ள குறை. அத்துடன் நிறைவு பெறாத பாத்திரமும் கூட. வள்ளன்மையும், வீரமும், தீரமும் கொண்ட ஒரு மகா வீரன் தனக்குரிய மதிப்பைப் பெற முடியாமற்போனது பெரிய துர்ப்பாக்கியம்.


பத்மினி பிக்சர்ஸாரின் ''கர்ண''னில் மாட மாளிகைகளையும், கூட கோபுரங்களையும் காட்டி எழில் பொங்கும் வண்ணப் படத்தின் மூலம் குறைகளையே காணவொட்டாமல் செய்திருக்கிறார்கள். கர்ணன் பாத்திரத்துக்கே ஏற்றம் தரும் விதத்தில் சிவாஜி கணேசன் நடித்திருக்கிறார். தேர்ப் பாகன் மகன் என்று மாமனார் இழித்துப் பேசிய போது சிங்கம் போல் உறுமிச் சிங்கச் சிலையை நொறுக்கித் தள்ளுவது சிவாஜியின் வீர நடிப்புக்கு ஒரு தனிச் சிறப்பு. தன்னை ஈன்றவள் குந்தி தேவி என்று அறிந்து, கர்ணன் நெகிழ்ந்து போகும் சந்தர்ப்பத்தில் எல்லாரையும் நெகிழச் செய்கிறார் சிவாஜி. தாயை அறிந்து கொண்டதனால் ஏற்பட்ட மகிழ்ச்சி, அவளை நேரில் கண்டதனால் ஏற்பட்ட உள்ள நெகிழ்ச்சி, இவ்வளவுக்கும் பிறகு எதுவும் செய்ய முடியாத நிலையினால் ஏற்பட்ட அதிர்ச்சி—இவைகளை யெல்லாம் அந்தக் கட்டத்தில் காண முடிகிறது. போர்க்களத்தில் வீர சொர்க்கம் புகுந்து விட்ட மகனைத் தன் கரங்களில் ஏந்தி, அவனைக் கொன்றவனைக் கொல்வேன் என்று கர்ணன் மெய்ம் மறந்து சூளுரைக்கும்போது நம் மெய் சிலிர்க்கிறது.

கர்ணனின் மனைவியைப் பற்றிக் கர்ண பரம்பரைக் கதைகள்தான் ஆதாரம். கர்ணனை அவளே தேர்ப் பாகன் மகன் என்று வெறுத்ததாக ஒரு கதை— ''தேரோட்டி மகன்'' நாடகத்தில் அந்தப் பாத்திரத்தை அவ்விதம்தான் புனைந்திருக்கிறார்கள். ''கர்ணன்'' படத்தில் அவளை உத்தமியாகக் காட்டியிருக்கிறார்கள். அவளுக்குப் பதிலாக அவள் தகப்பன்தான் கர்ணனை வெறுக்கிறான். தேவிகா கர்ணனின் மனைவி. காதல் கட்டங்களில் கொஞ்சிக் குலாவி, ஆறு தடவை உடையை மாற்றிக் கலையழகாக நல்ல பெயரைத் தட்டிக் கொள்கிறார்!

அசோகன் துரியோதனனாக வந்து நன்றாக நடித்திருக்கிறார். துரியோதனன் மனைவி பானுமதியின் பாத்திரம் சாவித்திரிக்குப் பொருத்தமாக இருக்கிறது. குறைவாகக் கிடைத்த பாகத்தை நிறைவு செய்திருக்கிறார் சாவித்திரி. டி. எஸ். முத்தையா சகுனி. நல்ல நடிப்பு. பீஷ்மர் பாத்திரமும் சிறப்பாக அமைந்து விட்டது. என். டி. ராமாராவுக்கு ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவாக நடிக்க நல்ல வேடப் பொருத்தம் இருக்கிறது. எம். வி. ராஜம்மாவுக்குக் குந்தி தேவியின் பாகம் மிகவும் பொருத்தமானது. சக்தி கிருஷ்ணசாமியின் வசனம் கர்ணனுக்கு ஏற்ற கம்பீர நடையில் அமைந்திருக்கிறது.

உணர்ச்சி மிகுந்த கதையில் சிரிப்பு எதற்கு என்று நினைத்து விட்டார்கள் போலும்! படத்தில் சிரிப்புக் காட்சியே இல்லை. சண்டைக் காட்சிகளை விசேஷமாகச் சொல்வதற்கில்லை. கர்நாடக மெட்டுக்களில் பாடல்கள் போடப்பட்டிருக்கின்றன. மனத்தில் பதியும் படியாக ஒரு பாட்டுக்கூட அமையாதது வருந்தத் தக்கது. சிறப்பான காட்சி ஜோடனைகளும், வனப்பான வண்ணக் காட்சிகளும், எடுப்பான நடிப்பும் ''கர்ண''னுக்குக் கைகொடுத்துவிட்டன.

—காந்தன்



நடப்பவைதான்; நம்புங்கள்!

'ஒரு நாய் ஒரு மனிதனைக் கடித்தது என்பது செய்தி அல்ல. ஒரு மனிதன் ஒரு நாயைக் கடித்தான் என்பதுதான் செய்தி' என்று தினசரிப் பத்திரிகை நிபுணர்கள் கூறுவது வழக்கம். இந்த உதாரணச் செய்தியைத் தோல்வியடையச் செய்யும் சம்பவம் ஒன்று தென் அமெரிக்காவில் நிகழ்ந்தது.

வான் டைக் என்பவர் தமது நண்பர் ஒருவருடன் பேசிக் கொண்டிருந்தபோது ஒரு பாம்பு அவர் கையைக் கடித்து விட்டது.




நண்பர் அவர் கைக்கு மருந்து போட்டுக் கொண்டிருந்த போது அந்தப் பாம்பு துடிதுடித்து இறந்துவிட்டதாம். இது எப்படி?

இந்தியா சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலத்தில் நடைபெற்ற ஒரு தேர்தலில் திருவல்லிக்கேணித் தொகுதியில் ஒரு காங்கிரஸ் கட்சிக்காரரும், ஒரு ஜஸ்டிஸ் கட்சிக்காரரும் போட்டி போட்டார்கள். ஒரு சமயம் ஜஸ்டிஸ் கட்சியைச் சேர்ந்த சிலர் கார்ப்பொரேஷன் ஜலதாரைக்கு மூடும் வட்ட வடிவமுள்ள இரும்பு மூடியை எடுத்துக் காங்கிரஸ் அபேட்சகர் தலை மீது போட்டார்களாம். கல் இரண்டாக உடைந்து போய் விட்டதென்று அப்போது ஊரெல்லாம் பேசிக் கொண்டார்கள்!

நான் உயர்ந்த கற்பனைச் செய்தி ஒன்று கூற முடியும்:

ஆஸ்பத்திரியில் பிரசவித்த பெண்ணும், அவள் குழந்தையும் சௌக்கியம். மருத்துவம் செய்த லேடி டாக்டர் வயிற்று வலியால் உடனேயே இறந்து விட்டார்!



'இந்தியா விந்தைகள் நிறைந்த நாடு' என்று வெள்ளைக்காரர்கள் சொல்வார்கள். ஆனால் உண்மையில் அமெரிக்காதான் அப்படிப்பட்ட நாடு. கிறிஸ்துமஸ் பண்டிகை சமயம் இரண்டு பாங்குகளில் இரண்டு பேர்கள் திருட முயன்றார்கள். ஆனால் அகப்பட்டுக் கொண்டார்கள்.

லெவின் என்ஷுகன், 'நான் பரம ஏழை. என் மனைவி கர்ப்பமாயிருக்கிறாள். என்னிடம் பணமில்லை. குளிர் காலத்துக்கு அவசியமான உடைகளும் கிடையாது. அதனால் திருடினேன்'' என்று குற்றத்தை ஒப்புக் கொண்டான். அவன் எந்தப் பாங்கியில் திருட முயன்றானோ, அந்தப் பாங்கு ஊழியர்கள் அவனுக்குக் கிறிஸ்துமஸ் இனாமாக ரூ. 250 அனுப்பினார்கள்.

பாண்டர் என்பவன் ஒரு பிளாஸ்டிக் பொம்மைக் கைத்துப்பாக்கியைக் காட்டி ஒரு பாங்கில் பணம் பறிக்க முயன்றான். அவன் ஓர் ஏழை என்று தெரிய வரவே பாங்கு உத்தியோகஸ்தர்கள் அவனைப் போலீஸில் ஒப்படைக்க முயற்சி செய்ய வில்லை. அதற்குப் பதிலாக அவன் கிறிஸ்துமஸ் பண்டிகை கொண்டாடுவதற்குப் போதுமான பணம் வசூலித்துக் கொடுத்தார்கள்.

இந்தச் செய்திகளைப் பற்றிப் படித்தபோது நியூயார்க் நகர மேயராயிருந்த பிரபல லா கார்டியா என்பவரைப் பற்றிய ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. அவர் மேயர் மட்டுமேயன்றி மாஜிஸ்டிரேட்டுங்கூட. ஒரு சமயம் அவர் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவனை விசாரித்தார். ''நான் இரண்டு நாட்களாகப் பட்டினி. பசி தாங்க முடியாமல் ரொட்டிக் கடையில் ரொட்டி திருடினேன்'' என்றான் அவன்.

இதைக் கேட்ட லாகார்டியா கோபமுற்று, ''அவமானம்! இந்த நியூயார்க் நகரில் ஒரு மனிதன் பசியைப் போக்கிக் கொள்ளத் திருட நேர்ந்ததென்றால் அதைவிடப் பெரிய அவமானம் நமக்கு வேறு வேண்டியதில்லை'' என்று கூறினார். பிறகு நீதி ஸ்தலத்தில் கூடியிருந்தவர்களைப் பார்த்து, ''இதற்காக எல்லோருக்கும் பத்து டாலர் அபராதம் விதிக்கிறேன்'' என்று கூறி விட்டுத் தம் பையிலிருந்து பத்துடாலர் நோட்டை எடுத்து வெளியே வைத்தார். எல்லாரும் அப்படியே கொடுத்தார்கள். வசூலான பணத்தை அந்த ஏழைக் குற்றவாளியினிடம் கொடுத்து அவனை விடுதலை செய்து அனுப்பினார்.

சீனப் பிரதமரான சூ என் லாய் என்பவரின் பெயர் உண்மையில் அது அல்ல, ஜோ என் லி. இப்படித்தான் உச்சரிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அவர் சமீபத்தில் எகிப்தில் அஸ்வான் அணைக்கட்டைப் பார்வையிட்டபோது அவரது மூக்கிலிருந்து இரத்தம் கசிந்ததைப் பற்றிப் பலமான ஆராய்ச்சிகள் நடைபெற்றன. அந்த அணைக்கட்டுக்கு ரஷ்ய உதவி கிடைத்ததால் ரஷ்யப் பண வாசனை மூக்கைப் பிளந்திருக்கும் என்றார்கள். ஆனால் மூக்கு வைத்திய நிபுணர்கள் மூக்குக்கும் அணைக்கும் 'அலர்ஜி' என்பது இல்லை என்கிறார்கள்.

நான் மேலும் ஆராய்ச்சி செய்த போது உண்மை தெரிய வந்தது. சீனாவில் ஹுவாய் என்று ஒரு பெரிய நதி இருக்கிறது. அதன்


குறுக்கே ஓர் அணைக்கட்டு கட்டியிருக்கிறார்கள். அந்த முயற்சியில் கிட்டத்தட்ட 16,000 எஞ்சினீயர்களும், 42,000 உத்தியோகஸ்தர்களும் மற்றும் பதினாயிரக்கணக்கான தொழிலாளர்களும் ஈடுபட்டார்களாம். சில வருஷங்களுக்கு முன் அந்த அணையை அயல் நாட்டுப் பத்திரிகை நிருபர்களை அழைத்துக் கொண்டு போய்க் காட்டினார்கள். அதைப் பார்த்தபோது நிருபர்கள் விழித்த கண் விழித்தபடி பேசத் தோன்றாமல் கல்லாய்ச் சமைந்து நின்றார்கள். ஏனென்றால், அந்த அணைக்கட்டு நமது கல்லணையை விட சர்வ சாதாரணமான ஒரு மண் அணைக்கட்டு. அஸ்வான் அணையுடன் ஜோ என் லி தமது ஊர் அணைக்கட்டை ஒப்பிட்டிருப்பார். ரத்தக்கண்ணீர் வந்தாலும் அதிசயமில்லைதானே!

கிரிக்கெட் பிரியர்களுக்கு வசதியாக இந்த வருஷம் தைமாதம்கூட சாவதானமாகச் சாயங்காலத்துக்கு மேல் பிறந்தது. அவசரம் அவசரமாகப் பூஜையை முடித்துக் கொண்டு ஸ்டேடியத்துக்கு ஓடாமல், பூஜையை நிம்மதியாக நிதானமாகச் செய்தார்கள். ஆனாலும் போலஸும் பாரிங்டனும் இவ்வளவு 'போர்' அடித்திருக்க வேண்டாம் என்பது தான் பெரும்பாலோரது அபிப்பிராயம். அவர்கள் அங்கே ஒவ்வொரு பந்துக்கும் முன்னாடி 'டெட் பாட்டை'க் காட்டியதால்தானோ என்னவோ பார்வையாளர்களில் சிலரும் பாடை கட்டி விளையாடினார்கள். ரகசியப் போலீஸார் சாதாரண உடையில் வந்து இவர்களைப் பிடித்துப் போனார்கள். மாஜிஸ்திரேட் அவர்களுக்குத் தலா ஒரு ரூபாய் அபராதம் விதித்தார். இந்த ரசக்குறைவான நிகழ்ச்சியைத் தவிர சிறுவர்களும் பெரியவர்களுமாய் மைதானத்துக்குள் நுழைந்து ஆட்டத்தின் சுவையைக் கெடுத்தார்கள். இவர்களில் ஒருவன் ரொம்பச் சாமர்த்தியமாகப் போலீஸாரை 'டபாய்த்'துக் கொண்டே ஓடினான். பத்துப் பன்னிரண்டு போலீஸாருக்குத் 'தண்ணீர் காட்டிய' அந்தத் 'தீரன்' கடைசியில் பிடிபட்டபோது போலீஸார் ஆத்திரத்துடன் அவனை நையப் புடைத்து விட்டார்கள். இதைக் கண்டு மற்றப் பார்வையாளர்கள் சும்மா இருப்பார்களா? பந்தலிலிருந்து மூங்கில்களை உருவிப் போலீஸார்மீது வீசினர். சற்றுநேரத்துக்கு ஏக ரகளையாகிவிட்டது.

இதன் விளைவாக மறு நாள் போலீஸார் யாருமே, மைதானத்துக்குள் நுழைந்து எவரையும் தடுக்கவில்லை; துரத்திப் பிடிக்கவுமில்லை. பிறகு கேட்க வேண்டுமா? பார்வையாளர்கள் 'பிட்'சில் அமர்ந்து 'பிக்னிக்' சாப்பிடாத குறைதான்!

நிர்வாகிகளுக்கு ஒரு யோசனை: அடுத்த டெஸ்ட் மாட்சின்போது பந்தலின் தூண்களில் ஆங்கிலத்திலும் தமிழிலுமாக இந்த வாசகம் எழுதப்பட்ட அட்டைகளைக் கட்டித் தொங்க விடுங்கள் : ''நீங்கள் உண்மையான கிரிக்கெட் அன்பராக இருந்தால் மைதானத்துக்குள் புகுந்து போக மாட்டீர்கள்.''

பாரிங்டன் — போலஸ் போர் நடைபெறுகையில் பார்வையாளர்கள், 'போர், போர்' என்றும், 'டவுன், டவுன்' என்றும் கத்தினார்கள்; டிரான்ஸிஸ்டர் ரேடியோவில் சினிமாப் பாட்டுக் கேட்டுத் தாளம் போட்டார்கள்; சினிமா 'பிட் நோட்டீஸ்'களை மடித்து ஏரோப்ளேன் பறக்க விட்டார்கள்; இத்தனை ஆர்ப்பாட்டமும் பாரிங்டனின் போருக்கு ஈடு கட்ட முடியவில்லை! பாரிங்டன் தாமே கொஞ்சம் கோமாளித்தனம் செய்து பார்த்தார். பாட்டைத் தலைகீழாகப் பிடித்தார்; அம்பயரைப் பார்த்து, 'ஆடுகிறீரா?' என்று கேட்டார்; காலில் அடிபட்டு விட்டது போல் நொண்டினார்.



''ஆளானப்பட்ட கடன்காரனுக்கெல்லாம் நாமம் போட்டிருக்கீங்களாமே? இந்த யானைக்குக் கொஞ்சம் பெரிய பட்டை நாமமா போட்டு உதவுங்களேன் ஐயா....!''

இந்தச் சமயத்தில் எனக்குப் பக்கத்திலிருந்தவர் பாரிங்டன் முன்பொரு முறை இங்கு வந்திருந்தபோது நடந்த ஒரு கதையைக் கூறினார். ஆங்கிலேயர் மட்டை பிடித்து ஆடிக் கொண்டிருக்கும்போது இடையில் தாக சாந்திக்குப் பானங்களை வண்டியில் வைத்துத் தள்ளிக் கொண்டு போனார்கள். எல்லாரும் வண்டியைச் சூழ்ந்து 'டிரிங்க்' அருந்திக் கொண்டிருக்கையில் வண்டிக்குள்ளேயிருந்து 'டபுடா' வென்று சத்தம் கேட்டதாம். என்னடாவென்று குனிந்து கதவைத் திறந்து பார்த்தால், உள்ளேயிருந்து சாட்சாத் பாரிங்டன் வெளிப்பட்டாராம்! எல்லாம் சரி. 'ஏ கிளாஸ்' பகளாபாத்துக்கு ஊறுகாய் மிளகாய் தொட்டுக் கொள்ளக் கொடுப்பதுபோல் பாரிங்டன் பிரமாதமாக ஆடி, கூடவே இந்தக் கோமாளித்தனங்களைச் செய்திருந்தால் சுவை கூடும். வெறும் ஊறுகாய் மிளகாயை எவ்வளவு சாப்பிட முடியும்? அந்த நிலையில்தான் இருந்தார்கள், சென்னை 'டெஸ்ட் கிரிக்கெட்' பிரியர்கள். மற்ற ஊர்களில் எப்படியோ? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்! —''காளி''

அத்தியாயம் முப்பது

காதல் வலை

வசந்தி தன் அக்காளைப் பார்ப்பதற்காக நர்ஸிங்ஹோமுக்கு வரும்போதெல்லாம் டாக்டர் ஜகந்நாதனைச் சந்திக்கத் தவற மாட்டாள். அவருடைய புத்தக அறைக்குச் சென்று அவருடைய நாவல்களைப் பற்றி மணிக்கணக்காக அவரிடம் தர்க்கம் செய்வாள்.

அவருடைய நாவல்களில் பெண்மையின் தன்மை, மனித தர்மம், கற்பு, கல்யாணம், குடும்பம், காதல் அன்பு, பாசம், சமூக லட்சியங்கள், சமத்துவம், சகோதரத்துவம், தேசியம் முதலானவற்றையெல்லாம் பரிகாசப் பொருள்களாக்கி அவர் எழுதி வருகிறார் என்றாலும் புரட்சிகரமாகப் புரட்டும் அவருடைய அறிவுக் கூர்மையில் பளிச்சென்று ஒரு கவர்ச்சியும் குடிகொண்டிருந்தது. அவரோடு பழகப் பழக அவரது அறிவு விலாசத்தில் வசந்திக்கு இனம் புரியாத ஒரு லயிப்பும் உண்டாயிற்று. அவருடன் பேசிக்கொண்டிருந்தாலே பொழுது போவது கூடத் தெரியாது! ஜகந்நாதனின் விஷமப் புன்முறுவல், குறும்புத்தனப் பார்வை, கிண்டல் பேச்சு, குதர்க்க வாதம், கோணல் விமர்சனம் முதலானவை கூட வசந்தியை வசீகரிக்க முயன்றன. அதற்காகச் சுதந்திரப் பிரியையான அவள் தன் மீதே கோபப் பட்டாள். தன்னையும் மீறித் தன் பெண் உள்ளம் மெல்ல மெல்ல அவரிடம் நழுவிப் போய் விடுமோ என்று தன் மனத்துக்குள்ளாகவே போராடினாள். ஆனால் அந்த விஷயத்தில் ஜகந்நாதன் அவளுக்குச் சிறிது சிரமம் கூட வைக்க



குண்டு மல்லிகை

அரு. ராமநாதன்

வில்லை. வசந்தி தன்னிடம் வரும்போதெல்லாம் அவர் ஒரு முழம் தள்ளி நின்றே பேசினார். இந்த உலகில் எதையும் பொருட்படுத்தாத அலட்சியவாதியான ஜகந்நாதன் தன் பெண்மையையா அலட்சியப்படுத்துகிறாரோ என்று நினைத்தபொழுது வசந்தியின் பெண் உள்ளம் இன்னொரு புறம் துணுக்குற்றது. ஜகந்நாதனின் அறிவின் மீதே கோபம் கோபமாக வந்தது.

''ஸார்! நீங்கள் பிரமாதமான அறிவாளி போல் புரட்சிகரமான கருத்துக்களை யெல்லாம் உங்கள் நாவலில் புகுத்துகிறீர்கள். ஆனால் அவையெல்லாம் வெறும் பிதற்றல்களாகவும், முன்னுக்குப் பின் முரணான கருத்துக்களாகவுமே இருக்கின்றன!'' என்று வசந்தி அவருடைய இலக்கிய சிருஷ்டிகளை அலட்சியம் செய்ய முயன்றாள்.

''எதற்றும் எதிர்வாதம் செய்யக்கூடியநிலையில் அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அறிவு என்பது வளைந்து கொடுக்க வேண்டிய ரப்பராக இருக்க வேண்டுமே தவிர, வளையாத இரும்பு ஆயுதமாக இருந்தால் சீக்கிரம் அது உடைந்து விடும் அல்லது கூர்மை மழுங்கிவிடும்!'' என்று சிரித்துக்கொண்டே சொன்ன ஜகந்நாதன், ''அதிருக்கட்டும் வசந்தி, என் நாவல்கள் எல்லாவற்றையுமே நீ படித்திருக்கிறாயோ?'' என்று கேட்டார்.


''ஒரு வரிகூட விடாமல் மனப்பாடம் செய்திருக்கிறேன் சார்! ஒவ்வொரு வரிக்கும் எதிர்வாதமும் எழுப்புவேன், ஸார்!'' என்று வசந்தி ஒரு குறும்புச் சிரிப்புடன் சொன்னாள்.

''என் எழுத்துக்களிலே முன்னுக்குப் பின் முரணை நீ எப்படிக் கண்டு பிடித்தாய்?''

''அதற்குப் பூதக் கண்ணாடி தேவையில்லை ஸார்! கொஞ்சம் சுய மூளையை உபயோகித்தாலே பளிச்சென்று நன்றாகப் புரிந்து விடும்!''

''உதாரணமாக.....?''

''நீங்கள் எழுதிய யந்திர மனிதன் என்ற நாவலை எடுத்துக் கொள்வோம்! அதில் யந்திர நாகரிகத்தையும், விஞ்ஞான வளர்ச்சியின் சாதனைகளையும், புதுமை இலட்சியங்களையும், உலகத்தின் முன்னேற்றத்தையும் பரிகாசமாகத் தாக்கி எழுதியிருக்கிறீர்கள்! விஞ்ஞான சாதனைகளால் மனித சமுதாயத்துக்குப் பயனில்லை என்று கருதுகிறீர்கள். இல்லையா ?''



''ஆமாம்! விஞ்ஞான வளர்ச்சி என்பது புதுமையான யுத்தக் கருவிகளைக் கண்டுபிடித்து உலக முழுவதையும் நிரந்தர பயத்துக்கும், ஸ்திரமற்ற தன்மைக்கும் ஆளாக்குவது! நவீன வசதிகள் என்ற பெயரில் புதிய சாதனைகளை உற்பத்தி செய்து குவித்து மனிதனை மேலும் மேலும் சோம்பேறியாக்குவது! தொழில் யுகத்தில் யந்திர முன்னேற்றம் என்பதோ, மனிதனை வெறும் இயந்திரமாகவும் ஜடமாகவும் மாற்றுவது! நாகரிகம் என்பதோ வாழ்க்கையின் தேவைகளைப் பெருக்கி மனிதனை அசக்தனாகவும், அதிகம் அதிருப்தியாளனாகவும் ஆக்குவது! அதையொட்டிய நவீன பொருளாதார சித்தாந்தங்களோ பெருமளவு பித்தலாட்டத்துக்குப் பெருவாரியானவர்களை இரையாக்குவது!''

''ஸார்! நீங்கள் ஒரு டாக்டராக இருந்தும் விஞ்ஞானத்தின் மூலம் அதியற்புத மருந்துகளையெல்லாம் கண்டுபிடிக்கிறார்கள் என்பதைக்கூட நீங்கள் யோசிக்கவில்லை!''

''வசந்தி! புதுப் புது மருந்துகளைக் கண்டுபிடிக்கக் கண்டுபிடிக்கப் புதுப் புது வியாதிகளின் பெயர்கள்தான் பெருகுகின்றனவே தவிர, இந்த உலகத்தைவிட்டே வியாதிகள் ஒழிந்ததாகவோ ஒழியக் கூடியதாகவோ தெரியவில்லை! மனிதன் தன் விஞ்ஞான அறிவின்மூலம் எத்தனையோ சாதனைகளைக் கண்டுபிடித்தாலும் எல்லாவற்றுக்கும் மேலான இயற்கையின் இயக்கத்தை அவை கட்டுப்படுத்த முடியாது என்பதைத்தான் அது சுட்டிக் காட்டுகிறது!''

''விஞ்ஞான அறிவைவிட இயற்கை தர்மம்தான் பெரிது என்கிறீர்கள்? புதுமையைப் பழித்துப் பழமையைப் போற்றுகிறீர்கள் இல்லையா? ஆனால் 'தர்ம தேவதையின் கைதிகள்' என்ற உங்கள் நாவலில் பழமையைப் பரிகசித்து எழுதியிருக்கிறீர்கள்!''

''பழமை என்ற பெயரால் பொருந்திவராத சம்பிரதாயங்களுக்கோ, புதுமை என்ற பெயரால் போலியான லட்சியங்களுக்கோ மனிதன் தன் சுதந்திரத்தை இழந்து அடிமையாகி விடக் கூடாது என்பதுதான் அதன் அர்த்தம். ஏனெனில், சுதந்திரம் ஒன்றுதான் மனிதனின் அந்தராத்மா! அது ஒன்றுதான் அவனுடைய வாழ்வும், நிவாரணமும், மோட்சமும் ஆகும்! பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் அந்தச் சுதந்திரம் இயற்கையிலேயே வரப்பிரசாதமாகக் கிடைத்திருக்கின்றன! ஆனால் மனித இனம் ஒன்றுதான் அந்தச் சுதந்திரத்தை உணரவோ, அடையவோ, காப்பாற்றிக் கொள்ளவோ அரும் பாடு படவேண்டியிருக்கிறது. ஏனெனில் மனிதனுக்கு விசேஷமாகப் படைக்கப்பட்ட ஆறாவது அறிவு எனப்படும் பகுத்தறிவுதான் அவனது ஆத்ம சுதந்திரத்துக்கு விதம் விதமான தளைகளையும் தடைகளையும் உற்பத்தி செய்கின்றன!''

''பிரமாதம் ஸார்! எந்த ஜீவனும் எந்த நிலையிலும் தன் சுதந்திரத்தை இழக்கக் கூடாது. ஆனால் உலகம் தோன்றிய நாள் முதலாகப் பெண் தன் சுதந்திரத்தை இழந்து ஆணுக்கு அடிமைப்பட்டே இருந்து வருகிறாள். ஆடவனின் பகுத்தறிவுதான் பதிபக்தி, அச்சம் மடம், நாணம், கற்பு முதலான பதங்களையெல்லாம் தந்திரமாகச் சிருஷ்டித்துப் பெண்ணின் சுதந்திரத்தைப் பறிமுதல் செய்து அவளை அடிமை நிலையிலேயே அடக்கியாளப் பார்க்கிறது சார்! உங்கள் சுதந்திரக் கொள்கையை மட்டும் நான் ஒப்புக் கொள்கிறேன்! பார்த்தீர்களா, இந்த ஒரு விஷயத்திலாவது நம் இருவர் அபிப்பிராயமும் ஒரே மாதிரியாக இருக்கிறது!'' என்று வசந்தி சிரித்தாள்.

''இல்லை, வசந்தி! நீ சொல்லுகிற சுதந்திரம் தன்னிச்சையையும், தன் நினைவையும் நிலைநிறுத்துவது! நான் சொல்லுகிற சுதந்திரமோ தன் உணர்வையே துறப்பது! எதையும் பிரதிபலிக்கக் கூடிய ஸ்படிகமாக விளங்குவது!''

'' அது ஆத்மவாதிகளுக்குத்தானே ஸார் சாத்தியம்?''

'' ஆத்மவாதிகள் மட்டும் அல்ல, வசந்தி! அயோக்கியர்கள் கூட அதை ஒரு கலையாக அப்பியசிக்க முடியும்!'' என்று ஜகந்நாதன் சிரித்தார்.


''அகப்பற்று அறுத்தல் என்ற ஆத்மீகக் கலையை நீங்கள் அப்பியசித்திருக்கிறீர்களா டாக்டர்? நான் என்ற தன் உணர்வே உங்களுக்கு இல்லையா ?''

''ஆமாம்! நான் என்ற உணர்வைத் துறக்கும்போதுதான் மனிதன் விரிவடைகிறான். அவனுக்கு ஆவலாதிகள் இல்லை, துக்கங்களும் இல்லை. எப்போதும் ஆனந்தமான சுதந்திர புருஷனாகவே சஞ்சரிக்கிறான். அத்தகைய நிலையை நானும் அடைந்திருக்கிறேன். இனி நான் மாய வலைகளுக்கோ அடிமைத் தளைகளுக்கோ ஆளாக மாட்டேன்!''

''அப்படியென்றால்....''

''காதல் வலைகளுக்கோ, கல்யாணப் பந்தங்களுக்கோ நான் ஆளாகி அவஸ்தைப்பட மாட்டேன்!''

''காதல் என்பது ஒரு வலையா சார்?''



(படம் திரையிட்ட தினம்) தியேட்டர் முதலாளி: என்ன சார்! நாலைந்து ஷோ டிக்கட்டுகளாவது கொடுத்துத் தொலைத்திருக்கக் கூடாது...?

''ஆமாம்! கைகூடும் வரை அது ஒரு வலை! கைகூடியபின் அதுவே ஒரு கட்டுத் தளை!'' என்று ஜகந்நாதன் தம் வாக்குச் சாதுரியத்தைத் தாமே வியந்து கொள்பவர்போல் சிரித்தார்.

வசந்தி யோசித்தாள். ஜகந்நாதனைக் குறுகுறுவென்று பார்த்தாள்.

''ஸார்! காதலுக்கு உங்கள் நாவல்களில்தான் இடம் உண்டே தவிர, உங்கள் உள்ளத்தில் இடமே ஏற்படாதா?'' என்றாள் வஸந்தி.

''என்னைப் பொறுத்த வரையில் எத்தனையோ பெண்கள் என்னைக் காதலிக்கலாம்! ஆனால் ஒருத்தியைக் கூட நான் காதலிக்கப் போவதில்லை! ஒருத்தியின் காதலுக்கும் இடமளிக்கப் போவதில்லை! ஏனெனில், கொஞ்சம் இடமளித்து விட்டால் போதும். உடும்பு போல் பிடித்துக் கொண்டு உயிருள்ள வரையில் தன் காதலுக்கு என்னை ஓர் உரைகல்லாக உபயோகப்படுத்தி அவஸ்தைப்படுத்திக் கொண்டே இருப்பாள்!'' என்று ஜகந்நாதன் சொல்லி விட்டு, வசந்தியைப் புன்முறுவலுடன் பார்த்தார்.

வசந்தியின் நெஞ்சம் துணுக்குற்றது. இப்படிப்பட்ட அறிவாளியைத் தன்னிடம் மயங்கவும், தன்னை நினைத்து ஏங்கவும் வைத்து வேடிக்கை பார்க்க வேண்டுமென்று அவளுடைய புரட்சி உள்ளம் துடிதுடித்தது. தன் கல்லூரித் தோழிகளிடம் பெண்களின் சுதந்திரத்துக்காகப் பிரமாதமான லட்சியங்களையெல்லாம் முழங்கிய அவள், காதலை ஒரு விளையாட்டு வேடிக்கையாகவும், ஆண்கள் உள்ளத்தை அதற்குரிய விளையாட்டு மைதானமாகவும் கருதி, சாகஸமான ஒரு சிரிப்பு, சரளமான ஒரு பேச்சு, அல்லது சரிவான ஒரு சிறு பார்வையின் மூலமே எத்தகைய அறிவாளியான ஆடவனையும் மகா முட்டாளாக்கிவிட முடியும் என்று தனக்குள் ஒரு சித்தாந்தத்தையும் உருவாக்கிக் கொண்டிருந்தாள் அல்லவா? அதன் பரீட்சைக்கு முதல் பலியானவன் பக்கத்து வீட்டு வாலிபன் சங்கர் என்றாலும், அவன் அறிவாளியல்ல! சர்வ சாதாரண ஓர் உணர்ச்சியாளன்! அவனைக் காதல்பித்தனாக்கிக் கைகொட்டிச் சிரித்தது பெரிய வெற்றியல்ல! உணர்ச்சிக்கு ஆளாகாதவர் என்றும், காதலுக்கே இடமளிக்கப் போவதில்லை என்றும் ஜம்பமாகக் கூறிக்கொள்ளும் இந்த டாக்டர் ஜகந்நாதன்தான் அந்தப் பரீட்சைக்கு உரைகல்லாக உபயோகப்படக் கூடிய சரியான அறிவாளி! இவரையும் அந்தச் சங்கரைப்போல் ஏங்கி அழ வைப்பதுதான் பெரிய வெற்றி! இவ்வாறு வசந்தி தீர்மானித்துவிட்டாள்.

அதன் பிறகு அந்த வெற்றிக்குரிய வழி வகைகளையும் விளையாட்டுத் தந்திரங்களையும் கையாள வேண்டியது தானே?

வசந்தி விதம்விதமான ஆடையலங்காரங்களெல்லாம் செய்துகொண்டு அடிக்கடி ஜகந்நாதனின் புத்தக அறைக்கு வந்து அவரை விவாதத்துக்கு இழுத்து அவருடைய விழிகளையும் இழுக்க முயன்றாள். ஒரு நாள் பாவாடையும், ரவிக்கையும், தாவணியும் ஒரே ரோஸ் நிறத்தில் இறுக்கமாக அணிந்து வந்து ரோஜா மொட்டுப் போல் பூரித்து நின்றாள். இன்னொரு நாள் பச்சை நிறத்தில் பட்டாடைகளைத் தளதளவெனத் தரித்து வந்து, பசும் பூங்கொடி போல் அசைந்து ஆடினாள். இன்னொரு நாள் வெள்ளை நிறத்தில் ஆடைகள் உடுத்தி வெள்ளைத் தாமரை சரஸ்வதி போல் வந்து இதயத்தில் வீணகானமிட்ட முயன்றாள். இன்னொரு நாள் பைஜாமாவும் கம்மீஸும் அணிந்து பஞ்சாபிப் பெண்ணைப் போல் வந்து பம்பரமாகச் சுழன்றாள். ஒரு சமயம் குதிரை வால் கொண்டை போட்டுக் கொய்யாப் பழம் போல் குலுங்கினாள். இன்னொரு சமயம் இரட்டைப் பின்னல் இரண்டும் முன்புறம் கதிராட இளங் கன்றுபோல் துள்ளி வந்தாள். தன் வனப்



''என்ன ஸார்! உங்களுக்குத் தலை யைத்தானே வெட்டணும்; இதோ வந்து விட்டேன்.''

பெல்லாம் கண்களைக் கவ்வும்படி கவர்ச்சி கரமான கோணங்களில் நெளிந்தாள். ஓர விழிப் பார்வைகளை அதிகமாக உதிர்த்து அடிக்கடி களுக்கென்று சிரித் தாள். நாவலின் கதாபாத்திரங்களைப் பற்றி வாதிக்கும்போது முக்கியமாகக் காதல் கட்டங்களைப் பற்றியே சுவாரசிய மாகப் பேசினாள்.

ஆனால் அவள் எத்தனை சாகஸங் களைக் கையாண்டாலும், எத்தனை விதமான ஆடையலங்காரங்கள் செய்து கொண்டு வந்தாலும் ஜகந்நாதனின் விழிகள் அசையவில்லை. ரசனையே இல்லாதவர் போலவும், சூழ்நிலையை உணர முடியாத அறிவு மூட்டை போல வுமே விளங்கினார்.

'தன்னை வெறும் ஜடம் என்று நினைத்து விட்டாரா.....? தன்னிடம் கவர்ச்சி எதுவும் இல்லையா...?' வசந்தி யின் இளமை உள்ளம் கொந்தளித்தது. ஆத்திரத்தில் அழுகை கூட வந்து விடும் போல் இருந்தது. ஆனால் அவள் ஒரு வீராங்கனையானதாலும், தன் வீரப் பிரதிக்ஞையை எப்படியும் நிறைவேற் றப் போகிறவளாதலாலும் தன் அழு கையை அடக்கிக் கொண்டாள்.

''ஸார்! உங்கள் நாவல்களில் நீங்கள் கையாளுகிற காதல் திருப்பங்கள் சரி யல்ல! வெறும் அறிவைக் கொண்டு காதலை அளந்து விடவும் முடியாது! உதாரணமாக 'அரசியல் சந்தை' என்ற உங்கள் நாவலில் ஸ்வர்ணா என்ற ஓர் அறிவியல் மங்கையைச் சிருஷ்டித் திருக்கிறீர்கள்! அரசியல் உலகில் அறி மேதையாக உலாவும் அந்தப் பெண் கடைசி வரையில் கலியாணம் செய்து கொள்ளாமல் கன்னியாகவே கழிக்கத் தீர்மானித்தாள் என்றும் வர்ணித்திருக் கிறீர்கள். அந்தப் பாத்திரம் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. ஆனால்.... ஆனால்......'' என்று குழறிய வசந்தி, ''அத்தகைய புத்தி சாதுரியமுள்ள ஓர் இளம் பெண் தன்னையும் மறந்து வய தான ஓர் அறிஞரிடம் தன் உள்ளத் தைப் பறி கொடுத்து விடுவாள்!'' என்று ஒரு மணிவாசகத்தையும் வெகு சாதுரிய மாக உதிர்த்தாள் — அறிஞரின் உள்ளத் தைத் தொடும் விதமாக.

''இல்லை! அறிவாளியிடம் அசட்டுப் பெண்தான் மயங்குவாள்! புத்தியுள்ள பெண்ணாக இருந்தால் படிக்காத முட் டாளையோ படித்த முட்டாளையோதான் அடைய விரும்புவாள். ஏனென்றால், முட்டாள்தான் அவள் இஷ்டப்படியெல் லாம் ஆடுவான்! அறிவாளி அவ ளுடைய குணத்துக்காக அசைந்துகூடக் கொடுக்க மாட்டான்!'' என்று ஜகந் நாதன் சிரித்தார்.

வசந்தி வெடுக்கென்று அவரை உற் றுப் பார்த்தாள்.

''என்ன குழந்தே! அப்படிப் பார்க் கிறாய்...?''

வசந்தியால் பொறுக்க முடியவில்லை.

''என்னைக் குழந்தை, குழந்தை என் கிறீர்களே, நான் என்ன கைக் குழந் தையா? இளாஸ்கோ பேபியா?'' என்று வசந்தி சீறினாள்.

''நீ குழந்தை உள்ளம் படைத்த சின்னப் பெண்தானே?'' என்று ஜகந் நாதன் மெல்லச் சிரித்தார்.

வசந்தி யோசித்தாள். பாவாடை தாவணியும், பைஜாமாவும், கம்மிசும் அணிந்து வருவதால் தன்னைச் சின்னப் பெண் என்று நினைக்கிறாரோ....?

மறு நாள் வசந்தி தன் அக்காவிடம் சென்று, ''அக்கா, அக்கா!'' என்று கெஞ்சிக் கூத்தாடி, தன் அக்காவைப் போலவே தனக்கும் எளிமையான புடை வையை உடுத்திவிடச் சொல்லி, அஜந் தாக் கொண்டை போட்டு, அதில் மல் லிகைப் பூச் சரத்தைச் சுற்றிக் கொண்டு வெகு அடக்கமாகவும் அமைதியாகவும் ஆழ்ந்த உணர்வுகளுடன் அஜந்தா ஓவியம் போல் வந்து நின்றாள்.

ஆனால் அவள் எதிர்பார்த்தபடி அவளுடைய புதிய தோற்றத்தைக் கண்டு ஜகந்நாதன் சிறிதும் பிரமித்து விடவில்லை. புதிய கோணத்தில் அர்த்த புஷ்டியோடு உற்றுப் பார்க்கவுமில்லை.

''வசந்தி! வேஷம் போட்டுக் கொள்வதால் மட்டும் நபர் மாறி விடுவதில்லை. இது போன்ற மாறுவேஷங்கள் துப்பறியும் கதைகளில்தான் சாத்தியம்! உன் அக்காவைப் போல் நீ புடவை கட்டிக் கொண்டு அடக்கவொடுக்கமாக வந்து நின்றாலும், உன் பாட்டியைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு, 'சிவா, ராமா' என்று ஆர்ப்பாட்டமாக வந்து நின்றாலும் நீ விளையாட்டுக் குழந்தைதான்!'' என்று பரிகாசம் செய்த ஜகந்நாதன் மேலும் சிரித்துக் கொண்டே, ''இன்னொரு விஷயம் வசந்தி! 'ஆண்களை வெல்லுவதற்குப் பெண்கள் கையாளும் ஆயுதங்கள் அவர்களுடைய ஆடைகள்தான்! அவர்கள் பயிலும் ஆயுத சாலை அலங்கார மேஜைதான்!' இந்த மேல்நாட்டுப் பொன்மொழியை நீ நிஜமென்று அநாவசியமாக நம்புகிறாய்! ஆனால் அது முட்டாள்களின் விஷயத்தில்தான் பலிக்கும். அறிவாளிகளைப் பொறுத்தவரை ஆடைகள் என்பவையே அர்த்தமற்றவை!'' என்றார் அழுத்தம் திருத்தமாக.

''எழுத்தாளர் ஸார்! பெண்களை வெறும் ஜவுளிக் கடைப் பொம்மைகள் என்று நினைக்கிறீர்கள். ஆனால் வருங்காலம் பெண்களின் யுகம் என்பதை மறந்து விடாதீர்கள்!'' என்று கூறிய வசந்தி, பெண்மைக்குக் கட்டியங் கூறுவது போலவும், ஆண்மைக்குச் சவால் விடுவது போலவும் ஜம்மென்று நிமிர்ந்து நின்றாள்.

''பெண்கள் யுகமா? அப்படியொரு யுகம் இருந்ததுமில்லை! இனி ஏற்படப் போவதுமில்லை! ஏனெனில் பெண் என்பவள் ஆதி முதல் அந்தம் வரை ஆணுக்காகவே படைக்கப்பட்டவள். ஆணுக்குள் ஒடுங்கித் தன்னை இழந்து விடுவதிலேயே அதிகச் சுவையும் ஆனந்த வாழ்வும், ஆழ்ந்த அமைதியும் காண்பவள்! ஆணிடம் அப்படித் தன்னை இழப்பதின் மூலம் தன் பாரங்களையெல்லாம் அவன் மீது சுமத்தி விடுவதால் அவள் நிம்மதியும், எளிமையும் மென்மையும் ஒருங்கே பெறுகிறாள்!''

''என்ன, ஆணுக்காகத்தான் பெண் படைக்கப்பட்டாளா?'' என்று வசந்தி உதடுகள் படபடக்கக் குமுறினாள்.

ஜகந்நாதன் சிரித்துக் கொண்டே, ''இன்னும் சொல்லப் போனால் பெண் என்பவள் வெறும் நிழல்தான்! அந்த நிழலை எட்டிப் பிடிக்க ஆடவன் முயன்றால் அவன் பிடிக்கு எளிதில் சிக்காதபடி அவள் விலகி விலகி ஓடுவாள்! அவளைப் பொருட்படுத்தாமல் ஆடவன் விலகிச் சென்றாலோ அவள் தன்னிடம் மயங்கித் தன்னைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காக அவன் பின்னாலேயே வளைய வளைய ஓடி வருவாள்! உதாரணமாக உன்னையே எடுத்துக் கொள்.....'' என்று கூறி முடிப்பதற்குள் வசந்தி குறுக்கிட்டுக் கூவினாள்: ''நான் அப்படிப்பட்ட பெண் அல்ல, ஸார்!''

''நீ எப்படிப்பட்ட பெண் என்பதும், உன்னுடைய புதுமை லட்சியங்கள் என்ன என்பதும் எனக்குத் தெரியும், வசந்தி! கீதை வழியே காதல் புரிவதுதானே உன்னுடைய பிரமாதமான சித்தாந்தம்?'' என்றார் ஜகந்நாதன்.

வசந்திக்குத் தூக்கிவாரிப் போட்டது! ''கீதை வழியே காதலா.....?'' என்று அவளுடைய வாய் குளறியது.

''ஆமாம்! உலக பந்தங்களுக்கும் துக்கத்துக்கும் மூல காரணம் உணர்ச்சிகளின் அறியாமைதான்! உணர்ச்சிகளுக்கு இடம் கொடுக்காமல், எதன் மீதும் பற்று வைக்காமல் தாமரை இலை மேல் தண்ணீர்போல் வாழ வேண்டும்! இல்லையெனில் வாழ்க்கை பாரமாகி விடும்! இவ்வாறு பகவத்கீதை ஓர் ஆத்மீகத் தத்துவத்தைப் போதிக்கிறது. அதை நான் உலக விவகாரத்தின் காரியசித்திகளுக்காகவும், கவலையற்ற வாழ்வுக்காகவும் உபயோகப்படுத்துகிறேன். நீயோ அதையே காதலுக்கு உபயோகப்படுத்திக் கீதை வழியே காதலுக்கு ஒரு புது இலக்கணம் கற்பித்தாய்! 'பெண்களாகிய நாம் பற்று வைக்காமலே பிறர் நம்மீது பற்று வைக்கும்படி செய்வோம்! அதாவது நாம் காதலிக்காமலே பிறர் நம்மைக் காதலிக்கும்படி செய்வோம்! விளைவை எதிர்பாராமலேயே விளையாடிச் சிரிப்போம்! பெண் அடிமைத்தனம் ஒழிய வேண்டும்! காதல், கலியாணம், குழந்தைகள் இம்மூன்றும்தான் பெண்ணை ஓர் ஆணுக்கு அடிமைப்படுத்துகின்றன. ஆனால் ஓர் ஆணுக்கு அடிமையாகும் அளவுக்கு நாம் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து விடக் கூடாது. பெண்களாகிய நம்மிடம் ஆண்கள்தான் மயங்கும்படி செய்ய வேண்டுமே தவிர, அவர்களிடம் நாம் மயங்கி விடக் கூடாது. ஓர் ஆடவன் நம் மீது காதல் பித்துக் கொண்டு தவிக்கும்படி தூண்டி விட்டு விட்டுத் தூர நின்று வேடிக்கை பார்க்க வேண்டுமே தவிர நாமே தூண்டில் முள்ளுக்கு இரையாகி விடக் கூடாது. இவைதானே உன் புதுமை முழக்கங்கள்?'' என்று கேட்டார் ஜகந்நாதன்.

(தொடரும்)



ஊழலை ஒழிக்க இதோ வழி

நாடோடி



அன்புள்ள அரசியல் தலைவர்களே! ஊழலை ஒழிக்க வேண்டும் என்று அல்லும் பகலுமாகப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். லஞ்சம் வாங்குகிறவர்களையும், கொடுக்கிறவர்களையும் கடுமையாகத் தண்டிக்கப் போவதாகக் கூட்டங்களில் முழங்கிக் கொண்டிருக்கிறீர்கள். ஊழல்களைக் கண்டுபிடிக்கத் தனிக் குழுக்கள் வேறு நியமிக்கப் போவதாகக் கூறிக்கொண்டிருக்கிறீர்கள்.

ஆனால், ஊழலை ஒழிக்க வெகு சுலபமான வழி இருக்க, எது எதையோ பேசி மண்டையை உடைத்துக் கொள்கிறீர்களே என்றுதான் வருத்தமாக இருக்கிறது.

ஊழலைக் கண்டுபிடிக்கக் குழுக்கள் நியமிப்பதாலேயே ஊழலைக் கண்டுபிடித்துவிட முடியும் என்று நினைக்கிறீர்களா? அந்தக் குழுவும் ஊழலாக நடக்காது என்று யார் கண்டார்கள்! பிறகு இந்தக் குழுவின் ஊழலைக் கண்டுபிடிக்க இன்னொரு குழு என்று குழுக்கள் அமைத்துக்கொண்டே போக வேண்டியதுதான்.

அப்படியானால் என்னதான் வழி?

நான் ஒரு வழி சொல்வேன். ஆனால் நீங்கள் அதைக் கேட்க மாட்டீர்கள்.

என்ன வழியா? ஊழல் ஏற்பட்டதற்கு எது காரணமோ அந்தக் காரணத்தை நீக்கி விடுவதுதான்.

நம் நாட்டில் ஊழல்கள் மலிந்து விட்டதற்கே காரணம் நாட்டில் ஏற்பட்டுள்ள கண்ட்ரோல்களும், கட்டுப்பாடுகளும் லைசென்ஸ் முறைகளும்தான். பல பொருள்களுக்கும் கண்ட்ரோல் ஏற்பட்டு விட்டால் தங்களுக்குச் சலுகை கிட்ட வேண்டும், அல்லது அளவுக்கு அதிகமாக அந்தப் பொருள்கள் கிட்ட வேண்டும் என்று நினைக்கிறவர்கள் மேலதிகாரிகளுக்கு ஏதோ ''சம்திங்'' கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். கட்டுப்பாடு இல்லாமல் இருந்தால் இந்த கையூ ஊழல்களுக்கு இடம் இருக்காது.

...ஏன், தலைவர்களே, முகத்தைச் சுளிக்கிறீர்கள்? நான் சொல்லும் உண்மைகள் கசப்பாக இருக்கின்றனவா?

ஆனால் உங்கள் கஷ்டங்களை நான் அறியாதவன் அன்று. கண்ட்ரோல்களில் உங்களுக்கு வேண்டியவர்கள் எத்தனையோ பேர்கள் இருப்பார்கள். அவர்களையெல்லாம் திடீரென்று போ என்று சொன்னால் அவர்கள் எங்கே போவார்கள்? அப்படிப் போகச் சொல்வதிலும் எத்தனையோ சங்கடங்கள் ஏற்படலாம்.

ஆகவே, கவலைப்படாதீர்கள். உங்களுக்குப் பிடித்த இன்னொரு வழியைச் சொல்கிறேன்.

நான் சொல்லும் வழி, நாட்டில் உள்ள ஊழல்கள் போதாது; அவற்றை இன்னும் அதிகரிக்க வேண்டும் என்பதுதான்.

இப்பொழுது சில பொருள்களுக்குத்தான் கண்ட்ரோல்கள் இருக்கின்றன. அந்த நிலை மாறி எல்லாப் பொருள்களுக்கும் கண்ட்ரோல்கள் வர வேண்டும். காகிதக் கண்ட்ரோலர் அதிகாரம் செலுத்தும் நம் நாட்டில் கத்தரிக்காய் கண்ட்ரோலரும் அதிகாரம் செலுத்த வேண்டும். இரும்புக் கண்ட்ரோல் உள்ள இடத்தில் கரும்புக் கண்ட்ரோலும் நிலவ வேண்டும்.

நாட்டில் ஒரு சாமானும் கண்ட்ரோலரின் அனுமதியின்றிக் கிடைக்கக் கூடாது. கண்ட்ரோலர்களைப் பார்த்து அனுமதி வாங்க வேண்டுமானால் எல்லோரும் டில்லிக்குத்தான் போக வேண்டும். அந்த டில்லிக்கும் ரயில் ஏற டிக்கட் வேண்டுமானால் அதற்கு டில்லியில் உள்ள ரயில்வே டிக்கட் கண்ட்ரோலரைப் பார்த்து ஏதாவது, ''சம்திங்'' கொடுத்தால்தான் முடியும் என்கிற நிலைமை ஏற்பட வேண்டும்.

இது மாதிரி எல்லாப் பொருள்களுக்கும் கண்ட்ரோல்கள் ஏற்பட்டு விட்டால் என்ன ஆகும் தெரியுமா?

கத்தரிக்காய்க் கண்ட்ரோலர் ஊழலாக நடந்து கொள்கிறார் என்று தெரிந்ததும், வாழைக்காய்க் கண்ட்ரோலர் தாமும் ஊழலாக நடந்து கொள்ள ஆரம்பிப்பார். இதைப் பார்த்துக் கண்டைக்காய் கண்ட்ரோலர் சும்மா இருப்பாரா? அவரும் தம் மாலும் ஊழலாக இருக்க முடியும் என்று காட்டிக் கொள்வார்.

இப்படியாக ஊழல் எல்லாத் துறைகளுக்கும் பரவின. பிறகுதான் மக்கள் லஞ்சத்தின் தீமைகளை உணர ஆரம்பிப்பார்கள்.

ஒரு கண்ட்ரோலரே இன்னொரு கண்ட்ரோலருக்கு ஏதாவது 'சம்திங்' கொடுத்துத்தான் காரியங்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்கிற நிலைமை ஏற்படும்பொழுது அதாவது, கத்தரிக்காய்க் கண்ட்ரோலருக்கு முருங்கைக்காய் கண்ட்ரோலரே ''சம்திங்'' கொடுக்க நேரிடும்பொழுதுதான், தாம் தினம் சம்திங் வாங்குவது எவ்வளவு தவறு என்பதை உணர்வார்.

இப்படி எல்லோரும் உணர ஆரம்பிக்கும் போது திடீரென்று ஒரு நாள் எல்லோரும் ஊழலைக் கைவிட்டு விடுவார்கள்.

''திடீரென்று எல்லாத் தொழில்களுக்கும் கண்ட்ரோலர்களை எப்படி நியமிப்பது? மக்கள் சண்டைக்கு வர மாட்டார்களா?'' என்று நீங்கள் கேட்கலாம்.

இதற்கு நான் கூறும் பதில் என்னவென்றால், நீங்கள்தான் இதற்கு ஒரு நல்ல வழி கண்டு பிடித்திருக்கிறீர்களே என்பதுதான். ஒவ்வொரு தொழிலாகத் தேசிய மயமாக்கலாமா என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே. அதுவே நிச்சயமாக உங்களை இந்த வழியில் கொண்டு சேர்க்கும். தேசிய மயம் என்றதும் கண்ட்ரோலர்கள் தன்னைப்போல் தோன்றி விடுவார்கள். ஆனால் ஒவ்வொரு தொழிலாகத் தேசிய மயமாக்காமல் ஒரே நாளில் எல்லாத் தொழில்களையும் தேசிய மயமாக்கிவிடுங்கள். அப்பொழுதுதான் நான் சொன்னது போல் எங்கு பார்த்தாலும் கண்ட்ரோலர்கள் தோன்றுவார்கள். ஊழல்கள் மலியும். பிறகு திடீரென்று ஒரு நாள் அத்தனை ஊழல்களும் மறைந்துவிடும்!

எப்படி என் யோசனை? இதற்கு எனக்குச் சன்மானமாக நீங்கள் எனக்குக் கத்தரிக்காய் கண்ட்ரோலர் பதவி கொடுத்தால் போதும். ஏனெனில் கத்தரிக்காய்த் துவையல் என்றால் எனக்கு உயிர்!

துப்புத் துலக்கினர்!



ராணி லக்ஷ்மிபாய்

இந்தியாவின் நிருவாகத்தைக் கிழக்கிந்திய கம்பெனியார் மேற்கொண்டிருந்த கடைசிக் காலத்தில், அதாவது 1857ம் வருஷம், சிப்பாய்க் கலகம் என்று சொல்லப்படுகிற சுதந்திரப் புரட்சி நடைபெற்றது. இந்தப் புரட்சியின் விளைவாகவே பிரிட்டிஷ் அரசாங்கத்தார், இந்தியாவின் நிருவாகத்தை, தாங்களே நேரடியாக மேற்கொண்டனர்.

கம்பெனியார் கடைப்பிடித்த நாடு பறிக்கும் கொள்கைதான் இந்தச் சுதந்திரப் புரட்சிக்கு மூலகாரணமாய் அமைந்தது. நேர் வாரிசு இல்லாமல் இறந்துவிட்ட மன்னர்களின் ராஜ்யங்கள் என்றும், சரியாக ஆளப்படாத ராஜ்யங்கள் என்றும் இப்படி ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி ஒன்றன்பின் ஒன்றாக அநேக ராஜ்யங்களைக் கம்பெனியார் தங்கள் ஆதிக்கத்துக் குட்படுத்திக் கொண்டு வந்தனர். கம்பெனியாரின் சார்பாக, இந்தப் புனிதமான கைங்கரியத்தில் தீவிரமாக ஈடுபட்டவன் — லார்டு டல்ஹவுஸி.

சிவாஜி மன்னன் நிறுவிய மகாராஷ்டிர சாம்ராஜ்யம், வரிசையாக வந்த பேஷ்வாக்களின், அதாவது பிரதம மந்திரிகளின் திறமையான நிருவாகத்தினால் உச்ச நிலையடைந்து, கடைசியில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சீர்குலைந்து விட்டது. கடைசி பேஷ்வா இரண்டாவது பாஜிராவ் என்பவன், 1818-ம் வருஷம் தன் நிருவாகத்துக்குட்பட்டிருந்த பிரதேசங்களைக் கம்பெனியார் வசம் ஒப்புவித்து விட்டு, கான்பூருக்கு அருகிலுள்ள ஒருகிராமத்தில் வசித்து வரத்தொடங்கினான். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பிரதேசங்களுக்குப் பிரதியாக, கம்பெனியார், இவனுக்கு வருஷந்தோறும் எட்டு லட்சம் ரூபாய் வீதம் பென்ஷன் கொடுத்து வரச் சம்மதித்தனர். இவனும் இந்தத் தொகையை வைத்துக் கொண்டு தான தருமங்களெல்லாம் செய்தும், ஏழை எளியவர்களை ஆதரித்தும் வந்தான்.

மாதவராவ் என்ற ஒருவர், தமது மனைவியுடனும், சுமார் இரண்டு வயது நிரம்பியிருந்த ஒரே ஆண் குழந்தையுடனும் பாஜிராவின் ஆதரவை நாடி 1827ம் வருஷம் மேற்படி கிராமத்துக்கு வந்து சேர்ந்தார். வந்த குழந்தையின் எடுப்பான தோற்றம் பாஜிராவைப் பெரிதும் கவர்ந்தது. அதனை முறையாகச் சுவீகாரம் எடுத்துக் கொண்டார்; அந்தக் குழந்தைதான் பிற்காலத்தில் சுதந்திரப் புரட்சியின் போது வீறுகொண்டெழுந்த நானா சாஹேப். துண்டு பந்த் என்றும் இவனை அழைத்தனர்.

மாதவராவ் தம்பதிகள் வந்த சுமார் பத்து வருஷங்களுக்குப் பிறகு காசிமாநகரிலிருந்து மோரோ பந்த் என்ற ஒருவர், தமது மனைவி பாகீரதிபாய் என்பவளுடனும், ஒரே பெண் குழந்தையுடனும் பாஜிராவின் ஆதரவு நிழலில் வந்து தங்கினார். அந்தப் பெண் குழந்தையின் பெயர் மனுபாய்; பிறந்தது 18–11–1835ல்.

மனுபாயின் முகத்தில் அந்தச் சிறு வயதிலேயே அழகும் வீரமும் கலந்து ஒளி வீசின. பாஜிராவின் பரிவாரத்தினர் அனைவரும் அவளிடத்தில் தனியன்பு செலுத்தினர். அவளைச் சபிலி என்று பரிவோடு அழைத்து மகிழ்ந்தனர். அதாவது பேரழகி என்று அர்த்தம்.

நானாவும் மனுவும் சகோதர உறவு பூண்டு நெருங்கிப் பழகி வந்தனர். பாஜிராவினுடைய ஏற்பாட்டின் பேரில், வில் வித்தை, வாட்போர், குதிரையேற்றம் முதலிய வீரர்களுக்குரிய பயிற்சிகளையெல்லாம் பெற்று வந்தனர். இந்தக் காலத்தில்



தாந்தியா தோபி என்ற ஓர் இளைஞன் இவர்களோடு வந்துசேர்ந்து கொண்டான். இவனும் சுதந்திரப் புரட்சியில் பங்கு கொண்டவனே.

மனுபாய், சிறு வயதிலேயே, ஜான்ஸி நாட்டு அரசனாகிய கங்காதரராவ் என்பவனுக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள். மணமானதும், இவள், ஜான்ஸியை அடைந்து, அரச காரியங்களைக் கவனிப்பதில் தன் கணவனுக்கு உதவியாக இருந்தாள். அப்பொழுது இவளுக்கு வழங்கப்பட்ட பட்டப் பெயர்தான் லட்சுமிபாய் என்பது.

துரதிர்ஷ்டவசமாக, கங்காதரராவ் 1853ம் வருஷம் சந்ததியில்லாமல் இறந்து போனான். லட்சுமிபாய் சுவீகாரம் எடுத்துக் கொள்ள விரும்பினாள். ஆனால் டல்ஹவுஸி இதற்கு இடம் கொடுக்கவில்லை. ஜான்ஸி ராஜ்யம் நேர் வாரிசு இல்லாத காரணத்தினால், கம்பெனியாரின் ஆதிக்கத்துக்குட்படுத்தப்படும் என்றும் லட்சுமிபாய்க்கு மாதம் ஐயாயிரம் ரூபாய் வீதம் பென்ஷன் கொடுக்கப்பட்டு வருமென்றும் தெரிவித்து விட்டான்.

லட்சுமிபாய், இந்த முடிவை எதிர்த்து இங்லாந்தில் உள்ள கம்பெனியின் டைரக்டர்களுக்கு அப்பீல் செய்து கொண்டாள். இதற்காக, ஜான் லாங் (John Lang) என்ற ஓர் ஆங்கிலேயனை வக்கீலாக அமர்த்தி, தன் கட்சி நியாயத்தை எடுத்துச் சொல்லச் செய்தாள். ஆனாலும் என்ன? டல்ஹவுஸி செய்த முடிவே சரியென்று சொல்லி விட்டார்கள் கம்பெனி டைரக்டர்கள்.

லட்சுமி பாய்க்கு இது பெரிய ஏமாற்றத்தை உண்டுபண்ணியது. ஆயினும், தனது கடமை இன்னதென்பதைத் தீர்மானித்துக் கொள்ள அவள் சிறிதும் தயங்கவில்லை. தன் அன்பிலே வளர்ந்து வந்த தாமோதர ராவ் என்ற பச்சிளம் பாலகனை முறைப்படி சுவீகாரம் செய்து கொண்டாள். அதே சமயத்தில், ''என்ன வந்தாலும் சரி; என்னுடைய ஜான்ஸியை நான் கைவிடப் போவதில்லை'' என்று சபதமும் செய்து கொண்டாள். இதை நிறைவேற்ற, தக்க தருணமும் 1857 ம் வருஷத்துச் சுதந்திரப் புரட்சியின் போது அவளுக்குக் கிடைத்தது.

மேற்படி வருஷம் ஜுன் மாதம் ஐந்தாந் தேதி, ஜான்ஸியிலிருந்த சிப்பாய்களும் மற்றவர்களும், கம்பெனியாரின் ஆதிக்கம் இனி செல்லுபடியாகாது என்று சொல்லிப் புரட்சிக் கொடி தூக்கி விட்டனர். இதற்கு நான்காவது நாள், அதாவது ஜுன் மாதம் ஒன்பதாந் தேதி, 'லட்சுமி பாயே இனி அரசி. அவள் அதிகாரமே இனி ஜான்ஸி முழுவதிலும் செல்லுபடியாகும்' என்று பிரகடனம் செய்து விட்டார்கள். இவளை 'எங்கள் ராணி' என்று அழைத்து மகிழ்ந்தார்கள். நாமும் இனி அவளை ராணியென்று இங்கே அழைத்துக் கொண்டு போவோம்.

ஜான்ஸியைப் போல் வட இந்தியாவில் உள்ள முக்கியமான நகரங்களிலெல்லாம் ஆங்கிலேயர்களுக்கு விரோதமான புரட்சிகள் கிளம்பின. இவைகளை அடக்கி ஒடுக்க ஆங்கிலேயர்கள் வெகு பாடுபட்டனர்.

ஜான்ஸியை நோக்கி, ஸர் ஹ்யூ ரோஸ் (Sir Hugh Rose) என்பவன் தலைமையில் ஒரு பெரும் படை புறப்பட்டது. ராணிக்கு இது தெரிந்ததும், ஜான்ஸியைச் சுற்றியுள்ள பயிர்ப் பச்சைகளையெல்லாம் அழிக்கச் செய்து விட்டாள்; நிழல் தரும் மரங்களை யெல்லாம் வெட்டி வீழ்த்தச் செய்தாள். சுருக்கமாக, ஆங்கிலப் படைகளுக்கு எவ்வித வசதிகளும் கிடைக்காமற்படி செய்து விட்டாள்; தவிர ஜான்ஸிக் கோட்டையைப் பலமாகப் பந்தோபஸ்து செய்தாள். இவைகளை யெல்லாம் அவ்வப்போது ஒற்றர்கள் மூலம் கேள்வியுற்று வந்த ரோஸ், கதிகலங்கிப் போய் விட்டான். ஆயினும் துரோகிகளான சில சிற்றரசர்கள், அவனுக்குத் தேவையான உதவிகளைச் செய்ய முன்வந்தனர். இந்தத் தைரியத்தில் அவன் முன்னேறி வந்து ஜான்ஸிக் கோட்டையைச் சுற்றி வளைத்துக் கொண்டான்.

ராணி, போர்த் தந்திரங்களை நன்கு அறிந்தவள். ஆதலின், முற்றுகையைச் சமாளிப்பதற்கான எல்லா வழிமுறைகளையும் வகுத்ததோடு தானே நேரில் கோட்டையின் பல பகுதிகளுக்கும் சென்று படை வீரர்களுக்கு உற்சாகமூட்டி வந்தாள். இரு தரப்புப் படைகளும் சளைக்காமல் இரவு பகலாகக் குண்டுகளைப் பொழிந்தவண்ணம் இருந்தன.

இரண்டு வார காலம் — 21—3—1858 முதல் 4—4—1858 வரை தொடர்ந்து முற்றுகை நடைபெற்றது. கடைசி நாள், கோட்டையின் பெரும் பகுதியும், ராணி வசித்துக் கொண்டிருந்த அரண்மனையும் ஆங்கிலேயர் வசப்பட்டு விட்டன.

இனி சமாளிக்க முடியாது என்று தெரிந்ததும், ராணி, நகரைத் துறந்து வெளியே செல்வது என்றும், சென்று, வேறு துணை சேர்த்துக்கொண்டு, ஆங்கிலேயர்களைத் திரும்பத் தாக்குவது என்றும் தீர்மானித்தாள். அப்படியே ஆண் உடை தரித்துக் கொண்டாள்; இடையில் உடைவாள்; தனது சுவீகாரப் புதல்வனை தாமோதர ராவை முதுகிலே பட்டுத் துணியால் கட்டிக் கொண்



டாள்; தனது பட்டத்துக் குதிரை மீது ஏறி அமர்ந்து அன்று 4–4–1858ல் இரவோடு இரவாக ஜான்ஸியை விட்டுப் புறப்பட்டாள். இவளுடைய உயிருக்கு உயிரான தோழியர் சிலரும் இவளைப் போலவே போருடை தரித்துக்கொண்டு புறப்பட்டனர்; படை வீரர்கள் சிலரும் தொடர்ந்தனர்.

செல்லும் போது, இவளையும் இவள் பரிவாரத்தினரையும் ஆங்கிலப் படைவீரர்கள் மூன்று இடங்களில் வழிமறித்தனர்.* அப்படி மறித்தவர்களில் பலரை, ராணி தன் உடைவாளுக்கு இரையாக்கி விட்டு முன்னேறிச் சென்றாள். இவளுடைய பரிவாரத்தினர் சிலர் உயிரிழந்தனர். இவளை ஏற்றி வந்த பட்டத்துக் குதிரை உடலிலிருந்து ரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. ஆயினும் எஜமான விசுவாசம் உள்ள அந்தக் குதிரை, அவளை நூற்றி இருபது மைல் தொலைவில் உள்ள கல்பி என்ற நகரத்துக்குக் கொண்டு போய்ச் சேர்த்தது. முந்திய நாள் இரவு புறப்பட்டவர்கள் மறு நாள் மாலை மேற்படி நகரத்தை யடைந்தார்கள் என்றால், குதிரையும் பரிவாரத்தினரும் எவ்வளவு வேகமாக வந்திருக்க வேண்டும் என்பதை நாம் ஒருவாறு ஊகித்துக் கொள்ளலாம். அங்கு சென்ற அந்தக் குதிரை, ராணி, தன் முதுகிலிருந்து இறங்கி விட்டாள் என்று தெரிந்ததும், கீழே விழுந்து இறந்து விட்டது. தன் எஜமானியிடத்தில் அது கொண்டிருந்த மெய்யன்பை என்னவென்று சொல்வது?

ராணி, கல்பி நகரம் போய்ச் சேர்ந்து விட்டாள் என்று தெரிந்து, ரோஸ் தன் படையுடன் அங்கு நோக்கிச் சென்றான். இவனை எதிர்த்துக் கடும் போர் நடத்தினாள் ராணி. இடையில் தாந்தியாதோபியும் ஒரு படையுடன் இவள் உதவிக்கு வந்தான். வந்து என்ன? 23–5–1858ல் ஆங்கிலப் படைகளுக்கு வெற்றி கிடைத்தது. ராணியும் தாந்தியாதோபியும் கல்பியை விட்டகன்று குவாலியர் ராஜ்யத்தை யடைந்தனர். ஆங்கிலேயர்களிடத்தில் விசுவாசம் காட்டி வந்த அந்த ராஜ்யத்துச் சிற்றரசனை விரட்டி விட்டு, கோட்டையையும் அங்கு சேமித்து வைக்கப் பட்டிருந்த ஏராளமான யுத்த தளவாடங்களையும் கைப்பற்றிக் கொண்டனர். அந்தச் சிற்றரசனுடைய படையின் பெரும் பகுதி இவர்கள் பக்கம் சேர்ந்து கொண்டது. இது கண்டு ராணி உற்சாகம் கொண்டாள்; ஆங்கிலப் படைகளை எதிர்க்க ஆயத்தமானாள்.

ரோஸ் இவளை விடவில்லை. தன் படையுடன் 16–6–1858ல் குவாலியரை அடைந்து முகாம் போட்டான். அப்பொழுது நல்ல கோடை காலம். ஆங்கிலத் துருப்புகள் வெயிலின் கடுமை தாங்க மாட்டாமல் தத்தளித்தன. இதைத் தெரிந்து கொண்ட ராணி, அன்று நல்ல உச்சி வேளையில் ஆங்கிலப் படைகளைத் தாக்கத் தொடங்கினாள். ஒரு குதிரையின் மீது அமர்ந்து, போர்க்களத்தின் பல பகுதிகளுக்கும் சென்று தன் படை வீரர்களை ஊக்கி வந்தாள். இவளே, தன்னுடைய வாளாயுதம் கொண்டு நூற்றுக் கணக்கான ஆங்கிலப் படைவீரர்களை மீளாத உலகத்துக்கு அனுப்பி வந்தாள். ஆங்கிலப் படைகள் இவளுடைய போர்த் திறத்தையும் அஞ்சாமையையும் கண்டு நிலை கலங்கி விட்டன. இவளை வெற்றி கொள்ள முனைந்து நின்ற ரோஸ்கூட ''புரட்சித் தலைவர்களுக்குள் ஜான்ஸி ராணி ஒருத்திதான், மிகச் சிறந்த, மிக்க வீரம் உள்ள ராணுவத் தந்திரங்களை நன்கு அறிந்தவளா யிருந்தாள்'' என்று இவளைப் புகழ்ந்து கூறினான்.

ராணியின் படைகளை நேர்முகமாகத் தாக்கி வெற்றி காண முடியாது என்று தெரிந்துகொண்ட ரோஸ், தன் யுத்த தந்திரத்தைச் சிறிது மாற்றிக் கொண்டான். தன் படையை இரண்டாகப் பிரித்து ஒரு பகுதியை ராணியின் படைக்கு முன் பக்கம் நிறுத்திப் போர் நடத்தும்படி செய்து விட்டு, மற்றொரு பகுதியைப் பின்புறமாக வந்து தாக்குமாறு சுற்றி வளைத்து அனுப்பினான். ராணியின் படைகள் முன்னும் பின்னுமாக நெருக்கப்பட்டன. சளைக்காமல் போராடியும் பலனில்லை. ஆயிரக்கணக்கான படைவீரர்கள் மடிந்தனர். ராணியின் குதிரையும் இறந்தது:

கடைசியில் ராணிக்குத் துணையாகச் சுமார் பதினைந்து பேர்களே எஞ்சி நின்றனர். இனிப் போரிட்டுக் கொண்டிருப்பதில் பயனில்லை என்று தீர்மானித்தாள். இந்தப் பதினைந்து பேருடனும், தன் அருமருந்தன்ன இரண்டு தோழியருடனும், குழந்தை தாமோதர ராவுடனும், போர்க் களத்தினின்று வெளியேறிவிட முயன்ற போது, ஆங்கிலப் படை வீரர்கள் குண்டுகளைப் பொழிந்தவண்ணம் இவளைத் துரத்திக் கொண்டு வந்தனர்; முன் பக்கமாகவும் சிலர் வந்து தாக்கினர். அவர்களைத் தன் வாளுக்கு இரையாக்கி விட்டு முன்னே சென்று கொண்டிருக்கையில், கூட வந்த ஒரு தோழியை, ஓர் ஆங்கிலேயன் சுட்டு வீழ்த்தி விட்டான். இதற்காக ராணி கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கவில்லை. அந்த ஆங்கிலேயனை வெட்டி வீழ்த்திப் பழி தீர்த்துக் கொண்டு முன்னே வேகமாகச் சென்றுகொண்டிருக்கையில், பின்பக்கத்திலிருந்து ஒரு குண்டு வந்து இவள் முதுகில் பாய்ந்தது. இனி தப்பிச் சென்று, உயிர் பிழைத்திருக்க முடியாது என்று தெரிந்து கொண்டாள். அப்பொழுதும் பதற்றமில்லாமல், அருகில் இருந்தவர்களைப் பார்த்து, ''நான் இறந்துவிட்டால் என் உடலை அந்நிய ஆங்கிலேயர்கள் தீண்ட விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்கள் கடமை; இந்த உதவியைத்தான் கடைசியாக உங்களிடமிருந்து நான் எதிர் பார்க்கிறேன்'' என்று கூறினாள். அவர்களும் அப்படியே செய்வதாக அவளுக்கு உறுதி கூறினார்கள்.

ராணி, தன் முதுகில் குண்டு பாய்ந்ததைப் பொருட்படுத்தாமல் மேலே சென்று கொண்டிருந்தாள். வழியில் ஒரு கால்வாய் குறுக்கிட்டது. மிகவும் குறுகிய கால்வாய்தான். ஆயினும் அதைத் தாண்ட மறுத்து விட்டது அவள் ஏறி வந்த குதிரை; அங்கேயே தடுமாறி நின்றது. அந்தச் சமயம் பார்த்து ஓர் ஆங்கிலேயன் கத்தியால் வெட்ட, அவளது வலது தோள் பட்டை சேதமடைந்தது; அவளது ஒரு பக்கத்துக் கண் அதிர்ச்சியால் தெறித்துக் கீழே விழுந்தது. இது தருணம் பார்த்து மற்றோர் ஆங்கிலேயன் அவளது தலை மீது

*அட்டைப் படம்: மணியம்.


உங்கள் கேசம் உதிருகிறதா?

இந்த மாதிரி அபாயக் குறிகள் அதை அறிவிக்கின்றன.



கேசம் உதிருதல்

உங்கள் ரோமம் உதிருகிறது, ஏனெனில், ரோமக்கால்களுக்குப் போதிய ஊட்டமில்லாததுதான்.



இளமையில் வழுக்கை

இந்நிலையை நீங்கள் அநேகமாகத் தவிர்த்திருக்கக்கூடும்

பொடுகு, ரோமம் உதிருதல் மற்றும் கேசம் குறைதல் முதலிய உபாதைகளால் நீங்கள் சிரமப்பட்டால் இன்றே ப்யூர் சில்விக்ரீன் உபயோகிக்கத் தொடங்குங்கள். ப்யூர் சில்விக்ரீனில் உங்கள் ரோமத்தின் வளர்ச்சிக்குத் தேவையான எல்லா பதினெட்டு 'அமினோ ஆஸிட்'களும் தீவிரமான வகையிலிருக்கின்றன. தலையில் நன்றாக அழுத்தித் தேய்ப்பதன் மூலம் ப்யூர் சில்விக்ரீன் ரோமக்கால்களில் புகுந்து அவைகளுக்குத் தேவையான இயற்கையான ஊட்டத்தையளித்து, கேசத்தை மறுபடியும் ஆரோக்கியமாக இருக்கச் செய்கிறது.

'ஆல் எபௌட் ஹெயர்' (All About Hair) என்ற, படங்கள் கொண்ட, இலவசப் புத்தகத்தை நீங்கள் பெற விரும்பினால் தயவுசெய்து கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்: டிபார்ட்மென்ட் K-2 சில்விக்ரீன் அட்வைஸரி சர்வீஸ் தபால் பை 10022, பம்பாய்-1

Silvikrin

சில்விக்ரீன் — கேச ஆரோக்கியத்துக்கான வழி



ப்யூர் சில்விக்ரீன்

கேசம் சம்பந்தமான உபாதைகளுக்குக் குணமளிக்கும் ஓர் மிகத் தீவிரமான தயாரிப்பு. ஒரு மாதகால வைத்தியத்துக்குப் போதுமானது.

சில்விக்ரீன் ஹேர் டிரெஸிங்

உங்கள் கேசத்தை நாள் பூராவுக்கும் நன்கு சீவியபடி வைக்கிறது. பொடுகு ஏற்படாமல் தடுப்பதற்குப் போதுமான ப்யூர் சில்விக்ரீன் கலந்துள்ளது



SP/1/P/7/64



ஸ்வெட்டர் புதிதா?
இல்லையே-
லக்ஸ்
சலவை
LUX
For gentle washing of lovely clothes

வாளை வீசினாள். அப்பொழுதும் அவள் நிலை கலங்கவில்லை. அந்த இரண்டு ஆங்கிலேயர்களையும் வெட்டி வீழ்த்தி விட்டு, தானும் குதிரை மீது சாய்ந்து விட்டாள். இப்படிச் சாய்ந்தவள் ராணி என்று அறியாமல் இவளைத் துரத்தி வந்தவர்கள், வேறு பக்கத்திலிருந்து தங்களைத் தாக்க வந்தவர்களைத் தாக்கச் சென்று விட்டார்கள். இச்சமயத்தில் ராணியின் கூட இருந்தவர்கள், மூர்ச்சையாகிக் கிடந்த அவளை அப்படியே தூக்கிக் கொண்டு போய், சமீபத்திலிருந்த ஒரு குடியானவனுடைய குடிசையில் விட்டனர்; அவளுக்குச் சிறிது தண்ணீர் கொடுத்துக் குடிக்கச் செய்தனர். உடனே அவள் கண்கள் மலர்ந்தன. தன்னை அந்நியன் யாரும் தீண்டவில்லை என்று தெரிந்து அவள் முகத்தில் இலேசாகப் புன்முறுவல் பூத்தது. பக்கத்திலிருந்த தன் சுவீகாரப் புதல்வனை நோக்கினாள். இவனைக் கவனித்துக் கொள்ளுங்கள் என்று பொருள் தொனிக்க அருகில் இருந்தவர்களுக்குச் சமிக்ஞை காட்டினாள். அவள் உதடுகள், கடவுளின் திருநாமத்தைச் சொல்கின்ற முறையில் அசைந்து கொடுத்தன. அவ்வளவுதான்; பாரத நாட்டு வீராங்கனைகளின் வரிசையில் நிலையான இடம் பெறச் சென்று விட்டாள். அவளுடைய உடலை வைக்கோல் போரில் வைத்துத் தகனம் செய்தனர்.

ராணி லட்சுமிபாய் சுயமாக ஆண்டதெல்லாம், நிகரமாக முந்நூறு நாட்கள் தான்; ஆண்ட நிலப் பரப்போ ஒரு சில நூறு சதுர மைல்களுக்கு மேல் இல்லை. ஆங்கிலேயர்களுடைய தாக்குதலை எந்தக் கணத்திலும் எதிர்பார்க்கக் கூடிய ஒரு சூழ்நிலையிலேயே அவள் ஆட்சி நடத்த வேண்டியிருந்தது. அரசியலில் முதிர்ந்த அனுபவம் பெறக் கூடிய வயதையும் அவள் அடையவில்லை. இப்படி இருந்தும் அவள் அரச கடமைகளை நன்கு உணர்ந்து ஆட்சி புரிந்து வந்தாள்.

தினந்தோறும் விடியற்காலை ஐந்து மணிக்கு எழுந்திருந்து வாசனைப் பொருள்கள் கலந்த தண்ணீரில் நீராடிவிட்டுத் தூய வெள்ளைச் சேலையுடுத்தித் தெய்வ வழிபாடு செய்வாள். சுதேசி உடை வகைகளையே அணிந்து கொள்ள வேண்டுமென்பதில் மிகவும் கண்டிப்பாயிருந்தாள். தெய்வ வழிபாட்டுக்குப் பிறகு துளசி மடத்துக்குப் பூஜை செய்வாள். இந்த நித்திய கடமைகளை முடித்துக் கொண்டு அரசவைக்கு வந்து அரியாசனத்தில் அமர்வாள். அப்பொழுது ஆஸ்தான வித்துவான்கள் கோஷ்டி கானம் செய்வார்கள். பண்டிதர்கள் வேதமோதுவார்கள். பிறகு இவர்களில் யாராவது ஒருவர் தினந்தோறும் ஏதேனும் ஒரு புராணக் கதையைச் சொல்லி அதற்குச் சுருக்கமாக விளக்கம் தருவார். பின்னர் ஆஜராயிருக்கும் அரசாங்க உயர்தர உத்தியோகஸ்தர்கள், படைத் தலைவர்கள், ராஜ்யத்துப் பிரமுகர்கள் இப்படிப் பலர் முன்வந்து மரியாதை செய்வார்கள்; தினசரி சுமார் எழுநூற்றைம்பது பேருக்குக் குறையாமல் இப்படி ஆஜர் கொடுத்துவிட்டுப் போவார்கள். இவர்கள் அத்தனை பேரையும் ராணி ஞாபகம் வைத்துக் கொண்டிருப்பாள். ஒரு நாள் வராமல் நின்றவர்களை மறுநாள்



“உன்னை ஒரு பொண்ணு தேடிண்டு வந்திருந்தாள். வயசு இருபது இருக்கும். ராமலிங்கத்தின் மகளாம். பெயர் லீலாவாம். கோடி வீட்டில் இருக்கிறாளாம். யாருடா அவன்?”

'நேற்று தென்படவில்லையே' என்று இங்கிதமாக விசாரிப்பாள்.

பிற்பகல் தர்பாரின்போது ராணி பெரும்பாலும் ஆணுடையிலே பிரசன்னமாயிருப்பாள். அதாவது உடலை நீண்ட அங்கி மூடிக் கொண்டிருக்கும். தலையில் ஒரு குல்லாய் அதன் மீது தலைப்பாகை; இடுப்பில் ரத்தினங்கள் பதித்த உடைவாள் தொங்கிக் கொண்டிருக்கும்.

ராணியிடம் முதன் மந்திரியாகச் சேவை செய்தவர் லட்சுமண ராவ் என்பவர். இவர் அறையின் முன் பக்கம் ஓரமாக நின்று கொண்டு அரசாங்க நிருவாக சம்பந்தமான அலுவல்களை வரிசைக் கிரமமாகத் தெரிவிப்பார். ராணியும் உடனுக்குடன் உத்தரவுகளைப் பிறப்பிப்பாள்.

முக்கியமான வழக்குகள் விசாரணைக்கு வரும். இரு தரப்பு விவாதங்களையும் கூர்ந்து கேட்டு நேர்மையுடன் தீர்ப்புக் கூறுவாள்.

ஒருமுறை நகரத்தில் உள்ள தையற்காரர்கள் அனைவரையும் அரண்மனைக்கு வரவழைத்துக் கம்பளிச் சட்டைகளும் குல்லாய்களும் தயாரிக்கச் செய்தாள். நான்கு நாட்களில் ஆயிரக் கணக்கில் தயாராயின. ஒரு நாள் பிச்சைக்காரர்களையும் குளிரால் வாடும் மற்ற ஜனங்களையும் மகாலட்சுமி கோவிலுக்கு வருமாறு உத்தரவிட்டாள். அனைவருக்கும் தன் கையாலேயே மேற்படி உடைகளை வழங்கினாள்.

அழகும் இனிமையும் கலந்த தோற்றம்; கற்பின் அணிகலன்; வீரத்தின் விளைநிலம்; கருணையின் நிறைவு; இவள்தான் ஜான்சி ராணி லட்சுமி பாய்.

மர்மக் கதாசிரியர்கள்

ஷேம்பரையும் காளிதாசனையும் தேடிப் பிடித்து விரும்பிப் படிப்பார்கள் சிலர். ஷாவையும் சார்லஸ் டிக்கன்ஸையும் நாடிப் போவார்கள் சிலர். ஏர்னஸ்ட் ஹெமிங்வேயை எல்லாருமே ரசித்துவிட மாட்டார்கள். எஸ். வி. வி.யின் நகைச்சுவை எல்லோரையும் கவர்ந்துவிடாது.

ஆனால் தங்கள் இலக்கிய ரசனையை வரம்பு கட்டிக் கொண்டிருப்பதாகச் சொல்லும் எல்லோருக்குமே வெகு வெகு குறைந்த சதவிகித விதிவிலக்குடன் — துப்பறியும் நாவல்கள், மர்ம நவீனங்கள் படிப்பதென்றால் ஒரு தனி ஆர்வம் ஏற்பட்டு விடுகிறது. "இது ஒரு இலக்கியமா?" என்று இகழ்ச்சியாகக் கேட்பவர்கள்கூடக் கையிலிருக்கும் ஒரு நல்ல மர்ம நவீனத்தைக் கடைசிப் பக்கம் வரும் வரை கீழே வைப்பதில்லை. இந்தத் துப்பறியும் கதைகளை எழுதும் ஆசிரியர்களும் கடைசி வரியில்தானே நிஜக் கொலைகாரனை வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தித் தொலைக்கிறார்கள்! இடையே நாம்தான் கொலை செய்து விட்டோமோ என்று வாசகனே நினைக்கும்படியான கவாரசியம்!

ஆங்கில மொழியிலே தங்கள் எழுத்துத் திறமையாலும் கற்பனையாலும் லட்சக்கணக்கான — ஏன்? கோடிக்கணக்கான வாசகர்களைத் தங்கள் விசிறிகளாக்கிக் கொண்டிருக்கும் சில ஆசிரியர்கள் இந்தத் துப்பறியும் கதைத் துறையிலே இருக்கிறார்கள். 'ஏர்ல் ஸ்டான்லி கார்டினர் புத்தகத்தை எடுக்காத கை ஒரு கையா?' என்று கேட்கும் கல்லூரி மாணவர்கள் எத்தனை பேர் நம்மிடையே உண்டு! 'எட்கார் வாலஸா? கொண்டா இங்கே!' என்று குரல் கொடுக்கும் பழைய தலைமுறையினரும் இருக்கிறார்கள்.



இந்தத் துப்பறியும் மர்ம நவீன கர்த்தாக்கள் சிலரைத் தெரிந்து கொள்ளலாமே!

ஏர்ல் ஸ்டான்லி கார்டினர்

அமெரிக்காவிலுள்ள மஸ்ஸாசூட்டஸ் பிரதேசத்தில் பிறந்த இவர் 1889ம் ஆண்டில் சிறு வயதில் சுரங்க இஞ்ஜினீயராக வேலை செய்த தம் தந்தையுடன் நிறைய பல இடங்களுக்குப் பிரயாணம் செய்திருக்கிறார். குத்துச்சண்டைப்பயிற்சியும் பெற்றிருக்கிறார்.

இருபத்தோராம் வயதில் சட்டப் பரீட்சை எழுதி, வழக்கறிஞராக ஓர் இடத்தில் நிலைத்து நின்று தொழில் நடத்த விரும்பினார். தொழிலில் நல்ல வெற்றி காணவும் ஆரம்பித்தார். தொழிலில் மும்முரமாக ஈடுபட்ட பிறகுதான் அவருக்கு எழுத்துத் துறையில் ஆர்வம் பிறந்தது. நாற்பத்தி மூன்றாவது வயதில் (1932), பிற்காலத்தில் தம் நூல்களினாலே பிரபலமடைந்த வழக்கறிஞர் கதாநாயகன் பெர்ரி மேஸனை, முதல் தடவையாக 'வெல்வெட் நகத்தின் வழக்கு' என்ற முதல் புத்தகத்தின் மூலம் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

இன்று அமெரிக்காவில் மிகப் பிரசித்தி பெற்ற துப்பறியும் கதை எழுத்தாளர்களில் ஒருவர் கார்டினர். அவருக்கு நான்கு காரியதரிசிகள். ஒரு நாளைக்குச் சுமார் ஏழாயிரம் வார்த்தைகளை அவர்களுக்கு 'டிக்டேட்' பண்ணுகிறார். ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக நான்கு புத்தகங்களை 'எழுதி' முடிக்கிறார். அவர் கையாளும் புனைபெயர். ஏ. ஏ. பேர்.

எழுபது வயதுக்கு மேலாகியும் கார்டினர் புத்தகங்கள் எழுதுவதோடு சும்மா இருந்து விடுவதில்லை. ஒரு பிரத்தியேக சட்ட உதவி சங்கத்தின் சார்பில், 'இனி மேல் விமோசனமில்லை' என்று தண்டனை பெற்றவர்களுக்காக, எந்தவித பிரதி பிரயோசனமுமில்லாமல் கோர்ட்டில் (Court of last resort) வாதாடுகிறார். குற்றவாளிகள் அல்ல என்று தமக்குப் படுபவர்கள் சார்பிலே மாத்திரம்தான் இந்தக் கோர்ட்டில் ஆஜராகிறார். செவ்விந்தியர்களின் பண்டை நாளைய குகை ஓவியங்கள் சிலவற்றை நீண்ட நாள் ஆராய்ச்சிக்குப் பிறகு சமீபத்தில் கண்டுபிடித்துச் சரித்திர ஆசிரியர்களுக்கு உதவியிருக்கிறார் கார்டினர்.

'நேரான நீதி போதனைகளை விடத் துப்பறியும் கதைகள் உலகத்துக்கு 'நியாயம் என்றும் அழியாது' என்ற தத்துவத்தை விளக்குகின்றன'— இது ஏர்ல் ஸ்டான்லி கார்டினரின் அசைக்க முடியாத கருத்து.

அகதா கிறிஸ்டி

அறுபத்தைந்து வயதைக் கடந்த பின்னும் அயராது 'துப்பறியும் கதைகள் எழுதித் தம் வாசகர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொண்டிருக்கும் (ஸ்ரீமதி) அகதா—கிறிஸ்டி ஆரம்ப நாட்களில் சங்கீதம் பயின்றவர்: பிறகு புதைபொருள் ஆராய்ச்சி நிபுணரான மாக்ஸ்மல்லோவன் என்பவரை மணம் செய்து கொண்டவர். வருடத்தில் பாதி நாட்களைத் தம் கணவருடன் கிழக்கு ஆசிய, ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பிரயாணங்களில் கழிப்பவர். ஒவ்வொரு தட்வையும் திரும்பும் போது நான்கு துப்பறியும் நவீனங்களுக்கான கதைப் பொருளுடன் வருவாராம்:

சாதாரணமாக ஒரு நவீனத்தை முடிக்க அவர் ஆறு வாரங்கள் எடுத்துக் கொள்கிறார்.

அவருடைய சிருஷ்டியின் மூலம் மர்மப் பிரியர்களுக்கு அறிமுகமான துப்பறிபவர் தான் 'ஹெர்கியூல் பாய்ராட்'.

அகதா கிறிஸ்டிக்கு லண்டன் நகரில் ஒரு மாளிகையும், பக்கத்துக் கிராமப்புறத்தில் இரண்டு மாளிகைகளும் இருக்கின்றன. 'மேரி வெஸ்ட்மேகாட்' என்ற புனைபெயரில் அவர் மர்மம் கலக்காத நாவல்களையும் எழுதியிருக்கிறார்.

முப்பத்தி ஐந்து வருடங்களுக்கு முன்னும் அவரே ஒரு மர்ம சம்பவத்துக்குப் பாத்திரமானார். அவருடைய கார் எங்கோ வழியில் அநாதையாகக் கிடந்தது. ஆளைக் காணோம். ஒரு நாளல்ல! இரண்டு நாளல்ல! பதினொரு நாட்கள் ஆள் போன இடம் தெரியவில்லை. கடைசியில் ஏதோ ஒரு சாதாரண ஓட்டல் ஒன்றில் மாறு பெயரில் அறை பிடித்துக் கொண்டு எழுதிக் கொண்டிருந்தாராம்.



பன்னிரண்டுக்கும் அதிகமான மேடை நாடகங்கள் எழுதிப் புகழ் பெற்ற இவருடைய நாடகங்கள் சில லண்டன் நகரக் கொட்டகைகளில் பல வருடங்களாகத் தொடர்ந்து நடந்து வருகின்றன. 'ரோஜர் ஆக்ராய்டின் கொலை' என்ற இவருடைய ஆரம்ப கால மர்ம நாவலின் மவுசு இன்னும் குறையவில்லை. 'விட்னெஸ் பார் தி பிராஸிகூஷன்' என்ற நாடகம் உலகப் பிரசித்தி பெற்றுவிட்ட நாடகம்.

எல்லேரி க்வீன்

எல்லேரி க்வீன் என்ற நபரே கிடையாது! இதுவே ஒரு மர்மம்! பிரடிரிக் டானும், மான்பிரெட் லீயும் சேர்ந்து எழுதுகிறார்கள். இவர்களது பொதுப் பெயர், 'எல்லேரி க்வீன்'! இந்த இருவரும் இரு சகோதரிகளுடைய புத்திரர்கள்.

முப்பது வருடங்களுக்கு முன்னே, விளம்பரத் துறையிலும், திரைப் படத் துறையிலும் தனித்தனியே தொழில் செய்து கொண்டிருந்த 'டானி'யும் 'மானி'யும் (செல்லப் பெயர்கள்) ஒரு பத்திரிகை அறிவித்திருந்த துப்பறியும் கதைப் போட்டியில் பங்கு கொள்ளலாமா என்று சில நிமிடங்கள் கலந்து யோசித்தார்கள். ஒரு கதையையும் எழுதி அனுப்பினார்கள். கதைக்குப் பரிசு கிடைத்தது. ஆனால் பணம் கிடைக்கவில்லை. பரிசை அறிவித்ததற்கும் பணம் கொடுப்பதற்கும் இடையில் உள்ள நாட்களில் பத்திரிகையே திவாலாகிப் போய்விட்டது!


இந்தப் பரிசு ஆர்வம்தான் அவர்கள் இருவரையும் மேலும் எழுதத் தூண்டியது. தங்கள் உத்தியோகங்களைத் துறந்து முழுமூச்சாக எழுதத் தொடங்கிவிட்டார்கள். டானி 'எல்லேரி' என்ற தன் பள்ளிக்கூட நண்பன் பெயரையும் மானி ஒலிநயத்துக்காக 'க்வீன்' என்ற பெயரையும் கொடுக்க இரண்டும் சேர்ந்து 'எல்லேரி க்வீன்' ஆயிற்று. பல நாட்கள் வரை, இந்த ஆசிரியர் யார் என்பது வாசகர்களுக்குத் தெரியாமலே இருந்தது.

எண்பது மைல்களுக்கு அப்பால் வசிக்கும் இவ்விருவரும் தினசரி தாங்கள் உருவாக்கும் கதைகளைப் பற்றி வெகுநேரம் டெலிபோனில் பேசி முடிவு செய்கிறார்கள்.

ஐம்பதுக்கு மேலாக 'எல்லேரி க்வீன்' மர்ம நாவல்கள் எழுதி முடித்திருக்கும் இவர்கள் இன்னமும் எழுதிக் கொண்டு தான் இருக்கிறார்கள். 'ஷேக்ஸ்பியரிலிருந்து ஹெமிங்வே வரை எந்த இலக்கிய கர்த்தாவும் கொலை சம்பவத்தைக் கையாளத் தயங்கியதில்லை! துப்பறியும் ஆசிரியர்கள் ஏன் தயங்க வேண்டும்?' என்பது இவர்கள் கேள்வி!

– கோ. க

பாண்டியா? சபாஷ்!




6 MORNING
MADE IN INDIA
மிகப் பெரிய பிளேடு செய்தி!
6-MORNING
6-மார்னிங்
தின் கோல்டு பிளேடு
சேப்டி ரேஸர்
மிகக் கூரிய ஓரத்துடன் கூடியது!
நாடெங்கும் லக்ஷக்கணக்கானவர்கள்
இதை உபயோகித்துப் பரவசமடைந்து
எக்காலத்திலும் சிறந்ததெனப்
போற்றுகின்றனர்
உலகிலேயே மிகப் பரவசமான அனுபவத்திற்கு
6-மார்னிங் உபயோகியுங்கள்

ஐம்பத்து ஐந்தாவது அத்தியாயம்

"வேகமாய்ப் போய்த் தொலையேன்! இதென்ன பெருமாள் கோவில் தேருன்னு நினைச்சுக்கிட்டியா? ஊர்வலம் போறியே?" என்று தம்முடைய கோபத்தைக் கார் டிரைவரின்மேல் திருப்பினார் ஜமீன்தார். அவருடைய அக்கினிக் கோபம் உள்ளூறக் கனன்று கொண்டிருப்பதைப் புரிந்து கொண்டு கண்ணாயிரமும் கணக்குப் பிள்ளைக் கிழவரும் வாயைத் திறந்து பேசுவதற்கே பயந்தவர்களாகக் காரில் மௌனமாக உட்கார்ந்திருந்தார்கள். கார் பங்களாவின்



'போர்டிகோ'வில் போய் நின்றதும்— ஜமீன்தார் விருட்டென்று கீழே இறங்கித் தம்முடைய ஆத்திரத்தின் அளவு தெரியும்படி கார்க் கதவை எவ்வளவு பலமாக ஓங்கி அடைக்க முடியுமோ அவ்வளவு பலமாக ஓங்கி அடைத்து விட்டு உள்ளே போய் விட்டார். மறுபுறமாக வந்து மோகினி கீழே இறங்குவதற்காகக் கார்க் கதவைத் திறந்து விட்டு விலகி நின்று கொண்டார் கணக்குப் பிள்ளைக் கிழவர். மோகினி பயந்து கொண்டே காரிலிருந்து இறங்கும் புள்ளி மானைக் கண்ணீர் சிந்தியபடி கீழிறங்கினாள். கண்ணாயிரமும் கணக்குப் பிள்ளைக் கிழவரும் பட்டுப் புடவை மூட்டையைத் தூக்கிக்கொண்டு பின்னால் நடந்தார்கள். ஜமீன்தார் வாங்கிக் கொடுத்த பூப் பொட்டலம் காருக்குள்ளேயே கிடந்தது. டிரைவர் அதை எடுத்துக் கொண்டு பின்னால் — ஓடி வந்து மோகினியிடம் கொடுக்க முயன்று அவள் அதை வாங்கிக் கொள்ளாமல் வேகமாக நடந்துவிடவே கண்ணாயிரத்திடம் கொடுத்து விட்டுச் சென்றான். தனக்குப் பின்னால் கண்ணாயிரமும், கணக்குப் பிள்ளைக் கிழவரும், பூவுடனும், புடவை மூட்டையுடனும் வருகிறார்கள் என்ற ஞாபகமே இல்லாமல் புயலாக உள்ளே விரைந்து கொண்டிருந்தாள் மோகினி. எதிரே வந்த பாரதி, ''புடவைக் கடைக்குப் போய் விட்டு வந்தீர்களே அக்கா....'' என்று தொடங்கி முக மலர்ச்சியோடு ஏதோ விசாரித்ததற்கும் கூட நின்று பதில் சொல்கிற மன நிலையில் அவள் அப்போது இல்லை. 'மோகினி ஏன் பதில் சொல்லாமல் போகிறாள்? பட்டுப் புடவையை வாங்கப் போன இடத்தில் ஜமீன்தாருக்கும் இவளுக்கும் ஏதாவது சண்டையோ என்னவோ? அழமாட்டாத குறையாகக் கண் கலங்க நடந்து போகிறாளே? பாவம்!' என்று தனக்குள் நினைத்தாள் பாரதி. மோகினியைத் துரத்திக்கொண்டு போவதுபோல் புடவை மூட்டையும், பூப்பொட்டலமுமாகக் கணக்குப் பிள்ளைக் கிழவரும், கண்ணாயிரமும் பின்னால் போவதைப் பார்த்து, 'இவர்கள் போய் அவளிடம் இன்னும்ஏதோ வயிற்றெரிச்சலைக் கிளறப் போகிறார்கள்' என்று பாரதி நினைத்துக் கொண்டாள். அவள் நினைத்தபடியே நடந்தது. அடுத்த அறையில் மோகினி கண்ணாயிரத்திடம் சீறி விழுவதைத் தான் நின்று கொண்டிருந்த இடத்திலிருந்தே ஜன்னல் வழியாகப் பார்த்தாள் பாரதி. அந்தக் கணக்குப் பிள்ளைக் கிழவர் அதிகாரத்துக்கு நடுங்குவதையும் பயந்து சாவதையும் பார்த்து அவர்தான் சத்தியமூர்த்தியின் தந்தை என்பதையே ஒப்புக் கொள்ளத் தயங்கும் மனத்தோடு இருந்தாள் அவள். அந்தக் கிழவரைச் சத்திய மூர்த்தியின் அறையிலிருந்து காரில் திரும்ப அழைத்துக் கொண்டு வந்து விட்ட சிறிது நேரத்துக் கெல்லாம் இரண்டாவது தடவையாக டிரைவர் முத்தையா பாரதியைப் பார்க்கத் தோட்டத்துப் பக்கமாக வந்திருந்தான். அப்படிப் பார்க்க வந்திருந்த போது. ''பாரதி அம்மா! சத்தியமூர்த்தி



சாரோட அறையிலிருந்து இந்தக் கிழவர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு படியிறங்கி வந்ததைப் பார்த்தாக் காரியம் ஒண்ணும் பலிக்கலேன்னு தோணுதம்மா ! இவங்க சூழ்ச்சிக்குச் சத்தியமூர்த்தி சார் இணங்கி யிருக்க மாட்டாரு....'' என்று தெரிவித்து விட்டுப் போனான். உடனே சிறிது நேரத்துக்குள் ஜமீன்தாரையும், கண்ணாயிரத்தையும், மோகினியையும் கணக்குப் பிள்ளைக் கிழவரையும், காரில் அழைத்துக் கொண்டு ஜவுளிக் கடைக்குப் புறப்பட்டு விட்டான் முத்தையா. அதனால் அவனைப் பாரதியால் அதிக நேரம் நிறுத்தி வைத்துப் பேசிக்கொண்டிருக்க முடியாமல் போயிற்று. ஜமீன்தார், கண்ணாயிரம் முதலியவர்கள் மோகினியை அழைத்துக் கொண்டு ஜவுளிக் கடைக்குப் போயிருந்த போது கல்லூரி முதல்வரிடமிருந்து டெலிபோன் வந்தது. வீட்டில் வேறு யாரும் இல்லாததால் பாரதியே டெலிபோனை

பொன் விலங்கு

கொள்கையில்லாத படிப்பு வேரில்லாமல் ஊன்றிய செடியைப்போல் சிறிதுகாலம் பசுமையாய்த் தோன்றி விரைவில் பட்டுப்போய் விடுகிறது.

எடுத்து முதல்வருக்குப் பதில் சொல்ல வேண்டியதாயிற்று. கல்லூரி மாணவர்களின் வேலை நிறுத்த நிலைமையை நேரில் கண்டறிந்து விசாரிப்பதற்காக மல்லிகைப் பந்தலுக்கு வந்து முகாம் செய்வதற்கிருந்த கலெக்டரையும்,— மாவட்டப் பெரிய போலீஸ் அதிகாரியையும் தம்முடைய ஜமீன் மாளிகையிலோ, பூபதியின் பங்களாவை ஒட்டி நவீன வசதிகளுடன் கட்டப்பட்டிருந்த 'கெஸ்ட் ஹவுஸிலோ' (விருந்தினர்விடுதி) தங்க வேண்டு மென்று கேட்டுக் கொண்டு பிரமாதமான ஏற்பாடுகளையெல்லாம் செய்திருந்தார் ஜமீன்தார். கலெக்டரையும், போலீஸ் அதிகாரியையும் அவர்கள் மல்லிகைப் பந்தலுக்கு வந்து இறங்கிய சூட்டோடு போய்ப் பார்த்து வரவேற்று மஞ்சள்பட்டி ஜமீன் மாளிகையிலும், விருந்தினர் விடுதியிலும் அவர்கள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஜமீன்தார் செய்திருப்பதாகவும், இரண்டு பேருடைய சௌகரியங்களுக்காகவும் இரண்டு பெரிய கார்கள் டிரைவருடன் தனித் தனியே காத்திருப்பதாகவும் தெரிவித்து அழைத்துப் பார்த்திருக்கிறார் கல்லூரி முதல்வர். ''ஜமீன்தாருடைய ஏற்பாடுகளுக்கு மிகுந்த நன்றி. ஆனால் நாங்கள் 'டிராவலர்ஸ் பங்களாவில்' தங்கிக்கொள்வதற்கு ஏற்பாடு செய்துவிட்டோம். எங்களுக்காக நீங்கள் இவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டாம்'' என்று கலெக்டரும், டி. எஸ். பி.யும் மறுத்து விட்டார்களாம். இந்த விவரத்தை ஜமீன்தார் வந்ததும் அவரிடம் தெரிவித்து விட வேண்டுமென்று ஃபோனில் பாரதியிடம் கூறியிருந்தார் கல்லூரி முதல்வர். பாரதியும் ஜமீன்தார் வந்ததும் அவற்றை அப்படியே தெரிவிப்பதாகச் சொல்லியிருந்தாள். இப்போது ஜமீன்தார் கடைவீதியிலிருந்து திரும்பி யிருந்தாலும் அவர் கோபமாக உள்ளே நுழைந்த கோலத்தைப் பார்த்து அவரிடம் போய்ப் பேசுவதற்குப் பயமாகவும் தயக்கமாகவும் இருந்தது அவளுக்கு. கண்ணாயிரத்திடம் சொல்லி அவர் மூலம் ஜமீன்தாருக்குத் தெரிவிக்கலாம் என்றால் கண்ணாயிரமும் உள்ளே மோகினியிடம் ஏதோ இரைந்து கூப்பாடு போட்டுக் கொண்டிருந்தார். கண்ணாயிரத்தைக் கூப்பிட்டுக் கல்லூரி முதல்வர் டெலிபோன் செய்த விவரத்தைக் கூறலாம் என்று நினைத்த பாரதி உடனே அதைச் செய்யத் தோன்றாமல் ஜன்னலருகிலேயே தயங்கினாள். அடுத்த அறையில் கண்ணாயிரம் பட்டுப் புடைவைப் பொட்டலத்தைப் பிரித்துப் பரப்பிக் கொண்டு மோகினியிடம் ஏதோ கத்துவதையும், மோகினி விசும்பி விசும்பி அழுவதையும் பார்த்துப் பரிதாபமாயிருந்தது அவளுக்கு. 'இந்தப் பெண்ணை ஏன் இவர்கள் இப்படிப் பாடாய்ப் படுத்துகிறார்கள்?' என்று அவளுக்கு வருத்தமாகவும் இருந்தது.

''ஜவுளிக் கடையிலேயே நீ நடந்துக்கிட்ட தினுசைக் கண்டு ஜமீன்தாருக்கு ரொம்பக் கோபம். நீ நடந்துக்கிறது கொஞ்சம் கூட நல்லாயில்லே மோகி! இப்பவாவது இதிலே உனக்குப் பிடிச்ச பொடவை ஒண்ணை எடுத்துக் கட்டிக்கிட்டு இந்தப் பூவைத் தலையிலே வச்சுக்க. முதல்லே வாடிப் போன பழம் பூவைத் தலையிலேருந்து எடுத்து எறி. முகம் கழுவிப் பொட்டு வச்சுக்கிட்டு ஜமீன்தாரிட்டப் போயி ரெண்டு வார்த்தை சந்தோஷமாப் பேசு.... அவரு கோபம் தணியும்'' என்று கண்ணாயிரம் நயமாகவும் பயமாகவும் மிரட்

போர்ஹான்ஸ் பற்பசையின் மூலம் ஈறு உபாதைகள் பற்சிதைவு போன்ற கோளாறுகளிலிருந்து வியக்கத்தக்க பலன்கள் கிடைக்கும்



தாமாகவே விரும்பி எழுதப்பட்ட கடிதங்கள் *
இவற்றை நிரூபிக்கின்றன.

* இந் நற்சாட்சிக் கடிதங்களை ஜாப்ரே மானேர்ஸ் & கோ. லிட், கம்பெனியாரின் எந்த ஆபீஸிலும் காணலாம்.

எனக்கு விபரம் தெரிந்தகாலிலிருந்தே போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகித்து வருகிறேன். உண்மையாகவே, இதன் நற்பலனை - பல்லின் ... வும், இதன் மிகச் சிறந்த தரத்தைப்பற்றி இதைத் தவறாமல் உபயோகித்து வந்த என் பெற்றோர்களிடமிருந்து அறிந்து கொண்டேன். என்னுடைய பற்களின் ஒளியைக் காண்பிப்பதற்குப் பெருமைப்படுகிறேன். ஏனெனில், நிரந்தரமாகவும், வழக்கமாகவும், தொடர்ந்தும் போர்ஹான்ஸ் உபயோகிப்பதால்தான் அவை அவ்வாறிருக்கின்றன என்று நிச்சயமாகக் கூறுவேன்.

ஜெ. எம். கல்கத்தா.

உங்களுடைய போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகித்ததால் எனக்கிருந்த கடுமையான ஈறு உபாதையிலிருந்து ஏற்பட்ட குணத்தைப்பற்றி உங்களுக்குத் தெரிவிப்பதை என் கடமையெனக் கருதுகிறேன். இப்பொழுது நான் தங்களுடைய போர்ஹான்ஸைத் தவறாமல் உபயோகித்து வருகிறேன். ஈறுகளில் வேதனை, வீக்கமடைந்த ஈறுப் புண்கள், வாய்நாற்றம் முதலியவைகளிலிருந்து முன்பு மிகவும் அவதிப்பட்டது போலில்லாமல் நல்ல குணமாகியிருக்கிறேன். ஆண்டவன் போர்ஹான்ஸை என்றும் ஆசீர்வதிப்பாராக எனக் கூற விரும்புகிறேன்.

ஹெச். ஆர். எஸ். பம்பாய்.

பலவகையான பற்பசைகளை உபயோகித்த பின்னர் எனது 50-வது வயதில் போர்ஹான்ஸ் பற்பசையை உபயோகிக்கத் தொடங்கினேன். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக அதை உபயோகித்து நல்ல பலனடைந்துள்ளேன். ஒருவேளை, என் 72-வது வயதில் என்னுடைய பற்கள் இயற்கையானபடி வலுவாகவும், சீராகவும் இருப்பதற்குக் காரணம் போர்ஹான்ஸின் மாய வித்தையாகவும் இருக்கலாம்.

வி. என். மதுரை.

போர்ஹான்ஸ்

ஒரு பல் வைத்தியரால் உருவாக்கப்பட்ட பற்பசை.



இதற்கு உகந்த, சிறந்த சேர்க்கைக்கு,

போர்ஹான்ஸ்

டபிள் ஆக்ஷன்

டூத்பிரஷ்
உபயோகியுங்கள்.



T-33 A.TAM

டிக் கொண்டிருந்தார். மோகினியோ பாரதி பகலில் சூட்டிவிட்டு இப்போது வாடிப் போயிருந்த அதே பழம் பூவோடு கவரோரமாக அழுது கொண்டு நின்றாள். கண்ணாயிரத்தையும் அவளருகே நின்ற சத்தியமூர்த்தியின் தந்தையாகிய அந்தக் கணக்குப்பிள்ளைக் கிழவரையும் அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. கண்ணாயிரம் மூட்டையைப் பிரித்து உதறியிருந்த பட்டுப் புடைவைகளையோ அவள் இலட்சியமே செய்யவில்லை. சிறிதுநேரம் அவளோடு வாய்க்கொடுத்து அழுகையைத் தவிர ஒரு பதிலும் ஒரு பயனும் கிடைக்காமற் போகவே கண்ணாயிரம் அறையிலிருந்து வெளியே வந்தார். அவர் வெளியே வருவதைப் பார்த்த பாரதி முதல்வர் டெலிபோன் செய்த விவரத்தைக் கூறி அதை ஜமீன்தாரிடம் தெரிவித்து விடும்படி வேண்டிக் கொண்டாள். ''சுத்தச் சோம்பேறி மனுஷனாவில்ல இருக்காரு! அவங்களை எப்பிடி வரவேற்று நம்ம 'கெஸ்ட் ஹவுஸி'லே தங்க வைக்கிறதுங்கிற விவரத்தைச் சொல்றதுக்காகவே இன்னிக்கி மத்தியானம் இந்தப் பிரின்ஸிபாலை இங்கே வரவழைச்சுக் கிளிப்பிள்ளைக்குப் பாடம் சொல்ற மாதிரிச் சொல்லி அனுப்பிச்சிருக்கோம். கடைசியிலே காரியத்தைக் கோட்டைவிட்டுப்பிட்டாரே'' என்று பாரதி கூறியதைக் கேட்டுக் கல்லூரி முதல்வர் மேல் குறைப்பட்டுக் கொண்டு போனார் கண்ணாயிரம். அவருடைய தலை மறைந்ததும் மோகினியைச் சமாதானப்படுத்தி ஆறுதல் கூறுவதற்காகப் பாரதி அவள் அழுது கொண்டிருந்த அறைக்குள் புகுந்தாள். அவளைப் பார்த்ததும் அங்கே தயங்கி நின்று கொண்டிருந்த சத்தியமூர்த்தியின் தந்தையும் அறையிலிருந்து வெளியேறி விட்டார். தான் படிக்கிற கல்லூரி முதல்வரைத் தன்னிடமே தூற்றுகிற அளவு கண்ணாயிரம் துணிந்ததை எண்ணியபோது பொறாமையும் கெட்ட எண்ணமும் நிறைந்த அந்தக் கொடிய முதல்வர் மேல் கூடச் சிறிது அநுதாபம் கொண்டாள் பாரதி. கண்ணாயிரத்தையும், ஜமீன்தாரையும்போல் படிப்பும் சிந்தனையும் இல்லாத முரடர்களிடம் கூடத் திட்டு வாங்கும்படி ஆகிவிட்ட அவர் நிலைமையை எண்ணி அவளுக்குப் பரிதாபமாகவும் இருந்தது. கல்லூரி முதல்வரிடமிருந்த அதிகார வெறி, கர்வம், பொறாமை, கெட்ட எண்ணங்கள் எல்லாவற்றையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் அவர் ஒரு டபிள் எம்.ஏ., வெளி நாட்டுப் பல்கலைக் கழக அநுபவமும் டாக்டர் பட்டமும் பெற்றவர்.

மனைவி: ஆமாம், என் பல் பிடுங்கின பில்லை என் அப்பாவுக்கு நீங்கள் ஏன் அனுப்பினீர்கள்?



கணவன்: நீதானே சொன்னாய், அந்தப் பல் நம் கல்யாணத்துக்கு முன்பிருந்தே தொந்தரவு கொடுத்து வருகிறது என்று!


ஆங்கில இலக்கியக் கடலைக் கரை கண்டவர், அப்படி எல்லாம் இருந்தும் அவர் மாணவர்களிடமும், ஆசிரியர்களிடமும் செல்வாக்குப் பெறவோ, சோபிக்கவோ முடியாமல் போவதற்குக் காரணம் என்னவென்று பாரதி பல முறை தனக்குள் சிந்தித்துக் காரணத்தையும் உணர்ந்திருக்கிறாள். ஊன்றிய கொள்கைகள்தான் படிப்பின் உறுதிக்குக் காரணம். கொள்கை இல்லாத படிப்பு வேரில்லாமல் ஊன்றிய செடியைப் போல் சிறிது காலம் பசுமையாய்த் தோன்றி விரைவில் பட்டுப் போய்விடுகிறது. கல்லூரி முதல்வருடைய படிப்புப் பட்டுப் போனதற்குக் காரணமும் அதுதான். 'கண்ணாயிரத்தைப் போல் சந்தர்ப்பத்தினால் முன்னுக்கு வந்தவர்கள் கூடக் குறைத்துப் பேசும்படி நிறையப் படித்தவரான முதல்வர் தாழ்ந்து போய்விட்டாரே' என்று மோகினியின் அறைக்குள் நுழைவதற்கு முன் பாரதி நினைத்தாள். இவ்வாறு நினைத்தபோது அவள் ஒரே ஒரு கணம் முதல்வருக்காக அநுதாபப்படவும் செய்தாள். அந்த அநுதாபமும் ஒருகணம்தான். அடுத்த கணமோ அவளுடைய அநுதாபம் முழுமைக்கும் மோகினி ஒருத்தியே பாத்திரமானாள். மோகினியின் கண்ணீரைத் துடைத்து ஆறுதல் கூற வேண்டிய காரியத்தைத் தானாகவே ஏற்றுக் கொண்டு அந்தக் காரியத்திலே மனம் நெகிழ்ந்து ஈடுபட்டாள் பாரதி.

அதே நேரத்தில் ஜமீன்தாரும் கண்ணாயிரமும் அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக ஏமாற்றமளிக்கும் செய்திகளைத் தெரிந்து கொண்டிருந்தார்கள். அன்று பகலில் சத்தியமூர்த்தியிடம் அவனுடைய தந்தையையே அனுப்பி வழிக்குக் கொண்டு வர முயற்சி செய்து அது முடியாமற்

போயிற்றென்று அறிந்தபோதே அவர்களுக்கு ஏமாற்றமாக இருந்தது. விசாரணைக்காக வருகிற போலீஸ் அதிகாரியையும், கலெக்டரையும் தங்களுடைய விருந்தினராகத் தங்க வைத்துத் தடபுடலாக உபசரித்துக் குளிப்பாட்டிக் காரியத்தைச் சாதித்துக் கொள்ள நினைத்துத் தங்கள் சார்பில் பிரின்ஸிபாலை இவர்கள் இருவரையும் அழைக்க அனுப்பியிருந்தார்கள் அவர்கள். அதற்கும் அதிகாரிகள் சம்மதிக்காமல் நழுவி விட்டார்கள் என்று கேள்விப்பட்டதும் ஜமீன்தாருக்குப் பேரதிர்ச்சியாக இருந்தது. வந்திருக்கிற கலெக்டரைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டிருந்தார் அவர். வயதில் இளைஞரும், முற்போக்கான மனநிலையுடையவருமான இந்தக் கலெக்டரைச் செல்வாக்கைப் பயன்படுத்தியோ, உபசாரங்களைச் செலவழித்தோ ஒன்றும் நெகிழச் செய்துவிட முடியாது என்று பலர் சொல்லி இருந்தது நிஜமாகி விட்டதை அறிந்து, ஜமீன்தாரும், கண்ணாயிரமும், பிரின்ஸிபாலும் பயந்தனர். அடுத்த முயற்சியாக அன்றிரவு அவர்கள் மூவரும் தாங்களாகவே கலெக்டரையும், போலீஸ் அதிகாரியையும் சந்திப்பதற்காக 'டிராவலர்ஸ் பங்களா'வுக்குப் போனார்கள். அப்போது அவர்களுக்கு அங்கே இன்னும் பெரியதோர் அதிர்ச்சி காத்திருந்தது. கலெக்டர் முகாம் செய்திருந்த அறையில் கலெக்டரோடு சத்தியமூர்த்தியும் குமரப்பனும் அமர்ந்து சிரிக்கச் சிரிக்கப் பேசிக் கொண்டிருந்தனர். பக்கத்து அறையிலிருந்த கலெக்டரின் பி.ஏ.யை விசாரித்ததில் ''இவங்க ரெண்டு பேரும் எங்க கலெக்டர் ஐ.ஏ.எஸ். எழுதிக் கலெக்டராக வருவதற்கு முன் காலேஜ் லெக்சரராக இருந்தபோது அவரிடம் படித்த மாணவர்களாம். அதனாலே கலெக்டர் ரொம்பப் பிரியமாகக் கூப்பிட்டுப் பேசிக்கிட்டிருக்காரு....'' என்றார் அவர். ஜமீன்தாரும், கண்ணாயிரமும், பிரின்ஸிபாலும் கலெக்டரைச் சந்திப்பதற்காகச் சொல்லி அனுப்பினார்கள். ''என்ன காரியமாகப் பார்க்க வந்திருக்கிறார்கள் என்று கேட்டுக்கொண்டு வரச் சொன்னார் சார்?'' என்று உள்ளே போன ஆள் திரும்பவும் வந்து விசாரித்தபோது, ஜமீன்தாருக்கும் கண்ணாயிரத்துக்கும் கோபம் தாங்க முடியவில்லை. 'முதன் மந்திரியிலிருந்து மாகாண கவர்னர் வரை ஒரு வார்த்தையில் கட்டுப்படக் கூடிய அத்தனை ஆற்றலுள்ள மஞ்சள் பட்டி ஜமீன்தாரிடமா இந்த மூந்தா நாள் கலெக்டர் வாலை ஆட்டுகிறான்? இவனை இந்த ஜில்லாவிலிருந்து மாற்றி விட்டு மறு வேலை பார்க்க வேண்டியது தான்' என்று கண்ணாயிரம் மனத்துக்குள் கறுவிக் கொண்டார். ஜமீன்தாருக்கும் ஆத்திரம் பொங்கியது. கல்லூரி முதல்வரும் அதே மன நிலையில் இருந்தாலும் ஒரு சிறிய தாளை எடுத்து அதில் தாங்கள் பார்க்க வந்த காரியத்தையும், வந்திருப்பவர்கள் பெயரையும் குறித்துக் கலெக்டருக்கு அனுப்பி வைத்தார். பத்து நிமிஷத்துக்கெல்லாம் கலெக்டரின் பி. ஏ. மறுபடியும் திரும்பி வந்து, ''ஐ ஆம் வெரி ஸாரி சார்! இந்தக் காரியமாகக் கலெக்டரே நாளைக்கு உங்களையெல்லாம் கூப்பிட்டுப் பேசுவாராம். இப்போது இதே காரியமாக வேறு சிலரோடு பேசிக் கொண்டிருப்பதனால் உங்களை நாளைக்குக் கூப்பிட்டு அனுப்புவதாகச் சொன்னார்'' என்று தெரிவித்தபோது ஜமீன்தாருக்கு முகத்தில் அறைந்தாற் போலாகி விட்டது. ''வெள்ளைக்காரன் காலத்திலே இப்படி நடக்குமா? அந்த நாளிலே வெள்ளைக்கார ராஜாங்கம் நமக்கு ஸர் பட்டம் கொடுத்தப்ப அதைப் பாராட்டித் தன் சந்தோஷத்தைத் தெரிவிச்சுக்கறதுக்காக அப்ப கலெக்டரா இருந்த துரையும், துரைச்சானியும் மஞ்சள்பட்டி அரண்மனைக்குத் தேடிக்கிட்டு வந்தாங்க... இப்ப என்னடான்னு மூந்தா நாள் பயலுகளெல்லாம் கலெக்டரா வந்து பெரிய மனிசங்ககிட்ட மரியாதை தெரியாம நடத்துக்கறாங்க. இவரு கூப்பிட்டு அனுப்புவாராம்...நான் வரணுமாம்...அதையுந்தான் பார்க்கலாமே'' என்று திரும்பிப் புறப்படுவதற்காகக் காரில் ஏறிய பின் கண்ணாயிரத்திடம் கலெக்டரைப் பற்றிச் சொல்லிச் சீறினார் ஜமீன்தார். வீட்டுக்குத் திரும்பியதும் அன்றிரவே ஜமீன்தாருக்கு 'ப்ளட் ப்ரஷர்' லோ வாகிப் படுக்கை போட்டு விட்டது. டாக்டர் வந்து பங்களாவிலேயே தங்கியிருந்தார்.

மறு நாள் கலெக்டரும் டி. எஸ். பி. யும் காலையில் கல்லூரியைச் சுற்றிப் பார்த்தார்கள். முதலில் மாணவர்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்றைச் சந்தித்துப் பேசினார்கள். அப்புறம் சத்தியமூர்த்தியோடு சேர்ந்து அவனுடைய தூண்டுதலுக்குட்பட்டு ஹாஸ்டல் ஷெட்டுக்கு நெருப்பு வைத்ததாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள மாணவர்களையும், நெருப்பு வைக்கும்போது பார்த்ததாகச் சாட்சி கூறியிருந்த இரண்டு சமையற்காரர்களையும், ஒரு நைட் வாட்ச்மேனையும் கூப்பிட்டு விசா

எக்கோணத்திலும் சரி



இதோ உங்களுக்குக்
கூடுதலான பாதுகாப்பு
அளிக்கக்கூடிய டயர்

இந்த டிரெட் அமைப்பு, மோட்டாரோட்டிகளுக்கு மிகவும் அதிகமான பாதுகாப்பளிப்பதற்கெனப் பல வருடங்களாக சோதனைத்தளங்களிலும் ஓட்டப் பந்தயப் பாதைகளிலும் ஆராய்ந்து சோதிக்கப் பட்டதாகும். ஆயிரக்கணக்கான கோணங்கள் ரஸ்தாவைக் கவ்விப் பிடிப்பதால், சுலபமாக வண்டியை ஓட்டுவதற்கு உதவுவதுடன் நீங்கள் ஓட்டத் தொடங்கும்போதும் நிறுத்தும்போதும் இவை சிறந்த இழுப்புத் தன்மையை அளிக்கின்றன. பயர்ஸ்டோனை வாங்கும்போது நீங்கள் எதைப் பெறுகிறீர்கள் என்பது உங்களுக்குத் தெரியும்.


Firestone
பயர்ஸ்டோன்
நியூ டிலக்ஸ் சாம்பியன் டயர்

பயர்ஸ்டோன் தரத்துக்கும் உழைப்புக்கும் உங்கள் சின்னம்

ரித்தார்கள். கலெக்டரை அருகில் வைத்துக் கொண்டு அந்த மூன்று சாட்சிகளையும் மடக்கி மடக்கிக் கேள்வி கேட்டார் டி. எஸ். பி. ''நிஜத்தை அப்படியே சொன்னால் பிழைத்தீர்கள்! உங்களை யாராவது பயமுறுத்துகிறார்கள் என்பதற்காகவோ, பணம் கொடுத்து ஆதரிக்கிறார்கள் என்பதற்காகவோ பொய்ச் சாட்சி சொன்னீர்களோ வருஷக்கணக்கில் உள்ளே இருந்து கம்பி எண்ண நேரிடும்! ஜாக்கிரதை'' என்று அவர் மிரட்டியபோது முதலில் சமையற்காரர்கள் அழுதுகொண்டே உண்மையைக் கூறி விட்டார்கள். அப்புறம் 'வாட்ச்மேனும்' பயந்து போய் உண்மையைக் கக்கிவிட்டான்.

''நெருப்புப் பிடித்துக்கொண்டு எரிந்தது மட்டும்தான் தங்களுக்குத் தெரியும் என்றும், சத்தியமூர்த்தியும் மாணவர்களும் வந்து நெருப்பு வைத்ததைப் பார்த்ததாகக் கூறியது மேலே உள்ள அதிகாரிகளும் நிர்வாகியும் பயமுறுத்தியதற்காகக் கூறிய பொய் என்றும் அந்த மூவரும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். கடைசியாக பிரின்ஸிபாலைக் கூப்பிட்டு விசாரித்தபோது அவரும் மென்று விழுங்கினார். கலெக்டரும், டி.எஸ்.பி.யும் பிரின்ஸிபாலுக்கு அறிவுரை கூறினார்கள். பிரின்ஸிபாலுக்குத் தலைகுனியும் படியான நிலைமையாகி விட்டது.

''நாம் படித்தவர்கள் என்பதை நிரூபிக்க ஏதாவது நல்ல காரியங்களைச் செய்தால் மட்டுமே போதும் சார்! மானேஜ்மெண்டிற்கு நல்ல பிள்ளையாக வேண்டுமென்று பையன்களையும், நல்ல ஆசிரியர்களையும் பகைத்துக் கொண்டுவிடக் கூடாது. நீங்கள் நிறையப் படித்தவர். நாங்கள் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. நாளையிலிருந்து ஒழுங்காகக் காலேஜ் நடைபெற வேண்டும். நீங்களும், நிர்வாகிகளும் ஒத்துழைத்து இப்படியெல்லாம் ஒரு தனி ஆசிரியரையும், மாணவர்களையும் கெட்டபெயர் வாங்கச் செய்திருக்கிறீர்கள் என்பதைப் பார்க்கிறபோது ரொம்ப வருத்தமாயிருக்கிறது. நான் ஐ. ஏ. எஸ். பாஸ் செய்து கலெக்டராக வருவதற்கு முன் சத்தியமூர்த்திக்கு விரிவுரையாளராயிருந்திருக்கிறேன். எனக்கு அவனை நன்றாகத் தெரியும். அவனுக்குப் பொய் பேசத் தெரியாது. உண்மைக்காக முரண்டும் பிடிவாதமும் செய்கிறவன், அவன். அவனைப்போல் தங்கமான மாணவனை அந்த நாளிலேயே நான் வேறொருவனைப் பார்த்ததில்லை. நீங்களும், நிர்வாகிகளும் சத்தியமூர்த்தியைப் பிடிக்கவில்லை என்பதற்காக இப்படியெல்லாம் செய்திருக்கிறீர்கள் என்று வெளியே பரவினால் கல்லூரியின் பெயரும், நிர்வாகிகளின் பெயரும், உங்கள் பெயரும் கெடும்'' என்று சொல்லி விட்டுக் கலெக்டர் தம் பேச்சை ஒரு நிமிஷம் நிறுத்தி விட்டுப் பிரின்ஸிபாலின் முகத்தைக் கூர்ந்து நோக்கினார். (தொடரும்)



மீண்டும் கவனியுங்கள்!




ஆடவர்களின் அதி உன்னத
ஆடைகளுக்கான
உத்தரவாதம்.

ராஜேஷ்

டெக்ஸ்டைல்
மில்ஸ் லிமிடெட்

பெர்குசன் ரோட், பம்பாய்-18

ரோஹித் க்ரூப் நிறுவனங்களில் ஒன்று


மிருகக் காட்சி சாலையில்
செல்லம்



குடந்தை அரசினர் கல்லூரி

பையன் வீட்டுக் கணக்குகளை அடித்தல், திருத்தல் இல்லாமல் பிழை யற்றுப் போட்டுப் பள்ளிக்கூடம் புறப் படு முன் நம்மிடம் காண்பித்தால் 'பலே! கணித மேதை ராமானுஜத்துக்கு நீதானடா வாரிசு' என்று வாய் நிறை யப் பாராட்டுகிறோம்.

பழங்காலச் செய்யுள் ஒன்றைப் பாடி, அதற்கு நாசூக்காகவும், எளிமையாகவும் யாரும் விளக்கம் கொடுப்பதைக் கேட் டால், 'ஆஹா! இதோ ஒரு டாக்டர் உ. வே. சாமிநாதய்யரின் பரம்பரை' என்று நினைத்துக்கொள்கிறோம்.

கணித மேதை ராமானுஜத்தையும், கணக் கில்லாப் பழந் தமிழ் இலக்கியங்களைத் தேடிப் பிடித்துப் புதுப்பித்துப் பதிப்பித்து வழங்கிய டாக்டர் உ. வே. சாமிநாதய்யரையும் இணைத் துக் காட்டும் ஸ்தாபனம் ஒன்று உண்டென்று சொன்னால் அது கும்பகோணத்தில் உள்ள அரசினர் கல்லூரிதான்! ஆம்! முன்னவரைத் தன் மாணாக்கராகக் கொள்ளும் பாக்கியம் பெற்றிருந்தது; பின்னவரை ஆசிரியராகவே அடையும் அதிர்ஷ்டத்தையும் அடைந் திருந்தது.

1854ம் ஆண்டில் சர்க்கார் உயர்நிலைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஸ்தா பனத்தில் 1864ம் ஆண்டிலேயே கல்லூரி வகுப்புகளைத் தொடங்கிவிட்டார்கள். 1867ம் ஆண்டில் பழைய உயர்நிலைப் பள்ளி புதுக் கல்லூரியாகப் பரிணமித்துவிட்டது. கல்லூரி வகுப்புகளுக்கு இடமளித்த தஞ்சை ராணி யின் சிதிலமடைந்த கட்டிடம் புதுப்பிக்கப் பட்டு, மேலும் பல பகுதிகள் எழுப்பப்பட்டு, இப்போது இருக்கும் கல்லூரிக் கட்டிடங்கள் உருவாக்கப்பட்டன.

காவிரியாற்றின் மறு கரையிலுள்ள கல் லூரிக்கு இணைப்புப் பாலம் வெகு தூரம் தள்ளி இருந்ததால், மாணவர்களும் ஆசிரி யர்களும் 1943ம் ஆண்டு வரை வேஷ்டி யையும் 'பாண்டை'யும் முழங்கால் வரை சுருட்டிக் கொண்டு ஆற்றங் கரையைத் தாண்டிக் குறுக்கே வரும் காட்சி வேடிக்கை யாகவே இருக்குமாம். இந்த நிலையை மாற்றிக் கல்லூரியையும் எதிர்க் கரையை யும் இணைத்து ஒரு சிறு நடை பாலம் கட்ட ஏ. ஆர். ராமையர் என்பவர் ஆறாயிரம் ரூபாய் நன்கொடை வழங்கினார். 1944ம் ஆண்டில் பூர்த்தியான இந்தப் பாலத்துக்கு 'அரண்மனை ராமையர் பாலம்' என்ற பெய ரும் சூட்டப்பட்டது. அந்தப் பாலத்தைக் காலமெல்லாம் காத்துப் பராமரிக்க இப் போதும் 'பால பாதுகாப்பு நிதி' என்ற தலைப் பில் ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு மாணவ னிடமிருந்தும் ஒவ்வொரு ரூபாய் சம்பளத் துடன் வசூலிக்கப்படுகிறது.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் எல் லாம் கல்லூரி முதல்வர் என்றால், மாணவர் களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஒரே நடுக்கம் தானாம். முதல்வர் வீற்றிருக்கும் அறைப்

முதல்வர் ஹுசைன் — ராமானுஜம் நினைவு நாள்



பக்கமோ அவர் வரும் வழியிலோ நடக்கவே அஞ்சுவார்களாம். கல்லூரி முதல்வர் முகத்தில் சிரிப்பைக் காண்பது என்பது கார்த்திகை மாதத்து மூன்றும் பிறையைக் காண்பதைவிட அபூர்வமான விஷயமாம்.

டாக்டர் உ. வே. சாமிநாதய்யரவர்கள் தம் இளம் பிராயத்தில் திருவாவடுதுறை மடத்திலிருந்து வந்து இந்தக் கல்லூரியில் தியாகராச செட்டியார் இடத்தில் அமர்ந்த போது கல்லூரி முதல்வராக இருந்தவர் டி. கோபால் ராவ் அவர்கள். 'புதிய ஆசிரியர்கள் எப்படி வகுப்புகளுக்குப் போதனை நடத்துகிறார்கள், மாணவர்கள் கவனத்தைக் கவரும் படி சொல்லிக் கொடுக்கும் திறமை இருக்கிறதா?' என்பதை அறியக் கல்லூரி முதல்வர்கள் அந்தக் காலத்தில் புதிய ஆசிரியர்கள் வகுப்புக்களில் பாடம் நடத்தும்போது கூட வந்து அமர்ந்து கவனிப்பது வழக்கமாம். கோபால் ராவும் சாமிநாதய்யர் கல்லூரிக்கு வந்து சேர்ந்த புதிதில் அவர் பாடம் சொல்லிக்கொடுக்கும் பி. ஏ. வகுப்பில் போய் அமர்ந்தார்.

அய்யர் அவர்கள் 'தர்மம் செய்யும் எண்ணம் ஏற்படும்போதே அதைச் செய்ய வேண்டும். செயலை ஒத்திப் போட்டால் அதை நிறைவேற்ற வாய்ப்பே ஏற்படாது' என்ற கருத்துடைய பாடலுக்கு விளக்கம் கொடுக்கக் கூடிய வகையில் ஒரு சிறு கதை சொன்னார். பக்கத்தில் வீற்றிருந்த முதல்வர் கோபால் ராவ் தம்மை மறந்து அந்தக் கதையில் லயித்து வாய் விட்டுச் சிரித்தாராம். முதல்வர் சிரித்து மாணாக்கர்கள் கண்டது அது தான் முதல் தடவையாம்!

காலம் எவ்வளவோ மாறிவிட்டது. சென்ற நூற்றாண்டிற்கும் இந்த நூற்றாண்டிற்கும் தான் எத்தனை வித்தியாசம்? கல்லூரி முதல்வர்கள் மாணவர்களைக் கண்டு ஒதுங்கிச் செல்லும் அளவுக்குக் காலம் மாறிவிட்டது. கல்லூரி முதல்வர்கள் எத்தனை சிரித்த முகத்தோடு இருக்க முயன்றாலும் மாணவர்களைக் கவருவதில் எத்தனை சிரமம்!

முதல்வர் மீர் ஷபீர் ஹுஸைன் ஒரு கணிதப் பேராசிரியர். வார்த்தைகளையும் கணக்காகவே பேசினார். புகு முக வகுப்பு, பி. ஏ., பி. எஸ்ஸி வகுப்புகள் மாத்திரம் உள்ள இந்தக் கல்லூரியின் அந்தஸ்தை மேலும் உயர்த்தி ஆராய்ச்சி வசதிகளைக் கொடுத்து எம். எஸ்ஸி., எம். ஏ. வகுப்புக்களைத் தொடங்கி வைக்க சர்வகலாசாலை இன்னும் முன்வரவில்லை.

''இந்தக் காலத்து மாணவர்களில் பெரும்பாலோர் ஒன்றிலும் பற்றற்ற ஞானிகள் போலவே இருக்கிறார்கள், படிப்பிலும் அக்கறை காட்டுவதில்லை. விளையாட்டுக்களிலும் ஊக்கம் செலுத்துவதில்லை. ஏதோ இனம் புரியாத பகற் கனவு காண்பவர்களைப் போல் அலைகிறார்கள். ஹாஸ்டலிலும் தங்காமல், நகரத்தில் பெற்றோர்களிடமும் வசிக்காமல் அயலூரிலிருந்து வந்து தனி ஜாகை வைத்துப் படிப்பதாக நினைக்கும் மாணவர்களில்தான் இந்தப் பற்றற்ற, குறிக்கோளற்ற ரகம் அதிகம்'' என்று கல்லூரி முதல்வர் உணர்ச்சி வசப்பட்டுக் கூறினார். அந்தக் குறிப்பிட்ட ரக மாணவர்களின்





மேலே: படகுப் போட்டிக்குத் தயார்!
கீழே: நாடகக் காட்சி என்று பார்த்தாலே தெரியவில்லையா?

பெற்றோர்கள் உடனடியாகக் கவனிக்கவேண்டிய விஷயம் இது.

கும்பகோணம் கல்லூரியை மற்ற கல்லூரிகளிடமிருந்து பிரித்துத் தனிச் சிறப்பிற்குள்ளாக்குவது, காவிரியும், அங்கு மாணவர்கள் பங்கு பெற்று நடத்தும் ஓடப் பந்தயங்களும்தான். இவை இந்த கல்லூரிக்குக் கிழக்கத்திய கேம்பிரிட்ஜ் என்ற பெயரை வாங்கிக் கொடுத்திருக்கின்றன.


அரண்மனை ராமையர் பாலத்திலிருந்து பழைய பாலம் வரை போய்த் திரும்பும் பந்தயங்கள் வெகு உற்சாகமாக இருக்குமாம். வாழ்க்கைப் படகை ஓட்ட ஆரம்பிக்கு முன்பே இந்தக் கல்லூரி மாணவர்களுக்கு நிஜப் படகு ஓட்டி வெற்றி காணும் வாய்ப்புக்கள் நிறைய இருக்கின்றன.

பழமைக்கும் புதுமைக்கும் இணைப்பு ஏற்படுத்தும் வகையில் பழைய கட்டிடங்களும் புதுக் கட்டிடங்களும் கொண்ட இந்தக் கும்பகோணம் அரசினர் கல்லூரிக்கு, காவிரி நீர் வளமும் கன்னித் தமிழ் வளமும் என்றென்றும் சிறந்த சேவை செய்துகொண்டிருக்கும் என்று நம்பலாம்.

காட்பரீஸ்

டிரிங்கிங் சாக்கலேட்

சூடாகவோ, அல்லது குளிர்ந்ததாகவோ—
மிக ருசியானது
ஒரே நொடியில் தயார்.



Aiyars C.F. 400 TAM A

சின்னியின் புருஷன்



ஏதுவுமே இன்னும் சரியாகக் 'குதிர்ந்த பாடில்லை!'

முதலில் குடியிருக்க வீடே சரியானபடி அகப்படவில்லை. ஏதோ அவசரத்துக்கு முதலில் இருக்கட்டும் என்றுதான் அந்த வீட்டை ஏற்பாடு செய்தான் மூர்த்தி.

மாற்றலாகி வந்த இடத்தில் காரியாலய வேலையைக் கிரகித்துக் கொள்ளும் கவலையோடு இந்த வீட்டு நிர்வாகப் பிரச்னையும் சேர்ந்து கொண்டது மூர்த்திக்கு.

கையோடு கொண்டு வந்த அத்தியாவசிய வீட்டுச் சாமான்களைத் தவிர ரயில் மூலம் அனுப்பிய மற்றவை எல்லாம் இன்னும் வந்து சேர்ந்த பாடில்லை.

லலிதாவுக்கு அதே பெரிய கவலையாகப் போய் விட்டது. ஒவ்வொரு நாளும் சாமான்களை நினைவுபடுத்தி நச்சரித்து வந்தாள். அன்றைக்குக்கூடக் கேட்டு விட்டுத்தான் வந்தானும் மூர்த்தி.

இவை எல்லாவற்றையும்விடப் பெரிய தலைவலியாக இருந்தது வீட்டு வேலைக்காரி கிடைக்கும் நிலைமை.

அந்த ஊரில் சரியானபடி வீட்டு வேலை செய்வதற்கு வேலைக்காரிகளே கிடைக்க மாட்டார்கள் என்ற செய்தியை ஆரம்பத்திலேயே சேகரித்துக் கணவனிடம் சொன்னாள் லலிதா.

''ஏன்! அதையும் இழுத்து வைத்துக் கொண்டு என்னையே செய்யச் சொல்லிறயாக்கும்!'' என்று எரிந்து விழுந்தான் மூர்த்தி.

வந்த இருபது நாட்களிலேயே இரண்டு வேலைக்காரிகள் வந்து போய் விட்டார்கள்.

''என்ன குறை இவர்களுக்கு? இரண்டு வேளை காப்பி, தாராளமான மிச்சம் மீதி இவைகளுக்கு ஒன்றும் குறைச்சல் இல்லே! நல்லதுக்குக் காலம் இல்லே இது!'' என்று அலுத்துக் கொண்டாள் லலிதா.

கடந்த இரண்டு நாட்களாக வேலைக்காரி இல்லாமலேதான் காரியங்கள் நடந்தன.

மூன்றாம் நாள் மாலை புது வேலைக்காரி ஒருத்தி பாத்திரம் தேய்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்தான் மூர்த்தி.

''ஏது, புதிசா ஒருத்தி வந்திருக்காளே! இவளை எங்கிருந்து பிடித்தாய்?''

''நான் எங்கேயும் வலை போட்டுப் பிடிக்கவில்லே! அவளாகவே 'கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த' மாதிரி, இன்னைக்குக் காலம்பற நீங்க ஆபீசுக்குப் போனப்புறம் கேட்டுக் கொண்டு வந்தாள். யாரோ சொன்னார்களாம், இங்கே வேலைக்காரி வேணும் என்று.''

''சரிதான்! இவள் எத்தனை நாளைக்கோ?''

''பேசாமல் இருங்கோ! உங்க கண்ணே பட்டு விடும் போல இருக்கே! அவள் காதிலே எங்கேயாவது விழுந்து வைக்கப் போகிறது! எனக்குத் தெரியும் நான் படற அவஸ்தை!''



அந்தப் புது வேலைக்காரி சின்னி வந்து நாலு நாட்களாகி விட்டன. லலிதா சற்றே நிம்மதியாகப் பெருமூச்சு விட்டு அந்தத் திருப்தியை மூர்த்தியுடன் பகிர்ந்து கொண்டாள்.

''இரு! இரு! அதற்குள் அவசரப்படாதே! இந்த வாரம் முழுவதும் பார்த்துக் கொண்டு அப்புறம் வேண்டுமானால் சந்தோஷப்படு!'' என்றான் மூர்த்தி.

ஐந்தாம் நாள் மாலை.

ஆபீசிலிருந்து திரும்பிய மூர்த்தி, குழாயடியில் பாத்திரங்களை லலிதா தேய்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

''என்ன ஆச்சரியமாக இருக்கிறதோ?'' என்று நிமிர்ந்தாள் லலிதா.

''இல்லையே! எனக்கு ஆச்சரியமே யில்லையே! நான் எதிர் பார்த்தது தானே!'' என்றான் மூர்த்தி அமைதியாக.

சின்னி பெரிய வாயாடியாம்! அவளைத் தெரியாமல் வேலைக்கு வைத்துக் கொண்டு விட்டதைப் பற்றி அக்கம்பக்கத்தில் வேறு எச்சரித்தார்களாம். அதற்கேற்றமாதிரி அன்று 'பாத்திரங்களைச் சரியாகத் தேய்க்கவில்லை' என்று லலிதா சொன்னதற்குப் பெரிதாகச் சண்டைக்கு வந்து விட்டாளாம் சின்னி!

''இதைவிட எவ அம்மா, துலக்குவா? அதுதான் உன்கிட்டே யாருமே நிலைக்கிற தில்லே. அப்பவே அந்தச் செல்லூரான் சொன்னா, நான்தான் கேட்காமப் பூட்டேன்'' என்று லலிதா மீதே அபாண்டமாகப் பேச ஆரம்பித்து விட்டாளாம்.

''சரிதான், விடு கழுதையை! போகட்டும்.''

''அதோடு போனால் பரவாயில்லையே. மத்தியானம் வந்து நான் வேலை செய்ததுக்குச் சம்பளம் கொடுன்னு வந்து நிற்கிறாள். நான் போனால் போகிறது என்று ஒரு ரூபாயைக் கொடுத்தால் விசிறி எறிந்து விட்டுப் போகிறாள். அவதான் வாயாடின்னா, அவ புருஷன் வேறு பெரிய ரவுடியாம்! எல்லாரும் சொன்னார்கள். அவள் போன வேகத்தைப் பார்த்தால் எனக்கு என்னவோ பயமாவே இருக்கு.''

மறுநாள் பிற்பகல் சற்றுச் சீக்கிரமாகவே ஆபீசிலிருந்து வந்து விட்டான் மூர்த்தி.

வீட்டு வாசலில், வாராமல் கலைந்து 'பம்' என்று எழும்பி யிருந்த தலையும், லுங்கி வேட் டியுமாக ஒருவன் குந்தி உட்கார்ந்து கொண்டு பீடி ஒன்றைப் புகைத் துக் கொண் டிருப்பது தெரிந்தது.

மூர்த்தி வீட்டருகில் வந்ததும் அவன்பீடியை எறிந்து விட்டு எழுந் திருந்து, ''வணக்கங்க'' என்றான்.

மூர்த்தி பதிலுக்குத் தலையை ஆட்டி விட்டு உள்ளே போனான்.

உள்ளே லலிதா மிரண்ட நிலையில் இருந் தாள். மூர்த்தி வந்த துமே, ''பார்த்தீர்களா? அவன் வந்து உட்கார்ந் திருக்கானே திண்ணை யிலே'' என்றான்.

''எவன்?''

''அவன்தான். அந் தச் சின்னியோடே புருஷனும். சண்டை பிடிக்கிறதுக்காகத் தான் வந்திருக்கான் போலிருக்கு. இப்ப என்ன செய்யறது. தெரியலியே!''

''பார்த்தால் அசல் ரவுடி மாதிரிதான் இருக்கான். பேசாமல் ஒன்று செய்வோம்'' என்றான் மூர்த்தி.

''என்ன? சொல்லுங் களேன்.''

''நான் இப்பதான் மேற்குத் தெருவிலே ஒரு வீடு பார்த்து விட்டு வரேன். அடுத்த மாதம் அது காலியாகுமாம். நான் நமக்கு ஏற்பாடு பண்ணி, அட்வான்சும் கொடுத்து விட்டு வந்து விட்டேன். அங்கே போகிற வரைக்கும் பேசாமல் இந்தச் சின் னியையே வைத்துக் கொள்வோமே. எதுக்கு வீணு அந்த முரட னோடு தகராறு?''

''சரி! அப்புறமா அந்த வீட்டுக்கும் அவனே வரனும் என்று சொன்னால்.....''

''மேற்குத் தெரு இருக்கிற தூரத்துக்கெல் லாம் இவன் வரமாட்டான். அப்படியே இருந் தாலும் அதை அப்புறமாகப் பார்த்துக் கொள்ளலாம்.''

மூர்த்தியும் லலிதாவும் மெதுவாக வெளியே வந்தார்கள். மூர்த்தி தொண்டையைக் கனைத்துக் கொண்டான்.



''என்னு, சாமி விச யம்? சின்னி என்ன செஞ்சது ? சொல்லு சாமி'' என்றான் எடுத்த எடுப்பில் அந்த ஆள்.

பொல்லாத ஆள் தான் போல் இருக் கிறது என்று நினைத்துக் கொண்டான் மூர்த்தி.

''வந்து....'' என்று இழுத்தான்.

'' 'வந்து' என்ன 'போயி' என்ன சாமி! இதே பேஜாராப் போ யிடுச்சு! அவ பேருலே என்ன சாமி தப்பு?'' என்று மறுபடியும் அடிக்க வருவதுபோலக் கேட்டான்.

''அப்படி ஒன்னும் பெரிசு இல்லே அப்பா! போனால் போகட்டும். அவளையே வரச் சொல்லு. நாளையி லிருந்து'' என்றான் மூர்த்தியும்.

''அதுதானே கேட் டேன், சாமி! மனுச னுக்குக் கொஞ்சமா வது நிம்மதி வாணும்? எங்கே போனாலும் இதே தகராறுதான் சாமி. இன்னைக்கே உங் களைக் கண்டுக்கினு போயி அவளை இரண் டிலே ஒண்ணு பார்த் துப்பிடறதுன்னு தான் வந்தேன். நீங்க திரும் பவும் அவளை வேலைக்கு வைச்சுக்குவீங்கன்னு எதிர் பார்க்கலேங்க! மெய்யாதான்! என் னமோ மகா லட்சுமி மாதிரி நம்ப அம்மா புண்ணியம் கட்டிக் கிடுச்சி. இனிமே எதி ருக்கும் செஞ்சானுன்னு சொல்லு சாமி. அவ மென்னியை முறிச் சிட்டு மறு வேலை பார்க் கிறேன்'' என்று சொல்லி விட்டுப் பவ்யமாகக் கும்பிட்டு விட்டுப் போனான் சின்னியின் புருஷன்.

''அட பாவமே! இவன் வந்தது இதுக்கா? பெண்டாட்டியை ஏன் நிறுத்தி விட்டீங்கன்னு சண்டை போட அல்லவா வந்திருக்கான் என்று நினைத்தேன். முன்னமேயே தெரி யாமல் போய் விட்டதே!'' என்றாள் லலிதா. அவள் முகத்தில் அசடு வழிந்தது.

''உம்! ஒரு மாசம் அவனோட மல்லுக்கு நிற்கணும்னு உன் தலையிலே விதிச்சிருக்கே. அதைச் சொல்லு!'' என்றான் மூர்த்தி.

இதோ, இந்த ஆண்டின்

மிகப் பெரிய செய்தி

எல்.ஐ.சியின் 'உங்களுக்குச் சொந்த வீடு' திட்டம்



எல்.ஐ.சி, தன் பாலிசிதாரர்களுக்கு, நகரங்களில் வீடுகள் கட்டிக்கொள்ள கடன் வழங்குகின்றது. இத் திட்டத்தின் அம்சங்கள்:-

இது தாராளமானது— ஒரு பாலிசிதாரர் அவருடைய காப்புத் தொகையில் (SUM ASSURED) 90 சதவீதம் வரை கடனை உயர்த்திக்கொள்ளலாம். கடன்தொகையின் அதிக பட்சம் ரு. ஒரு இலட்சம். குறைந்த பட்சம் ரு.10,000

இது சிக்கனமானது— நியாயமான வட்டி வீதங்கள். குறித்த காலத்தில் பணம் திருப்பிச் செலுத்தப்பட்டால் தள்ளுபடி உண்டு.

இது வசதியானது—நீங்கள் வீட்டை உடனே சொந்தமாக்கிக் கொள்ளலாம். கடனை பல ஆண்டுகளில் திருப்பித் தரலாம்.

இது விரைவானது— கடன் விண்ணப்பங்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

இது இணையற்றது — கடன் முழுவதும் அடைபடுவதற்குள் பாலிசிதாரர் இறக்க நேர்ந்தால், அவருடைய ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் பாலிசி கடனை அடைத்து விடும். அவருடைய குடும்பம் கடன் தொல்லையின்றி சொந்த வீட்டில் வாழும்.

'உங்களுக்குச் சொந்த வீடு' திட்டம், குறிப்பாக வீடுகள் (பிளேட்டுகள் (FLATS) அல்ல) கட்டிக் கொள்வதற்கும், ஏற்கெனவேயுள்ள வீட்டை விரிவுபடுத்திக் கொள்வதற்கும், அண்மையில் கட்டி முடிக்கப்பட்டு நல்ல நிலைமையில் உள்ள வீடுகளை வாங்குவதற்கும் ஏற்றவகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

தொடக்கத்தில், 'உங்களுக்குச் சொந்த வீடு' திட்டம், (பெரும்) பம்பாய், நாக்பூர், பூனா, அகமதாபாத், பரோடா, சூரத், (பெரும்) கல்கத்தா, டெல்லி, அமிர்தசரஸ், சண்டிகார், பாட்னா, கான்பூர், லக்னோ, கௌஹாத்தி, கட்டாக், போபால், இந்தூர், ஜெய்ப்பூர், ஜம்மு, சென்னை, கோயம்புத்தூர், மதுரை, பெங்களூர், ஹைதராபாத், எர்ணாகுளம், திருவனந்தபுரம் ஆகிய நகரங்களிலும் அவற்றின் அங்கீகாரம்பெற்ற சுற்றுப் புறங்களிலும் செயல்படும். பின்னால், மேலும் பல நகரங்களுக்கு இத்திட்டம் விஸ்தரிக்கப்படலாம்.

முக்கியமானது: அருள்கூர்ந்து சம்பந்தப்பட்ட உள்ளூர் எல்.ஐ.சி அலுவலகத்தோடு நேரடியாகத் தொடர்பு கொள்ளுங்கள். உங்கள் விண்ணப்பம் சம்பந்தமாக வெளியார் உதவியை நாடுவதில் பணத்தை வீணாக்க வேண்டாம்.


லைப் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் ஆப் இந்தியா

ASP/LIC/H-15 TAM

அடிவானத்துக்கு மேல் கருமேகங்கள் ஒன்றுகலந்து சுற்றுப் புறத்தைப் பயங்கர இருளாக்கிக் கொண்டிருந்தன. சற்று நேரத்துக்கு முன் வான விதானத்தில், கண் சிமிட்டிக் கொண்டிருந்த விண்மீன்கள் இருட்போர்வையில் முகத்தை மறைத்துக் கொண்டன.

மகாராணி சித்திரலேகா தன் அந்தப்புரத்தில் சோகமே உருவாக அமர்ந்து கொண்டிருந்தாள். அவள் உள்ளத்தில் மேக மூட்டம் போல் சோகம் பரவி அலைகடலைப் போல் ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது. சந்தேகமும், பயமும் சேர்ந்து அவள் உள்ளத்தை நிம்மதியற்றதாகச் செய்து கொண்டிருந்தன. காரணம், இளவரசன் சந்திரகுப்தன் அவளைச் சந்திக்க வரவிருந்ததுதான்.

திடீரென்று அந்தப்புர வாயிலில் அசையாமல் தொங்கிக் கொண்டிருந்த திரை எவருடைய கை பட்டோ அசைந்தாடியது. இளவரசன் சந்திரகுப்தன் சாந்தமும், கம்பீரமும் துலங்க உள்ளே பிரவேசித்தான். ஆனால் அவன் முகம் கவலையோடு நிரம்பிக் காணப்பட்டது.



மகாராணி சித்திரலேகா நீர் நிறைந்த விழிகளுடன் முறுவலித்துக் கொண்டே எழுந்தாள். சந்திரகுப்தன் சிரம் தாழ்த்தி வணங்கினான். ஆனால் அதில் எவ்வித உணர்ச்சிப் பிரதிபலிப்பையும் காணோம். முகம் ஓரளவு கடுமையையே காட்டிக் கொண்டிருந்தது. அதரங்களில் மறைந்து விளையாடும் புன்சிரிப்பு இன்று மறைந்து கம்பீரமாக எதையோ கூறத் துடிப்பது போல் இருந்தது. இவற்றை மகாராணி கவனிக்கத் தவறவில்லை.

சாந்தம் நிறைந்த குரலில், "இளவரசே! ஏன் இந்தப் படபடப்பு?" என்று கேட்டாள் மகாராணி சித்திரலேகா.

சந்திரகுப்தன் வானத்தைச் சுட்டிக்காட்டி, "மகாராணி! வானம் ஏன் குமுறுகிறது?" என்று மாற்றுக் கேள்வி கேட்டான்.

மகாராணி கலங்கிய கண்களுடன் வானத்தை நோக்கினாள். கருமுகில்கள் சூழ்ந்து குமுறிக் கொண்டிருந்தன. கடகடவென்ற சத்தம் காதைத் துளைத்தது. அதன் எதிரொலி அவள் இதயப் பேழையிலும் எழுந்தது. ஆயினும் சித்திரலேகா மௌனமாக நின்று கொண்டிருந்தாள்.



எதிர்ப்பு

கௌடில்யன்

''இன்று நாட்டின் பேரில் ஆபத்து இப்படித்தான் கருமேகங்களைப் போலப் பரவிச் சூழ்ந்து கொண்டிருக்கிறது.'' கடுமையான குரலில் கூறினான் இளவரசன். ''இன்று விரோதி இப்படித்தான் கர்ஜித்துக்கொண்டிருக்கிறான். நீங்களோ, 'ஏன் இந்தக் குமுறல்?' என்று கேட்கிறீர்கள்.''

நீர் நிறையும் கண்களில் கண்ணீரைக் கட்டுப்படுத்திக் கண்களிலேயே புதைத்த மகாராணி பயம் கலந்த இதயத்துடன் நின்றாள். இவையெல்லாம் எதற்குப் பீடிகை? சந்திரகுப்தன் என்னதான் விரும்புகிறான்? இவை எல்லாவற்றையும் புரிந்துகொள்ள அவளுக்கு அதிக நேரம் ஆகவில்லை. நடுங்கும் குரலில் ''ஆனால் மகாராஜா பலவீனமானவராயிற்றே, இளவரசே!'' என்றாள்.

''நீங்கள் எதைப் பலவீனம் என்று கூறுகிறீர்களோ அதையே நான் கோழைத்தனம் என்று கூறுகிறேன் மகாராணி!'' என்றான் சந்திரகுப்தன்.

தாக்கப்பட்ட மகாராணியின் இதயத்தில் நீறு பூத்த நெருப்பைப் போல் கனன்றுகொண்டிருந்த சுய கௌரவம் வெடித்துப் புறப்பட்டது. அவள் கடுமையான குரலில், ''எதை நீங்கள் கோழைத்தனம் என்று கூறுகிறீர்களோ, அதை நான் மனித இதயத்தின் பலவீனம், இரக்கம் என்று கூறுகிறேன்'' என்றாள்.

''உண்மைதான் மகாராணி!'' சந்திரகுப்தன் உள்ளக் குமுறலுக்கு உருவம் கொடுத்தான். ''இருந்தபோதிலும் இருதய பலவீனத்தைக் காட்டுவதற்கு இது சமயமா?'' என்றான்.

''பலவீனமும், கழிவிரக்கமும் காலத்தை நோக்குவது கிடையாது, இளவரசே!''

புண்பட்ட இதயம் துடிக்கச் சித்திரலேகா மௌன வேதனையில் ஆழ்ந்து போனாள். இந்த அடியை அவளால் பொறுக்கவே முடியவில்லை. இருதயத்தில் மலர்ந்த தன்மானம் கருகிப் போய் விட்டது. கோபமும் சுய கௌரவமும் ஒன்றில் ஒன்று சிக்கிக் கொண்டன. சுய கௌரவம் கண்களில் கண்ணீராகி வழிந்தது. குரலில் செயலற்ற தன்மை தொனிக்க மொழிந்தாள்: ''கடைசியில் நீங்கள் என்னதான் விரும்புகிறீர்கள் இளவரசே!''

''சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு பிரஜையும் எதை விரும்புகிறதோ அதையேதான்.''

பேச்சடைத்துப் போனாள் மகாராணி. கண நேர மௌனத்துக்குப் பிறகு மறுபடியும் நடுங்கும் குரலில் பேசினாள். ''இளவரசே! அரசருக்குச் சண்டை என்றாலே...''

''பிடிக்காது!'' கேலிப் புன்முறுவல் மலர மொழிந்தான் சந்திரகுப்தன். மகாராணியின் மலரினும் மெல்லிய இருதயம் இந்த அதிர்ச்சியைத் தாங்க முடியவில்லை. கணவனைப் பற்றிய கௌரவக் குறைவான பேச்சைக் கேட்க எந்தப் பெண்ணுக்குத்தான் மனம் வரும்?

சந்திரகுப்தனோ தன் இருதயத்தைப் பாறையாக்கிக் கொண்டு மகாராணியின் முன் வந்திருக்கிறான். சகோதர பாசம், அண்ணியின் மரியாதை இவற்றையெல்லாம் தேசத்தின் நன்மைக்காகத் தியாகம்செய்துவிடும் நிலையில் இருந்தான் அவன்.

கனமான குரலில் மகாராணி பேசத் தொடங்கினாள். ''நல்லது இளவரசே! எப்பொழுது அவருக்கு யுத்தத்தில் பயமோ உயிரின்மேல் மோகமோ இருக்கும்வரை வெற்றித் திலகம் வைத்துக் கொள்வதற்குக்கூட உரிமையில்லை.''

''ஏன் உரிமையில்லை? அவருக்கும் பூரண உரிமை இருக்கிறது. ஆனாலும் நான் விரும்புவது மகாராஜாவும் யுத்தமுனைக்கு வரவேண்டும் என்பது. அவர் வந்து நின்றாலே சேனை வீரர்களுக்கு உற்சாகமும் தெம்பும் உடனே வந்துவிடும். மகாராஜாவைப் பார்த்ததும் அவர்களின் வீர உணர்ச்சி இரு மடங்கு பெருகிவிடும். அந்தச் சமயம் மகத சாம்ராஜ்யத்தின் ஒவ்வொரு வீரனும் ஆயிரக் கணக்கான எதிரிகளை வெட்டிச் சாய்ப்பான்....'' சந்திரகுப்தனின் முகத்தில் அபூர்வமான ஒளி பிரகாசித்தது.

கனத்த குரலில் ஒவ்வொரு வார்த்தையாக மொழிந்தாள் மகாராணி சித்திரலேகா: ''இளவரசே! மகாராஜா இளைப்பாறிக் கொண்டிருக்கிறார். அவர் எழுந்ததும் யுத்த களத்துக்குப் போக ஏற்பாடு செய்துவிடுகிறேன். நீங்கள் போகலாம்.''

சித்திரலேகா அசைந்து ஆடி வரும் பொற் சித்திரம் போன்று ராமகுப்தரின் படுக்கை அறையினுள் நுழைந்தாள்.

மகாராணி உள்ளே நுழைந்ததுமே நர்த்தகியின் நடனம் நின்று விட்டது. மகாராஜா சித்திரலேகாவின் முகத்தில் கணத்துக்குக் கணம் மாறும் உணர்ச்சிப் போராட்டங்களைக் கவனித்தவாறு மௌனம் சாதித்தார். இதயத்தில் குமுறும் பலவித எண்ணங்களுக்கு அணைகோலியவாறு மகாராணி பேசினாள்.

''ஆச்சரியப்பட வேண்டாம், மகாராஜா! இந்த விலைமதிப்பற்ற நேரம் ஆனந்தக் களியாட்டத்திற்கு அல்ல. சாம்ராஜ்யப் பாதுகாப்பின் மகத்தான பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது!''

மகாராணியின் குரலில் இதுவரை இவ்வளவு கடுமையை மன்னர் கண்டதில்லை.

''சித்திரா! என்ன சொல்கிறாய் நீ?'' கடமையின்றிக் கேட்டார் மௌரிய ராஜ்யாதிபதி.

''என்றைக்கோ சொல்ல வேண்டியதை இன்று சொல்கிறேன்— அரசே! இவ்வளவு நாட்கள் நீங்கள் கடமையினின்றும் விலகி இருக்கப் பார்த்துக்கொண்டிருந்தேன். இன்று என் உள்ளம் என்னை நகையாடுகிறது.''

ராமகுப்தர் கற்சிலை போல் அமர்ந்து கொண்டிருந்தார். சித்திரலேகா பேசிக் கொண்டே போனாள். ''சாம்ராஜ்யத்தில் நான் மட்டும் பெண் அல்லவே. என் மாங்கல்யம் மட்டும் காக்கப்பட்டால் போதுமா? ஆயிரக் கணக்கான பெண்கள் தங்கள் சகல சௌபாக்கியங்களையும் உங்கள் பாதத்தில் அர்ப்பணித்திருக்கிறார்களே! என்னுடைய சுகத்துக்காக எவ்வளவு பெண்களின் மங்கலச் சின்னங்களை நான் பறித்துக் கொண்டிருக்கிறேன்! நன்றி கெட்ட தன்மையின் இவ்வளவு கனமான சுமையை என்னால் சுமக்கவே முடியாது மகாராஜா!''

சுவரில் பதித்த சித்திரம் போல் அமர்ந்து கேட்டுக் கொண்டிருந்தார் மன்னர். அவர் கண்களிலிருந்து இதுவரை குடிகொண்டிருந்த சஞ்சலம் மறைந்து அந்த இடத்தில் கம்பீரம் குடிகொண்டது. ராஜ நர்த்தகியின் ரூப சௌந்தரியம் மன்னரின் கண்களுக்குக் காளி தேவியின் பயங்கர நர்த்தனத்தை நினைவு படுத்திற்று. அந்தப் பார்வையின் தீட்சண்யத்தை நர்த்தகியால் பொறுக்க முடியவில்லை. பாதச் சிலம்பு ஒலிக்கா வண்ணம் அடிமேல் அடிவைத்துப் பீதியுடன் அந்த இடத்தை விட்டு அகன்றுவிட்டாள்.

வியாகுலம் விழிகளில் படர மன்னர் அழைத்தார்: ''சித்ரா!''

''மகாராஜா!''

''நீ என்னை மோக மயக்கத்திலிருந்தும் விழிப்புற வைத்து விட்டாய். அந்தகாரத்தில் சிக்கியவனை, கடமைப் பாதையில் செல்ல வழிகோலி விட்டாய்!''

ராமகுப்தரின் கண்கள் ஒளி மின்னலைப் பிரகாசித்தது. முகத்தில் உத்சாகம் பொங்கித் ததும்பிக் கொண்டிருந்தது.

மறுநாள் மகத சாம்ராஜ்யாதிபதி முன்னின்று யுத்தம் நடத்தப் போகிறார் என்ற செய்தி காட்டுத் தீப் போலப் பரவிவிட்டது. படை வீரன் ஒவ்வொருவனிடமும் புதிய உற்சாகமும் மகிழ்ச்சியும் ஓடிவந்து சரண் புகுந்தன. பிரதம சேனாதிபதி சந்திரகுப்தன் ஒருமுறை படை வீரர்களின் பக்கம் கண்களைச் சுழலவிட்டான். ஒவ்வொரு வீரனையும் தனித் தனியாகப் பார்த்த மௌரியனின் உள்ளம் 'வெற்றி, வெற்றி' என்று கூவியது.

அஸ்திரதாரியாக வந்து நின்ற மகாராஜாவை ஒருமுறை மேலிருந்து கீழ் நோக்கினாள் மகாராணி சித்திரலேகா. இருவித உணர்ச்சிகளால் தாக்கப்பட்டுத் தடுமாறினாள். உற்சாகம் பயம் இரண்டும் உள்ளத்தில் போட்டி விட்டன. உள்ளத்தின் ஒரு மூலையில் என்னவோ ஓர் உருப் புரியாத வேதனை நிமிண்டிக் கொண்டிருந்தது. அவற்றையெல்லாம் அடி மனத்தில் ஆழப் புதைத்து விட்டு மன்னரை ஏறிட்டுப் பார்த்தவள் புன்னகை பூத்தாள். கண்களில் கண்ணீர்; கனி இதழில் புன்முறுவல்.

''சித்ரா!'' அன்பொழுக அழைத்தார் மாமன்னர்.

''ஸ்வாமி!'' நடுங்கும் குரலுடன் வெளிப்பட்டது சித்திரலேகாவின் குரல்.

''இது என்ன கலக்கம் சித்ரா! மகதப் பேரரசி கண் கலங்கலாமா? வெற்றியோடு திரும்பி வாருங்கள் என்று வாழ்த்தி விடை கொடு'' என்று பேசினார் ராமகுப்தர்.

அந்தப்புரச் சேடியர் இருவர் ஆரத்தி சுற்றினர். ஆரத்தித் தாம்பாளத்தை மகாராணியின் முன் கொண்டு வந்தனர். அவள் கைகள் நடுங்கின. தாம்பாளத்தில் பஞ்சு போன்ற மிருதுவான தன் விரலைத் தோய்த்துத் திலகம் வைத்தாள். அவள் நிலை கண்டு மன்னர் பச்சாத்தாபப்பட்டார்.

நீண்ட பெருமூச்சுடன் அந்தப்புரத்துக்குத் திரும்பினாள். சட்டென்று கால்கள் மிருதுவான பொருள் ஒன்றை ஸ்பரிசித்தன. வியப்புடன் குனிந்து பார்த்தாள் சித்திரலேகா. பூமியில் வெள்ளை வெளேர் என்று அரசர் கழுத்தில் சூடியிருந்த மாலை அறுந்து கிடந்தது. உள்ளமே உறைந்து போனது போல நடுங்கினாள் சித்திரலேகா. சிதறிய மலர்கள் அவளைப் பார்த்துச் சிரிப்பதுபோல இருந்தன. அவளின் ஆசைகளும் அபிலாஷைகளும் இப்படித்தான் சிதறிப்போகுமோ?

எதிரியை முறியடித்து வெற்றி வாகை சூடித் திரும்பிக்கொண்டிருந்தது மகத சாம்ராஜ்யத்தின் சைன்யம். ஆனால் வீரர்களின் முகத்தில் வெற்றிக்குரிய ஆனந்தமில்லை. அதற்குப் பதிலாக அந்த இடத்தில் ஆழ்ந்த சோகம்தான் இடம் பெற்றிருந்தது. பராக்கிரமம் பொருந்திய மகதத்தின் வீர சேனாதிபதி சந்திரகுப்தன் சாம்ராஜ்யத்தின் அதிகாரம் பெற்றும் அவனிடம் உற்சாகமில்லை. அளவுக்கதிகமாகத் துயரம்தான் அவனிடம் குடி கொண்டிருந்தது. கண்களில் வெற்றிக் களிப்புக்குப் பதிலாகச் சோகம் இடம் பிடித்துக் கொண்டது.

கனத்த இதயத்துடன் வந்துகொண்டிருந்தான் மௌரியன். மகாராணி சித்திரலேகாவின் முன் எந்த முகத்துடன் செல்வது?


உயர்தர
சானிடரி சாமான்கள்
தண்ணீர் க்ளோசெட்டுகள்
சிறுநீர் கழிக்கும் பாத்திரங்கள்
கை அலம்பும் பேசின்கள்
சிங்க்குகள் மற்றும் பல
நிர்ணய அளவுகளிலும்,
வடிவத்திலும் மற்றும் பலவித
கண்கவர் நிறங்களிலும் உண்டு
தயாரிக்குமிடம்:-
கவர்ன்மெண்ட் சிராமிக் செண்டர்
விருத்தாசலம்
(தென் ஆற்காடு ஜில்லா)
சென்னை சர்க்காரின் தொழில் வர்த்தக
நிர்வாகத்தின் ஒரு பகுதி
தென்னிந்தியாவுக்கு விற்பனை உரிமையாளர்கள்:-
ட்யூப் ஏஜென்ஸிஸ் (பி) லிமிடெட்
6, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

அன்று நடுங்கும் குரலுடன் மகாராணி வாதாடிய சொற்கள் இன்றும் அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டிருந்தன.

வலுக்கட்டாயமாக மன்னரைப் போர்க்களத்துக்கு இழுத்து வந்த பொறுப்பு முழுக்க முழுக்கச் சந்திரகுப்தனையே சாரும். கடைசியில் என்ன ஆயிற்று? ஆம். வீர சொர்க்கம் புகுந்து விட்டார் மன்னர் ராமகுப்தர்.

ஆஹா! அவர் வாள் எப்படி எப்படியெல்லாம் மின்னியது! எத்தனை பேரைப் பலி கொண்டது? ஒரு சமயம் காற்றாய்ப் பறந்து சாடினார். அடுத்த கணம் எரிமலையாக வெடித்துச் சீறினார். இவ்வளவு நாட்களாக அடங்கிக் கிடந்த வீரம் எப்படி உடைத்து ஊற்றெனப் பெருகிப் பாய்ந்தது! இன்று இந்தத் தோல்வியை — மன்னரைப் பலி கொடுத்த தோல்வியை — எடுத்துக் கொண்டு அந்தத் தேவியின் முன் எப்படிப் போய் நிற்பான்?

எதிரியை முறியடித்து வெற்றி வாகை சூடிய மகதப் பேரரசின் சேனை வீரர்கள் சோகமே உருவாகத் தலைநகரில் வந்து நுழைந்தனர். விஜய பேரிகை ஒலிக்கவில்லை. வீரர்களின் ஆரவாரங்கள் இல்லை. ஏன்? யானை, குதிரைகள் கூட அமைதியுடன் அடி எடுத்து மெல்ல வந்து கொண்டிருந்தன.

எல்லோருக்கும் பின்னால், குனிந்த தலையுடனும், கவலை தோய்ந்த முகத்துடனும் வந்துகொண்டிருந்தான் மன்னன் சந்திரகுப்த மௌரியன். மணி மகுடம் அவன் தலையில் பளிச்சிட்டது. அரண்மனையின் தலைவாயிலில் சர்வாலங்கார பூஷிதையாக மன்னரை வரவேற்க நின்றுகொண்டிருந்தாள் பேரரசி சித்திரலேகா. அவள் கையில் ஆரத்தி கரைத்த தங்கத் தாம்பாளம் அவள் மேனியுடன் போட்டியிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது.

வெண் புரவியினின்றும் பிரிந்த சோகத்துடன் இறங்கி அவள் முன் வந்து நின்றான் சந்திரகுப்தன். மன்னரின் முடிவைச் சொல்லத் தைரியமின்றிக் குனிந்தவாறு நின்றுகொண்டிருந்தான் மகத சிம்மன் சந்திரகுப்தன்.

''இளவரசே!'' நடுங்கும் குரலில் வினித்தாள் சித்திரலேகா. ''மகாராணி!'' மெல்லத் தலை நிமிர்ந்து பார்த்தான். மகாராணி இதயத்தைத் துளைப்பதுபோல் அவனைக் கூர்ந்து நோக்கினாள். சந்திரகுப்தனின் தலையில் மின்னிய ராஜ மகுடம் அவளுக்கு உண்மையை உணர்த்திவிட்டது. அகன்ற விழிகளுடன் அதையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த பார்வையின் கடுமையில் வெந்து கருகிப் போனான் மன்னன். நிற்க முடியாமல் தள்ளாடினான். அடுத்த கணம் கணீரென்று சத்தத்துடன் ஆரத்தித் தாம்பாளம் தரையில் விழுந்தது. சலனமற்றுக் கற்சிலை போல நின்றுகொண்டிருந்தாள் சித்திரலேகா. எவ்வளவு நேரம் மௌனத்தில் கரைந்ததோ அடுத்த கணம் அணை உடைந்தது. வெடித்துப் பொங்கும் விம்மலுடன் அந்தப்புரத்துக்கு ஓடிவிட்டாள் மகாராணி சித்திரலேகா.

என்னதான் மௌரிய சாம்ராஜ்யத்தின் மகாராணியாக இருந்தாலும் அவளும் பெண்தானே!

வெற்றி விழாவுக்கும் முடிசூட்டு விழாவுக்கும் ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. சந்திரகுப்தன் மந்திரியிடம் கூறினான். ''மகாராஜாவின் மரணத்தினால் எனக்கு மனமே சரியாக இல்லை. சொல்லமுடியாத துக்கம் என்னைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. முடிசூட்டு விழாவை எந்தவித ஆடம்பரத்துடனும் கொண்டாட வேண்டாம்.''

''மௌரியரே! வருத்தமும் துக்கமும் வேறு; நாட்டின் நியமம் வேறு. உங்கள் துக்கத்துக்காக நாட்டை இருளடிக்க வேண்டுமா? எங்களுக்கு மட்டும் மன்னரைப் பிரிந்த துக்கம் இல்லையா? கடமை என்று ஒன்று இருக்கிறது.'' இடைமறித்துப் பேசினார் மகா தேஜஸ்வியான சாணக்கியர்.

இதற்கு மேல் அவன் பேச என்ன இருக்கிறது? இரவு தர்பாரிலிருந்து தன் மாளிகைக்குத் திரும்பினான் சந்திர குப்தன். தன் சயனக் கிருஹத்தில் நுழைந்து ராஜ உடைகளைக் களைந்து கொண்டிருந்தான்.

பின்புறம் மெல்லிய அடியோசை கேட்டது. திடுக்கிட்டுத் திரும்பினான் மௌரியன். வெள்ளை வெளேரென்ற நந்தியாவர்த்த மலரைப் போன்று நின்று கொண்டிருந்தாள் சித்திரலேகா! உடம்பில் பொன்னாலான ஆபரணம் ஒன்று கூட இல்லை. கூந்தலில் மலர் இல்லை. நெற்றியில் திலகமில்லை.

''மகாராணி!'' தழுதழுத்த குரலில் அழைத்தான் சந்திரகுப்தன். ''மகாராஜா! என்னை மன்னியுங்கள். நான் அந்தச் சமயம் உங்களை வரவேற்க முடியவில்லை. அந்த அலங்காரத்துடன் உங்களை வரவேற்பதற்கு எனக்கு உரிமை இல்லை.'' மிக மெல்ல உதட்டை அசைத்துப் பேசினாள்.

நிலைகுலைந்துபோன மௌரிய மன்னன் தன்னையே கட்டுப்படுத்த இயலாதவன் போல ''மகாராணி! என் ஆவேசத்தில் உங்கள் மாங்கல்யத்தையே பலியிட்டுவிட்டேன்!'' என்று கூறியவன் அப்படியே அவள் முன்பு முழங்காலை மடித்து உட்கார்ந்தான். அவன் தன்முன் மண்டியிட்டுக் கண்ணீர் விடுவதைப் பார்த்துப் பதறிப்போன சித்திரலேகா, சிறிது பின் நோக்கி நகர்ந்தாள்.

''இது என்ன மன்னவா! மனத்தைத் தளர விடாதீர்கள்'' என்றாள். குற்றவாளியைப் போல் எழுந்து நின்றான் சந்திரகுப்தன்.

''நீங்கள்தாம் என் வழிகாட்டி. எனக்கும் ஒரு கடமை உண்டு என்பதை எடுத்துக் காட்டினீர்கள். சாம்ராஜ்யத்தின் அன்னியப் பெண்கள் தேசத்துக்காகத் தங்கள் சுகத்தைப் பலி கொடுக்கும்போது என் சுபாக்கியம் மட்டும் என்ன உயர்வா? நானும் அதையே தான் செய்திருக்கிறேன். வருகிறேன் மகாராஜா!'' என்றாள். அடுத்த கணம் ஆடாது அசையாது மெல்ல நகரும் சிலைபோல் போய்க் கொண்டிருந்தாள் சித்திரலேகா.

வானத்துச் சந்திரன் தன் பிரிய சகி ரோஹிணியுடன் சிரித்து நிலவைப் பொழிந்து கொண்டிருந்தான். ஆனால் பூமியில் நின்று கொண்டிருந்த சந்திரன் சோகமே உருவாகச் செயலற்று நின்று கொண்டிருந்தான்.

நிமிஷக் கதைகள்

ஒரு முறை ஸ்வாமி விவேகானந்தர் சில நண்பர்களுடன் உட்கார்ந்து தர்ம விஷயமாகச் சர்ச்சை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது ஜயப்பூரிலிருந்து பிரசித்திபெற்ற பண்டிதரான சூர்ய நாராயணன் அவர்களும் அங்கு வந்திருந்தார்கள். பேச்சுவாக்கில், ''நான் ஒரு வேதாந்தி. அவதார புருஷர்களின் விசேஷமான ஆத்ம சக்தியில் எனக்கு நம்பிக்கை கிடையாது. புராண அவதாரங்களைக் கூட நான் நம்புவதில்லை. நாம் எல்லோருமே பிரம்மம்; எப்போதுமே பிரம்மம் என்பதே என் தீர்மானமான அபிப்பிராயம். அப்படியிருக்கும்பொழுது எனக்கும் மற்ற அவதாரங்களுக்கும் என்ன வேற்றுமை இருக்க முடியும்?'' என்று கேட்டார் அவர்.

விவேகானந்தர் பதில் கூறினார்: ''தாங்கள் கூறுவது முற்றிலும் உண்மை. ஆனால் ஒன்று. ஹிந்துக்கள் மீன், பன்றி, ஆமை முதலிய அவதாரங்களை நம்புகிறார்கள். பிரும்மத்தையும் ஏனைய ஜீவராசிகளையும் ஒன்றாகக் கருதும் தாங்கள் இவற்றில் எதைத் தங்களுடைய அவதாரமாகக் கருதுகிறீர்கள்?'' என்று கேட்டார். கூடியிருந்தோரிடையே சிரிப்பொலி கலகலத்தது.

க் க் க்

பர்னார்ட் ஷா அமெரிக்கா போயிருந்தபொழுது ஒரு கூட்டத்தில் ஏதோ வேகத்தில் ''ஐம்பது சதவீத அமெரிக்கர்கள் அசடர்கள்!'' என்று கூறிவிட்டார்.

தன்மானத்தைத் தாக்குவதாயிருந்தால் யாருக்கும் ஆத்திரம் எழுவது இயல்புதானே? கூட்டத்தில் பெரும் கூச்சல் எழுந்தது. பர்னார்ட் ஷா சட்டென்று நிலைமையைச் சமாளிக்க, ''நான் வாக்கியத்தை முடிப்பதற்குள் கூச்சல் போட்டால் என்ன செய்வது? நான் சொல்ல வந்தது இது தான்: ஐம்பது சதவிகித அமெரிக்கர்கள் அசடர்கள் அல்ல'' என்று முடித்தார்.

தம்பிப் பயல் தொண்டை கிழிய அழவே சந்திராவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. தன் அம்மாவிடம், ''இந்தப் பாப்பா எங்கிருந்து வந்தது? இப்படி அழுது தொலைக்கிறதே!'' என்றாள்.

''ஆண்டவன் தந்த செல்வம் அம்மா! உன்னைப் போலத்தான் இதுவும் வந்தது!'' என்றாள் தாயார்.

''ஆண்டவனா? அவன் எங்கே இருக்கிறான்?'' என்று கேட்டாள் சந்திரா.

தாயார் வானத்தைக் காட்டினாள். சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்தாள் சந்திரா. ''இதன் அழுகையைப் பொறுக்கமுடியாமல் தான் அந்த ஆண்டவன் இங்கு அனுப்பி போயிருக்கிறது!'' என்றாள்.

க் க் க்

உன் குழந்தைகளை உன் குழந்தைகளாக மட்டும் எண்ணாதே. அவர்கள் உன் வீடு தேடி வருகிறார்கள். உன்



னோடு வாழ்கிறார்கள். ஆயினும் அவர்கள் உனது செல்வம் மட்டும் அல்ல. நீ உன் அன்பை அவர்களுக்குக் கொடு. ஆனால் உனது கற்பனைகளை அவர்களுக்குப் புகட்டாதே! ஏனெனில் அவர்களிடமும் அவர்களுக்கென்று கற்பனை உள்ளது. வேண்டுமானால் நீ அவர்களைப் போல் ஆக முயற்சி செய். ஆனால் அவர்களை உன்னைப் போல் ஆக்க மட்டும் பாடுபடாதே.

— கலீல் ஜிப்ரான்

க் க் க்

பேராசிரியர் (கோபத்துடன் ஒரு மாணவனைப் பார்த்து): நீயா இந்த வகுப்புக்கு ஆசிரியன்?

மாணவன் (பயந்து): இல்லை, சார்!

பேராசிரியர்: அப்போ மடத்தனமாகப் பேசாதே!

சவரக்காரர்: நம் கடைக்கு நீங்கள் முன்பே வந்திருக்கிறீர்களா?

வந்தவர்: இல்லை. இல்லை. இந்தக் காயம் பட்டது சென்ற போரில்.

க் க் க்

ஆங்கிலத்தில் பிரபல நாடகாசிரியர் என்று போற்றப்படும் ஷேக்ஸ்பியர் உண்மையில் தாமே நாடகங்கள் இயற்றினாரா அல்லது இன்னொருவர் எழுதியதைத் தம் பெயரில் வெளியிட்டுக் கொண்டாரா? — இது பற்றிப் பிரபல நகைச்சுவை எழுத்தாளரான மார்க்ட்வைனின் வீட்டில் பல நண்பர்கள் உட்கார்ந்து பலமாக விவாதித்துக் கொண்டிருந்தனர்.

வாதம் முடிவதாயில்லை. மார்க்ட்வைனுக்கோ அலுத்து விட்டது. விவாதத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க எண்ணி, ''நண்பர்களே! நான் சொர்க்கத்துக்குப் போனால், ஷேக்ஸ்பியரைக் கண்டு 'உங்களுக்கு நாடகங்கள் எழுதிக்கொடுத்தது யார்?' என்று கேட்டு எழுதுகிறேன்'' என்றார்.

''மார்க்ட்வைன் சார்! ஷேக்ஸ்பியர் சொர்க்கத்தில் தான் இருப்பார் என்று என்ன நிச்சயம்? அவர் நரகத்துக்கும் போயிருக்கலாம் அல்லவா?'' என்று கேட்டார் ஒரு நண்பர் குதர்க்கமாக.

''போயிருக்கலாம். அப்படி அவர் அங்கே இருந்தால் நீ விசாரித்து எழுதேன்!'' என்றார் இளநகையோடு மார்க்ட்வைன்!

க் க் க்

நோயாளி: செலவில்லாமல் இந்த உடம்பு பருக்க வழி சொல்லுங்களேன். நான் ரொம்ப ஏழை. சீக்கிரமாகவும் பருக்க வேண்டும்.


டாக்டர்: தேன்கூடு, தெரியுமா, தேன்கூடு! அதிலே ஒரு கல்லை விட்டெறி. அரை மணிக்குள்ளே பருத்து விடலாம்.



Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

மக்ளீன்ஸ்

உபயோகித்து
அந்த அதிகமான வெண்மையைப்
பாருங்கள்!



இவ்விதம் சோதியுங்கள்



1. உங்கள் நாக்கினால் பற்களைத் தடவுங்கள். அவற்றின் மேலுள்ள பாசியை உணர்கிறீர்களா?
2. இப்போது, மக்ளீன்ஸ் பற்பசைகொண்டு பற்களைத் தேயுங்கள். அது பற்களைச் சுத்தம் செய்து, வெண்மையாக்கிக் காப்பதுடன் உங்களுக்குப் புதுமையான உணர்ச்சியை அளிப்பதை உணர்வீர்கள்.
3. அந்த அதிகமான சுத்தத்தை உணருங்கள்... அந்த அதிகமான வெண்மையைப் பாருங்கள்.



மக்ளீன்ஸ் பழுப்பு நிறமடைந்த பற்களை வெண்மையாக்குகிறது!

Registered No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

